REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஒக்டோபர் 24 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN තිනකරන්
வரு. 90 இல. 251 | Monday 24, October, 2022 | 16 பக்கங்கள் | 40/-

வாசகர்களுக்கு இனிய தீபாவளி வாழ்த்துகள்



## நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்த்து செயற்பட வேண்டும்

**தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில்**



வண்ண மயமான கலாசார நிகழ்வான தீபாவளி நன்னாளில் வாழ்த்து தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞானம் பிறக்க வேண்டும் என்பதற்காக இந்துக்கள் இந்நன்னாளில் தங்களின் இல்லங்கள், கோயில்கள் என அனைத்து இடங்களிலும் தீபம் ஏற்றி, தீபத்திருநாளைக் கொண்டாடுகின்றனர். ஒளியால் மட்டுமே இருளை 06

## தீமையை எதிர்ப்போம் நன்மையை விதைப்போம்

**பிரதமர் தினேஷ் தீபாவளி வாழ்த்து**



தீமை என்னும் இருளை அகற்றி நன்மை என்னும் ஒளியை சமூகத்தில் பரப்புவதை மையப் பொருளாகக் கொண்டு, உலகம் முழுவதும் வாழ் இந்துக்கள் தீபங்களை ஏற்றி, எங்கும் ஒளி பரப்பி, தீபாவளிப் பண்டிகையை இன்று கொண்டாடுகின்றனர். அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது இனிய தீபாவளி வாழ்த்துகளை 06

## மீண்டெழும் நம்பிக்கையுடன் தீபாவளியை கொண்டாடுவோம்

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாழ்த்து**



பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள சூழலிலும் மீண்டெழும் நம்பிக்கையுடன் தீபாவளித் திருநாளை கொண்டாடும் அனைவருக்கும் அன்பு கலந்த வாழ்த்துகள் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது,

வளர்ந்து வரும் சிறிய நாடாகிய எமது தாய் நாட்டின் பொருளாதார பின்னடைவு, 06

## ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை;

# சீரற்ற காலநிலை 28வரை தொடரும்



ஆறுகள் கங்கைகளை அண்டிய பிரதேச மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

இன்றும் 100 மி. மீற்றர் மழை பெய்யலாம்

**நாட்டின் சில பகுதிகளில் நேற்று 279.5 மி.மீற்றர் மழைவீழ்ச்சி**

**இயற்கை அனர்த்தங்களில் இதுவரை ஆறுபேர் பலி; 1298 குடும்பங்கள் பாதிப்பு, 390 வீடுகள் சேதம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலை எதிர்வரும் 28ஆம் திகதி வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் மெரில் மெண்டிஸ் தெரிவித்தார்.

நாட்டின் சில பகுதிகளில் நேற்று 279.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி இடம் பெற்றுள்ளதுடன் இன்றும் சில மாவட்டங்களில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான மழைவீழ்ச்சி இடம்பெறுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடும் காற்று, மின்னல் தாக்கம், மண் சரிவு அபாயத்திற்கு இடமுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், வடக்கு 06

## ஒளிமயமான நாட்டுக்கு தீபாவளியில் பிரார்த்திப்போம்

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து**



வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக தீபாவளிப் பண்டிகை உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படுகின்ற இன்றைய நாளில் இலங்கை வாழ் அனைத்து இந்துக்களுக்கும் தனது இனிய தீபாவளி வாழ்த்துச் செய்தியை தெரிவித்துக் கொள்வதாக எதிர்க்கட்சித்தலைவர் 06

**பெருந்தோட்ட மக்களின்**

## அபிலாஷைகள் நிறைவேற்றப்படும்



இருள் நீங்கி ஒளியை பிரகாசிக்கச் செய்த இந்த தீபாவளித் திருநாளை நாம் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்.

பெருந்தோட்ட மக்கள் எதிர்பார்க்கும் அனைத்து வரப்பிரசாதங்களும் அபிலாஷைகளும், நிறைவேற்றப்படும் என்ற பெரிதான நம்பிக்கை எமக்குண்டு என இலங்கை தொழிலாளர் 06

**ஜனாதிபதியின் பொது மன்னிப்பு அடிப்படையில்**

## தீபாவளியை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுதலை



இந்துக்களின் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நல்லெண்ண செயற்பாடாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் தண்டனை அனுபவித்து வரும் 06

**மாணவர்களை உடல், மன உளைச்சலுக்கு உள்ளாக்கும்**

## பகிடிவதைகளை தடுப்பது தொடர்பில் விசேட கவனம்

**ரோயல் கல்லூரி மாணவர் சந்திப்பில் ஜனாதிபதி**

விரிவான செய்தி மூன்றாம் பக்கத்தில்



## 22வது திருத்தம் நிறைவேற்றத்துடன் ஆணைக்குழுக்களின் காலம் நிறைவு

**இரண்டு வாரங்களுக்குள் புதிய உறுப்பினர்கள் நியமனம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



22வது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டதோடு தற்போது நடைமுறையில் உள்ள சுயாதீன ஆணைக் குழுக்களின் உத்தியோகபூர்வ காலம் நிறைவு பெறுவதாக நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதேவேளை, புதிதாக சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான உறுப்பினர்களை 06


## புலமைப்பரிசில் பரீட்சை நடைமுறையில் திருத்தம்

**இந்த வருடம் முதல் அமுலாக்க தீர்மானம்**

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான நடைமுறையை இந்த வருடம் முதல் திருத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதன்படி பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை வினாத்தாளின் இரண்டாம் பாகம் முதலில் வழங்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் 06

## தீபாவளி தினத்தை முன்னிட்டு இன்று மின்வெட்டு கிடையாது

**அமைச்சர் டக்ளஸின் கோரிக்கைக்கு பலன்**



தீபாவளி தினத்தன்று நாடளாவிய ரீதியில் எவ்வித தடங்கலுமின்றி முழுமையாக மின்சார விநியோகத்தினை வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற மின் வெட்டை இன்று 06

**சாகோஸ் தீவிலிருந்து புகலிடம்;**

## இலங்கையரை நாடு கடத்த UK தீர்மானம்



சாகோஸ் தீவுகளில் இருந்து புகலிடம் கோரி வரும் இலங்கை அகதிகள், அவர்கள் தானாக முன்வந்து இலங்கைக்குத் திரும்பாவிட்டால், அவர்களை பாதுகாப்பான மூன்றாவது நாட்டிற்கு அனுப்ப பிரித்தானியா தீர்மானித்துள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கைக்கு திருப்பி 06

**ஈஸ்டர் தாக்குதல் விசாரணை;**

## வெளிநாட்டு உதவி அவசியமற்றதொன்று

**பேராயர் மெல்கம் ரஞ்சித் தெரிவிப்பு**



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டு விசாரணைகள் அவசியமில்லை என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகளுக்கு 06



கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக

**அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 43 பேர் கைது** 03



**சகலரையும் நெகிழ வைத்த ஆசிரியை ஒருவரது செயல்** 03

ஸ்ரீ ராகுல மகா வித்தியாலயத்தில் சம்பவம்



**மின்சார சபை மறுசீரமைப்பு அறிக்கை ஜனாதிபதிக்கு** 03

அமைச்சரவைக்கும் சமர்ப்பிக்கப்படும்

**அமெரிக்கா வழங்கியுள்ள ஆழ்கடல் ஆய்வுக் கப்பல்:**

## விரைவில் கொழும்பை வந்தடையும்

**கடற்படையினர் தெரிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியுள்ள ஆழ்கடல் ஆய்வுக் கப்பல் ஓரிரு வாரங்களில் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்காவின் சியடெல் துறைமுகத்திலிருந்து பயணத்தை 06

## பருப்பு, சீனி விலைகள் குறைவடைந்துள்ளது

**இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு**



கொழும்பு – புறக்கோட்டை மொத்த சந்தையில் பருப்பு மற்றும் சீனி என்பனவற்றின் விலைகள் குறைவடைந்துள்ளன. இதற்கமைய, கடந்த வாரம் 400 ரூபாயாக இருந்த ஒரு கிலோ 06

## கடந்த 15 நாட்களில் 20,000 சுற்றுலா பயணிகள்

**சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**



இந்த மாதத்தின் முதல் 15 நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகையில், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. 20 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் 06

**தொழில்நுட்ப முறையை பயன்படுத்தி**

## பஸ்களில் புதிய முறையில் பற்றுச்சீட்டு



பஸ்களில் புதிய தொழிநுட்பத்தின் ஊடாக பயணச்சீட்டுகளை விநியோகிப்பதற்கான முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். 06

## குறைந்த நிறையுடன் பாண் விற்பனை

**70 கடைகளுக்கு எதிராக நடவடிக்கை**



குறைந்த நிறையை கொண்ட பாண் விற்பனை செய்த சுமார் 70 விற்பனை நிலையங்களை நேற்று முன்தினம் (22) நுகர்வோர் விவகார அதிகார சபையினர் முற்றுகையிட்டுள்ளனர்.

இவ்வாறு குறைந்த நிறையைக் கொண்ட பாண்களை விற்பனை 06

# கிழக்கின் குரல்



## கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிப்பு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர வீதிகளில் கவனிப்பாரின்றி நடமாடிய 22 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு,அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாடுகளை பராமரிக்கத்தவறியமை, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை போன்ற குற்றச் சாட்டுக்களுக்காக 22 மாடுகளின் 09 உரிமையாளர்களிடமிருந்து மொத்தம் 74 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக அக்கரைப்பற்று மாநாகர சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல். எம்.ஹாசிம் தெரிவித்தார்.இவர்களுக்கு எதிராக அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது. இதன்போதே, இவர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்தது.

# வளங்களின் நியாயமான பங்கீட்டுக்கு ஆணைக்குழு நியமிக்கப்படல் அவசியம்

(ராஜகிரிய குறூப் நிருபர்)

நாட்டிலுள்ள வளங்கள் சகல சமூகங்களுக்கும் முறையாகப் பங்கிடப்படுவதை உறுதிசெய்வதற்கு வளப்பங்கீட்டு ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என,தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ,எல்,எம் அதாஉல்லா தெரிவித்துள்ளார். அரசியலமைப்பின் 22 ஆவது திருத்த விவாதத்தில் பங்கேற்று பேசிய போதே,பாராளுமன்ற உறுப்பினர் அதாஉல்லா இதனை தெரிவித்தார். பாராளுமன்றத்தில் கடந்த (21) உரையாற்றிய அவர் கூறியதாவது; ஜே,ஆர்,ஜெயவர்தனவின் அரசியலமைப்பை 22 ஆவது தடவையாக திருத்துகிறோம்.இனியும் இந்த யாப்பில் திருத்தம் செய்யக் கூடாது. அடுத்த வருடம் 23 ஆவது திருத்தமென எதுவும் வரவும் கூடாது. திருத்தங்களைக் கோரி,மக்கள் எங்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பவில்லை.அபிலாஷைகளுடன் வாழவைக்கும் அரசியலமைப்பையே மக்கள் வேண்டுகின்றனர். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாராளுமன்றம் இணங்கிக் கொண்டதாலேயே,எமது கட்சி 22ஆவது திருத்தத்தை ஆதரிக் கிறது.இந்தத் திருத்தங்களால் மட்டும் முறையான அரசியலமைப்பை கொண்டு வர முடியாது.மக்களை வாழ வைக்கும் புதிய அரசியலமைப்பே நமக்கு அவசியம்.



அதிகாரம் மற்றும் வளப்பங்கீடுகளாலே முரண்பாடுகள் தோன்றி, மோதல்கள் வெடிக்கின்றன.இவ்வாறான மோதல்கள்,பல தரத்தாரையும் பாதித்திருக்கிறது. சிறுபான்மையினருக்கு மாகாண சபைகளாலும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.எனவே வளப்பங்கீடுகளும் (காணி,தொழில்வாய்ப்பு,பிரதிநிதித்துவம்) சகல சமூ கங்களுக்கும் நியாயமாகப் பங்கிடப்பட வேண்டும்.இந்தப் பங்கீடுகளை உறுதிப்படுத்த வளப்பங்கீடு ஆணைக்குழு அமைக்கப்படல் அவசியம். ஆணைக்குழுக்கள் சுதந்திரமாக இயங்கும் சூழலில்,இந்த ஆணைக்குழுவும் அவசியம் உருவாக்கப்பட வேண்டும்.அரசியலமைப்பு சபையில் சகல இனத்தவர்களுக்கும் பிரதிநிதித் துவம் அவசியம். இதற்கான பிரேர ணையை தேசிய காங்கிரஸ் முன்மொழிகிறது.பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை தலைமைகளும் இதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அதாஉல்லா எம்,பி உரையாற்றினார்.



பாடசாலைகளில் சுற்று சூழலை தூய்மையாக வைத்திருத்தல், திண்மக் கழிவுமுகாமைத்துவத்தை முறையாக நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்காக, அறுகம்பே 'கிளீன் ஸ்ரீ லங்கா' அமைப்பினர் பாடசாலைகளுக்கு குப்பைதொட்டிகளை வழங்கி வருகின்றனர். இதற்கமைய,பொத்துவில் அல்கலாம் மகாவித்தியாலயத்திற்கும் ஒரு தொகுதி குப்பைத் தொட்டிகள் வங்கப்பட்டுள்ளன. அமைப்பின் தலைவர் எ.முசம்மில், செயலாளர் எச்.எம் இமாம் ஆகியோருட.ன் சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய அதிகாரிகள் இணைந்து,இதை வழங்குவதைக் காணலாம். (படம்:அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



திருகோணமலை பாலையூற்றூ சீரடி நாக சாயி ஆலயத்தில், சீரடி சாயி வெண்பளிங்கு திருவுருவச் சிலை அண்மையில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. கொழும்பு புதுச் செட்டித் தெரு சீரடி சாய் ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் திருவுருவச்சிலைகளுக்கு பாலாபிஷேகம் செய்து வைத்தார்.இதன்போது, திருமலை பாலையூற்றூ சீரடி நாக சாயி ஆலய ஆதீனகர்த்தா வரலக்ஷ்மி அம்மையாருக்கு, ஞாபகார்த்த முத்திரைச் சின்னமும் வழங்கப்பட்டது. அருகில் கோபால் ஜீவரட்னம், அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன், ஆலய ஆதீனகர்த்தா வரலக்ஷ்மி அம்மையார் ஆகியோரையும் காணலாம்.

# குச்சவெளி பிரதேசத்தை பாதுகாக்க அனைவரும் இணையவேண்டும்

## தவிசாளர் முபாறக் வேண்டுகோள்!

பருவமழையால் பாதிக்கப்படும் புல்மோட்டை அறபாத்நகர், முதலாம் வட்டாரம், நான்காம் வட்டாரம் மற்றும் இக்பால் நகர் போன்ற பகுதிகளிலுள்ள மக்களை பாதுகாக்க சகலரும் முன்வர வேண்டுமென,குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவக் கூட்டத்திலே,அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கலாசார மண்டபத்தில் (21) இடம்பெற்ற இக்கூட்டத்தில்,தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாட்டில் பெய்துவரும் பருவ மழை காரணமாக பல பாகங்களிலும் எமது மக்கள் பெரிதும் அவலங்களை எதிர்கொள்கின்றனர். வெள்ளத்திலிருந்து எமது மக்களை பாதுகாக்க முன்னேற்பாடுகள் செய்வது அவசியம்.

இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாமே எடுக்க வேண்டும்.

இதன் ஆரம்ப கட்டமாக பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியன இணைந்து ஒரு குழுவை நியமித்து ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் என்றும் தவிசாளர் சுட்டிக்காட்டினார்.

வடிகால்கள் துப்பரவு செய்தல், மழை நீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் சிரமதானப் பணிகளை முன்னெடுத்தல், புல்மோட்டை கொக்குளாய் முகத்துவாரம் ஊடாக முல்லைத்தீவுக்கு இயங்கும் படகுச் சேவையை மிகுந்த அவதானத்துடன் இயக்குதல்,கடலுக்குச் செல்லும் மீனவர்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல், உள்ளிட்ட விடயங்களை காலதாமதமின்றி செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தொற்றா நோய்களுக்கான இரத்தப்பரிசோதனை


(பாலமுனை தினகரன் நிருபர்)

தொற்றா நோய்களுக்கான இரத்தப் பரிசோதனைகள் நேற்று முன் தினம் (22) கோணாவத்தையில் மேற்கொள்ளப்பட்டன.அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ.அனுசரணையுடன், அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் பி.எஸ்.எஸ்.பி.திட்டத்தின் மூலம் இச்சயெற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் நிரந்தர அங்கத்துவ உறுப்பினர் எம்.ஐ.உதுமாலெப்பை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இச்செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது 35 வயதிற்கு மேற்பட்டோருக்கு,இருதய,சிறுநீரக,சீனி வியாதி போன்ற நோய்களுக்கான இலவச இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.இதன்போது,சுமார் 2600 பேருக்கு இலவசமாக இரத்தப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

# ஏக குரலாக ஒலிப்பதிலுள்ள சமூக சாதகங்களை நிரூபித்தவர் அஷ்ரஃப்




சிறுபான்மை சமூகங்களை அரசியலில் விழிப்புணர்வூட்டிய தலைமைகள்,இன்றளவும் நினைவூட்டப்படுவதற்கு காரணங்கள் உள்ளன. அவர்களது இடைவெளிகளால் ஏற்பட்டுள்ள பலவீனங்களிலிருந்துதான் இந்நினைவுகள் எழுவதுண்டு.நேற்றும் (23) இது போன்ற ஒரு தலைவரின் ஜனனம் நினைவுகூரப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் எம்,எச்,எம், அஷ்ரஃப் (1948,10,23) இப்படி இறப்பார் என எவரும் நினைக்கவில்லை.அதாவது,அரசியல் நோக்குகளுக்காக அவர் கொல்லப்படுவார் என்பதை,அவரது வளர்ச்சியே கட்டியங்கூறியது.இளமையில் துளிர்விடத் துவங்கிய அஷ்ரஃபின் இலக்கியம்,சட்டம்,சமரசம் மற்றும் சமயோசித சிந்தனைகள் அவரை தலைவருக்குத் தகுதியானவராக அடையாளம் காட்டியது.அதே போன்று,அஷ்ரஃபின் அந்திம கால அரசியல் செயற்பாடுகளிலும் ஆளுமை அசையாதேயிருந்தது.ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்படும் வாக்குகள், எவரது தனிப்பட்ட செல்வாக்குகளுக்கும் உட்பட்டதல்ல என்பதை அவரது ஆளுமைகள் நிரூபித்திருந்தன."கருத்து பேதமெனும் கறையான்கள் மரத்தின் வேர்களை வேரறுக்கக் கூடாது"என அடிக்கடி முழங்கியவர் அஷ்ரஃப்.எனினும், அவரது கடைசி காலத்தில் இவ்வாறான கருத்து பேதங்களால் கட்சியின் வேர்களே, விறகுகளாகத் தொடங்கின. இவர்கள் உடனடியாக கட்சியிலிருந்து வெளியேற உத்தரவு பிறப்பித்த அஷ்ரஃப், அவ்வாறு வெளியேறி, வேறு கட்சியில் போட்டியிட்டோரை தோற்கடித்தும் காட்டியிருந்தார்.

இவ்வாறான நாளில்தான், முஸ்லிம் தலைமைகள் தங்களை புடம்போட வேண்டும்.

கட்டுக்கோப்புக்கள் மீறப்படுவதும்,சட்ட நடவடிக்கைக்கு சூளுரைப்பதும் பின்னர், சமரசம் அல்லது மன்னிப்பு என்று இயலாமைக்குள் ஒளிந்துகொள்வதுமே தனித்துவ அரசியலை மலினமாக்கியுள்ளது. முஸ்லிம்களின் ஏக குரலாக ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைத் தவிர எதுவும் இருப்பதை அஷ்ஃப் விரும்பவில்லை.இது, ஏகபோக உரிமைக்கான ஆசை அல்லது அதிகாரங்களை தனியே உறுஞ்சிக் கொள்ளும் அற்பத்தனம் என,எதிரிகளால் விமர்சிக்கப்பட் டது.ஆனால்,அஷ்ரஃபுக்குள் இருந்தது வேறு. வேகமாகப் பயணிக்கும் வாகனத்துக்கு சாலைகள் ஒரு பொருட்டில்லை.போய்ச் சேரும் இடமே பொறுப்பு எனப் பயணித்தார். அவரது காலத்தில்,நமது நாட்டிலிருந்த அரசியல் பயணங்கள் அப்படித்தானிருந்தன. தமிழர்களை சிங்களத்திலும்,சிங்களவர்களை தமிழிலும், ஏன்?முஸ்லிம்களை இரண்டு மொழிகளிலும் ஏமாற்றிய அரசியல் சூழலது. எனவே,முஸ்லிம்களை கரைசேர்க்க அல்லது கரையேற்ற பல ஓடங்களைவிட,ஒற்றைத் தோணியே பாதுகாப்பானது எனக்கருதினார். இதற்காக ,தனது ஆளுமையை அடிக்கடி நிரூபித்தவர் அஷ்ரஃப்.இந்த ஆளுமைகள் அவரது இளவயதிலும் எடுத்தாளப்பட்டன.இது, பிறப்பிடத்திலிருந்து அஷ்ரஃபை புலம்பெயர வைத்தது.இந்த நாட்டில் முதலாவதாக "ஹிஜ்ரத்" (புலம்பெயர்தல்) செய்தவராக தன்னையே அடையாளம் காட்டியது அவரது பேச்சுப் புலமை.

வடக்கில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் விடயத்தை சர்வதேசளவில் அஷ்ரஃப் சந்தைப்படுத்தவில்லை. வடக்கை, விடுவதா? கிழக்குடன் கை கோர்க்க கோருவதா? இதில்,அஷ்ரஃபின் நிலைப்பாடு, இனப்பிரச்சினை தீர்வில் மூன்றாம் தேசியம் கோருவது, என்பவற்றை தேர்தலுக்காக அஷ்ரஃப் பேசவில்லை. இதுபற்றி அவர் பேசினாலும்,பேசாதிருந்தாலும் தேசிய அரசியலில் பேசுபொருளாக்கியவர்.சமூகத்தின் ஏக சக்தியாக இருந்ததால்,இவை, சாதனைகளாகின.

இன்று,எல்லாம் பேச்சாகவே உள்ளன. பேசுபொருளாக எவையும் இல்லை. ஓடங்களில் ஏறிக் கொண்ட ஒரே குடும்பம், அலைக் கழிவது போல.தேசியளவில் முக்கியம் பெறும் அரசியலமைப்பின் திருத்தங்களிலும் ஒன்றுக்கொன்று முரண்படும் நிலையில்,நமக்கு பாதை ஏது? பயணம் எங்குள்ளது.இனி,எதையும் சாதிக்க தேவையில்லை,செய்யவாவது முஸ்லிம் தலைமைகள் துணிய வேண்டும்.வடக்குப் புலப்பெயர்வுக்கு விடிவு,கிழக்கில் தனியலகு இன்னும் தெற்கில் தெளிவான அரசியலுக்கு நமது தலைமைகள் தயாராகுமா? சகோதர சமூக அரசியலில் அஷ்ரஃப் செலுத்திய ஆழப்பார்வைதான்,சொந்த அரசியலுக்கு அடித்தளமிட்டது. இதை எண்ணியாவது , இன்றைய கள அரசியலில் ஆழம் செலுத்தி அடுத்த நகர்வுக்காக தயாராக மக்கள் தயார், தலைமைகள் தயார்தானா?எதிரே வரவுள்ள அரசியல் களங்கள் கடும் கூர்மையாகவே இருக்கும். எனவே,நேர்மையாக நடந்து இந்தக் கூர்மையைக் கடக்க வேண்டும். அரசியலில், நிரந்தர எதிரியுமில்லை, நண்பருமில்லை என்பது நிரூபணமாகியுள்ள சூழலிது. இச்சூழலை வெல்வதற்கு, அஷ்ரஃபின் ஆளுமையை அடியொற்றுவதே சிறப்பானது.



வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

.08.2000ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி வருடம் 1421 ஜமாதுல் அவ்வல் பிறை 12
THINAKARAN VAARAMANJARI, SUNDAY AUGUST 13, 2000

தலைமைத்துவத்துடனோ, கொள்கைகளுடனோ முரண்படும்

**மு.காங். எம்பிக்கள் பதவியை உடன் இராஜினாமா செய்யட்டும்**

அஷ்ரப் அறிவிப்பு
(எம். சுஜப்)

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்துடனோ காள்கைகளுடனோ வேறுபாடுகளை அல்லது முரண்பாடுகளைக் காண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடைசி நேரம் வரை ராளுமன்றக் கதிரைகளில் ஒட்டியிருக்காது இப்போதே ராஜினாமாச் செய்து கொள்ளட்டும் என்று மு.கா. தலைவர் மைச்சர் அஷ்ரப் தினகரனுக்குத் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தைப் பற்றி ட்சிக்குள்ளேயிருந்து விமர்சிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை டுக்க எப்போதும் தயங்கியதில்லை. நேர்மையும் நெஞ்சில் உரமும் ருக்கின்றவர்கள் கட்சிக்குத் துரோகம் இழைக்கக் கூடாது. குறுகிய தர்தல் நோக்கங்களைக் கொண்டவர்களுக்கு கட்சியில் எப்போதும் டம் இருந்ததில்லை. அவர்கள் தூக்கியெறியப்பட்டதே வரலாறு. டைசி நாள் வரை பாராளுமன்றக் கதிரைகளில் ஒட்டியிருக்க னைப்பவர்கள் கோழைகளே என்றும் அமைச்சர் அஷ்ரப் கூறினார்.

மு.கா.யின் வரலாற்றை இவர்கள் ஒரு புறம் நினைத்துப் ர்க்க வேண்டும். மாகாண சபையில் அங்கம் வகித்த கட்சிப் ரமுகர்கள் அந்த சபை கலைக்கப்பட்ட பின்னர் கட்சியிலிருந்து வெளியேறினார்கள். எனினும் அதன் பின்னர் நடைபெற்ற தர்தல்களில் மக்களால் தூக்கி வீசப்பட்டனர். சமூகத்தில் ர்த்தியையும் கௌரவத்தையும் இழந்தனர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது அவசர அவசரமாக ஐ.தே.க. க்கு மாறிய எம்.பி. ஒருவரின் கதை என்னவாயிற்று ட்சியை விட்டு வெளியேறிய உயர்பீட உறுப்பினர்களின் கதி பற்றி வர்கள் நினைத்துப் பார்க்கட்டும். இவர்களது எதிர்காலம் சழிப்பாகியதா?

சுஜப் எம், காசிம்




தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 24 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN



**தொழுகை நேரம்**

23 முதல் 31 வரை
சுபஹ் - 04.41
லுஹர் - 11.56
அஸர் - 03.17
மஃரிப் - 05.23
இஷா - 07.04

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஐப்பசி 7
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சதுர்த்தசி

22 வது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றத்தோடு

## இரட்டை பிரஜாவுரிமையைக் கொண்ட 10 எம்.பிக்களின் பதவி இரத்தாகும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

22வது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டதோடு இரட்டைப் பிரஜாவுரிமைகளையுடைய 10 பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவி இரத்தாகும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டதோடு பாராளுமன்றத்தில் இரட்டைப் பிரஜா வுரிமையைக் கொண்ட எவரும் உறுப்பினர்களாக பதவி வகிக்க முடியாது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே வேளை, அவ்வாறு இரட்டடைப்பிரஜா வுரிமையைக் கொண்டவர்கள் தமது பதவியை தாமே ராஜினாமா செய்வது சிறந்தது என எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகிக்கும் சிலருக்கும் இது அதற்கான வாய்ப்பாக உள்ளதாகவும் அவர்கள் அது பற்றி சிந்திக்க வேண்டிய காலமிது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்களை உடல், மன உளைச்சலுக்கு உள்ளாக்கும்

# பகிடிவதைகளை தடுப்பது தொடர்பில் விசேட கவனம்

**ரோயல் கல்லூரி மாணவர் சந்திப்பில் ஜனாதிபதி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பல்கலைக்கழகக் கட்டமைப்பில் நிலவும் கால தாமதம் தவிர்க்கப்பட்டு மாணவர்கள், குறித்த காலத்திற்குள் கல்வியை நிறைவு செய்வதற்கான வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.




கொழும்பு றோயல் கல்லூரியின் மாணவர் தலைவர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். றோயல் கல்லூரியின் சிரேஷ்ட மாணவர் தலைவர் 06

தங்க விலையின் அதிகரிப்பின் எதிரொலி;

## சட்டவிரோத தங்க கடத்தல் அதிகரிப்பு

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்தப்படும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் இது போன்று 8 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த கடத்தல் தொடர்பில் இந்திய பிரஜைகள் மற்றும் இலங்கையர்களும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தங்கத்தின் விலை அதிகரிப்பை கருத்திற் கொண்டு கடத்தல் அதிகரித்துள்ளதாக மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சில கடத்தல்காரர்கள் இலங்கையை பரிமாற்ற ஊடகமாக பயன்படுத்தும் நிலைமை உள்ளதாக சுங்க திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக

## அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 43 பேர் கைது



சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்காக உனவட்டுன பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த 43 பேர் கடற்படையினரின் உதவியுடன் நேற்று (23) அதிகாலை கைது செய்யப்பட்டதாக ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த 43 பேரும் யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்கள் எனவும், அவர்களில் 33 ஆண்கள் 7 பெண்கள் மற்றும் மூன்று குழந்தைகள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஒரு மாத காலமாக வெவ்வேறு இடங்களில் தங்கியிருந்த இக்குழுவினர் ஐந்து நாட்கள் சுற்றுலா செல்வதாக கூறி, நேற்று வவுனியாவில் இருந்து காலி உனவட்டுன வரை பஸ்ஸில் 06

## மாற்றங்களை எதிர்பார்க்கும் நிலையிலேயே நாட்டு மக்கள்

மறுசீரமைப்பு எனும் பெயரில் 22 ஏமாற்றும் முயற்சி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டு மக்கள் மாற்றங்களை எதிர்பார்க்கும் நிலையில் மறுசீரமைப்பு என்ற பெயரில் 22ஆவது அரசியலமைப்பு திருத்தத்தைக் கொண்டு வந்து மக்களை ஏமாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பி எம்.ஏ.சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

22 ஆவது அரசியலமைப்பு 06

## சகலரையும் நெகிழ வைத்த ஆசிரியை ஒருவரது செயல்

ஸ்ரீ ராகுல மகா வித்தியாலயத்தில் சம்பவம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் மாணவர்கள் காலை நேர உணவைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நெருக்கடியான காரணங்களினால் மாணவர்கள் மயங்கி விழும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அது குறித்து இலங்கை கல்வியமைச்சு கரிசனை கொண்டுள்ளது. இந்நிலையில் பாடசாலைகளில் உணவு 06



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகிற்கு ஓர் முன்னுதாரணம்

ருஹுணு பல்கலைக்கழக உபவேந்தர் புகழாரம்

ஒரு ஜனநாயக தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 22வது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றியதன் மூலம், உலகிற்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாக செயல்பட்டுள்ளதாக ருஹுணு பல்கலைக்கழகத்தின் வேந்தர் கலாநிதி வணக்கத்திற்குரிய அக்குரெட்டியே நந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சேதவத்த, வேரகொட புராதன விகாரையின் கட்டின புண்ணிய நிகழ்வு சனிக்கிழமை (22) காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றியபோதே நந்த தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்க, ஜனாதிபதி மேற்கொண்டிருக்கும் செயல்பாடானது நிச்சயமாக நாட்டின் அபிவிருத்திக்கு வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விகாரையின் தலைவர் வணக்கத்திற்குரிய அம்பன்வெல ஞானலோக தேரரின் ஆலோசனைக்கு அமைய வருடாந்த கட்டின புண்ணிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கட்டின புண்ணிய நிகழ்வில் கலந்துகொண்டதுடன், பிக்குகளுக்கு அன்னதானமும் வழங்கினார். அங்கு கலாநிதி,வண. அக்குரெட்டியே நந்த தேரர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனநாயக உலகின் மிகச் சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அறியப்படுகிறார். இன்று உலக நாடுகள் அனைத்தும் நம் நாட்டையே உற்று நோக்குகின்றன.

ஜனாதிபதி தனது அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு மாற்றும் மாபெரும் செயற்பாடு ஜனநாயக கட்டமைப்பிற்குள் 06

## 21 லட்சம் ரூபாவை கொள்ளையடித்த இருவர் பொலிசாரினால் கைது

வாகனங்களுடன் வாள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளதாக பொலிசார் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வங்கி ஒன்றில் வைப்பிலிடுவதற்காக கொண்டு செல்லப்பட்ட 21 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துள்ள கும்பலில் இருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவருடன் கொள்ளைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சிறிய ரக வாள், உளவு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டி , மோட்டார் சைக்கிள் மற்றும் வாள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளதாகவும் கல்கிஸ்ஸை வலய குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இருவரையும் கல்கிசை மற்றும் 06




## மின்சார சபை மறுசீரமைப்பு அறிக்கை ஜனாதிபதிக்கு



அமைச்சரவைக்கும் சமர்ப்பிக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கையை விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமைச்சரவைக்கும் சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அந்த யோசனை உள்ளடங்கிய பிரேரணையை அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் நேற்று தெரிவிக்கையில்: மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் பரிந்துரைகளை முன் வைப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு அதன் அறிக்கையை என்னிடம் கையளித்துள்ளது.

அந்த வகையில் அந்த அறிக்கையை வெகு விரைவில் ஜனாதிபதிக்கு கையளிப்பதுடன், அதனையடுத்து அமைச்சரவைக்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் அதனை நவம்பர் முதல் பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக கடந்த ஆகஸ்ட் 5ஆம் திகதி குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவில் எட்டுப்பேர் உள்ளடங்குகின்றனர்.

அந்தக் குழுவினர் கடந்த சில மாதங்களாக கூடி சம்பந்தப்பட்ட அறிக்கையை தயாரித்ததுடன் கடந்த செப்டம்பர் 8ஆம் திகதி பாராளுமன்ற கட்டிடத்தில் முன்னால் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



வெள்ளம் காரணமாக காலி மாவட்டத்தின் பல பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன. நேற்று பெய்த கடும் மழை காரணமாக காலி மொரகொட பகுதி வீதியொன்று நீரில் மூழ்கியுள்ளதை படத்தில் காணலாம். (படம்: சம்ஸ் பாஹிம்)

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 07ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 27




## நாட்டில் சுபிட்சம் தோன்ற தீபாவளி வழிவகுக்கட்டும்!

உலகெங்கும் வாழ்கின்ற இந்துக்கள் தீபத்திருநாளாம் தீபாவளிப் பண்டிகையை இன்று கொண்டாடுகின்றனர். உலகில் தமிழர்களுக்கு மாத்திரமன்றி இந்துமதத்தைச் சேர்ந்த இனமக்கள் அனைவருக்குமே பொதுவான பண்டிகையாக தீபாவளி விளங்குகின்றது.

தீபம் என்பது சுடரையும், ஆவளி என்பது வரிசையையும் குறிக்கின்றது. தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து இறைவனை நினைத்து வணங்கும் பண்டிகையாக தீபாவளியைக் கருதலாம். அதேசமயம் தீபாவளிப் பண்டிகையானது இந்துக்கள் மத்தியில் எவ்வாறு வந்ததென்பதற்கான பலவிதமான நம்பிக்கைகள் பரம்பரை பரம்பரையாக நிலவி வருகின்றன.

எனினும் தீபத்திருநாள் கொண்டாடும் வழக்கம் இந்துக்கள் மத்தியில் எக்காலத்தில் தோற்றம் பெற்றது என்பதற்கான சரியான ஆதாரங்கள் இதுவரை கிடையாது. தீபாவளிப் பண்டிகையானது காலத்தைக் கணிப்பிட முடியாதபடி மிகவும் தொன்மையானதென்பது மாத்திரம் தெளிவாகத் தெரிகின்றது. எனவே இந்துசமயத்தின் தோற்றம் காலம் கணிப்பிட முடியாதபடி ஆதியும் அந்தமும் இல்லாதது போன்று, அம்மதத்தின் வழிவந்த பண்டிகைககளும் அவ்வாறே அமைந்துள்ளன.

தீமை என்ற இருளை அழித்து ஒளியை உலகுக்குக் கொண்டு வருகின்ற இந்துப் பண்டிகையே தீபாவளி என்பதே பொதுவான நம்பிக்கையும் கருத்துமாகும். அதேபோன்று நாம் வாழ்கின்ற சமூகத்திலும் துன்பங்கள் அகன்று அமைதியும் நிம்மதியும் நிலைபெற வேண்டுமென்று இன்றைய தினத்தில் நாமெல்லாம் நம்பிக்கை கொண்டு பிரார்த்தனை புரிவதே சிறந்ததாகும்.

உலகிலேயே அழகியதொரு தேசமாக இலங்கை போற்றப்படுகின்றது. சிறியதொரு தீவினுள் ஏராளமான இயற்கை வளங்களும் வனப்புகளும் நிறைந்த அழகிய தேசமாகத் திகழ்கின்றது இலங்கை. பெரும் நிலப்பரப்புக் கொண்ட பிறநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்களே எமது நாட்டின் அழகையும் வனப்பையும் புகழ்ந்து விட்டுச் செல்வதை நாம் அறிவோம். அந்த வகையில் இலங்கை மக்கள் அதிர்ஷ்டம் மிக்கவர்களாவர்.

இயற்கை வளங்கள் நிறைந்த அழகியதொரு தேசத்தில் வாழ்கின்றோம் என்பதற்காக நாம் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும். ஆனாலும் அந்தத் தேத்தில் நல்லிணக்கமும் ஐக்கியமும் நீண்ட காலமாக நிலவவில்லை. நிலையான ஐக்கியத்தை இன்னுமே காண முடியாதிருக்கின்றது. இனங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தாமல் நாட்டில் அபிவிருத்தியையும் அமைதியையும் காண முடியாது.

இனங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக நீண்ட காலமாக அரசியல் தரப்புகளாலும், சமூக அமைப்புகளாலும் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், அம்முயற்சிகள் இன்னுமே கைகூடவில்லை. எனவே எமது தேசத்தின் முன்னேற்றமும் தாமதமடைந்து கொண்டே செல்கின்றது.

மூன்று தசாப்த கால யுத்தத்தை எமது நாடு சந்தித்து வந்திருக்கின்றது. அந்த உள்நாட்டுப் போர் காரணமாக எமது தேசம் பல்லாயிரம் உயிர்களைப் பறிகொடுத்திருக்கின்றது. மதிப்பிட முடியாத உடைமைகளை நாம் இழந்திருக்கின்றோம். முப்பது வருட காலமாக எமது மக்கள் நிம்மதியைத் தொலைத்திருக்கின்றனர். நாட்டின் அபிவிருத்தியும் பின்தங்கிப் போயுள்ளது.

கொடூர யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பது உண்மையாக உள்ள போதிலும், யுத்தம் உருவாகக் காரணமாக அடிப்படைப் பிரச்சினைக்கு இன்னுமே தீர்வு காணப்படவில்லை.
அதற்கான தீர்வைக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அரசியல்வாதிகள் தங்களது சொந்த நலனுக்காக குழப்பியடித்திருக்கின்றார்கள். அத்தகையோருக்கு நாட்டு நலனைப் பார்க்கிலும் தங்களது அரசியல் ஆதாயங்களே அவசியமாகின்றன.

பல்லின மக்கள் வாழ்கின்ற நாட்டில் மொழியையோ மதத்தையோ முன்னிலைப்படுத்துவதால் ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி விட முடியாது. தமது மதம் மாத்திரமே உலகில் தனித்துவமானதென எவரும் கூறுவரேயானால் அந்நாட்டில் மதநல்லிணக்கம் ஏற்பட்டு விடப் போவதில்லை.

அதேபோன்றுதான் மொழியும் ஆகும். இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் பேசுகின்ற மொழி சிங்களம் என்பதற்காக அம்மொழிக்கு மாத்திரம் அரசியல்வாதிகள் சிலர் முன்னிலை அளிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. பல்லின மக்களின் மொழி, மதம் ஆகியவற்றின் இணைந்த கலவையாகவே இலங்கைத் தேசம் மிளிர முடியும்.

இவ்வாறான ஐக்கியமொன்றைத் தோற்றுவிப்பதற்காக எமது அரசியல்வாதிகள் மாத்திரமன்றி எமது சமூகத்திலுள்ள முக்கியஸ்தர்கள் அனைவருமே இதயசுத்தியுடன் உழைத்திருப்பார்களானால் நாம் என்றோ ஒருநாள் நிரந்தர ஐக்கியத்தைக் கண்டிருப்போம். ஆனால்அவ்வாறு நிகழவில்லை.

ஐக்கியம் கைகூடாமல் போனதற்காக பெரும்பான்மை தரப்பினரை மாத்திரம் குற்றம் சுமத்திவிட முடியாது. சிறுபான்மைத் தரப்பிலும் ஏராளமான தவறுகள் உள்ளன. சிறுபான்மையின அரசியல்வாதிகள் தங்களது இனம், மதம் என்ற வட்டத்தினுள் நின்றவாறு முடிவுகளை மேற்கொள்வதனாலேயே ஐக்கியம் கைகூடாமல் போயுள்ளது.

இன்றைய தீபாவளித் திருநாளன்று நாட்டின் இன நல்லிணக்கத்துக்காக அனைத்து இனமக்களும் திட சங்கற்பம் பூணுதல் வேண்டும். நாட்டின் நிரந்தர விமோசனத்துக்கு அதுவே வழியாகும். தீபாவளித் திருநாள் அனைத்து மக்களுக்கும் சுபிட்சத்தைத் தர வேண்டுமென்று இன்றைய நாளில் தினகரன் வாழ்த்துகின்றது.

editor.tkn@lakehouse.lk

# தெளிவத்தை ஜோசப் என்னும் தமிழ் இலக்கிய பெரும் சுடர்

பிரதேசங்கள், நாடுகள் என்ற எல்லையைத்தாண்டி தமிழின் ஈடிணையற்ற எழுத்தாளராக அங்கீகாரம் பெற்ற தெளிவத்தை ஜோசப் அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய வானில் கருந்திரையைப் போர்த்தியிருக்கிறது. தெளிவத்தை என்ற தோட்டத்துப் பெயரைத் தன் பெயரோடு இணைத்து, தமிழ் இலக்கிய உலகில் அவர் அடைந்த வெற்றிச் சாதனைக்காக மலையகம் பெருமிதம் கொள்கிறது.

மலையக மக்களது வாழ்வின் துயர்க் கோலங்களை, சுரண்டலின் அகோரத்தை, அவலப்பட்டுப் போன சமூகக்கூட்டத்தின் கதையை அழியாத கல்வெட்டாய் தமிழ் இலக்கிய உலகில் பொறித்து வைத்துவிட்டுப் போன பெருமகன் தெளிவத்தை ஜோசப்பிற்காக இன்று தமிழ் இலக்கிய உலகம் கண்ணீர் சிந்தி நிற்கிறது. மலையக இலக்கியம் என்ற பச்சை மண்ணில் தெளிவத்தை ஜோசப்பின் தசைநார்கள் நெய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அது சரியாய் இருக்கும்.



ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்து இலக்கிய உலகின் தனி சாம்ராட்டாக உலாவந்த இலக்கியத்தலைமகன் இன்றில்லை எனும் செய்தி நம் நெஞ்சில் துயர அலைகளை எழுப்பி நிற்கிறது. தமிழ் இலக்கியப்பரப்பில் ஒரு தமிழ்ச் சமூகம் எந்த அளவு துயரங்களை, அடிமைவாழ்வின் கூறுகளைக் கொண்டியங்கியது என்பதை ஜோசப் அவர்களைப் போல கலாநேர்த்தியுடன் சித்திரித்த பெரும் எழுத்தாளன் யாருமில்லை.

மனித ஜீவிகளாகவே கருதப்படாத ஒரு சனக்கூட்டத்தின் தீனக்குரலை தீவிர மூர்ச்சனையோடு எழுத்தியக்கத்தில் பதிவு செய்த பெரும் இலக்கிய மேதை அவர். மலையக சமுதாயத்தின் நிதர்சனத்தை, அதன் வெம்மையின் தவிப்பை, சிறுமையின் இழிவை, சுரண்டலின் சூக்குமத்தை, இனவாதத்தின் நச்சுக் கொடுக்குகளை, உணர்வுகளின் இடத்தை தந்திரமும் வக்கிரமும் அபகரித்து விட்ட அவலத்தை தனது கதைகளிலே அவர் மீட்டியிருக்கிறார்.

சிறுமை கண்டு பொங்கிய கலகக்காரனின் எழுத்துகளாக அவரது கதைகள் சிறப்புப் பெறுகின்றன. மனிதன் சிறுமைப்படுத்தப்பட்ட கொடுமையை அவரைப்போல எழுத்திலே சித்திரித்தவர்கள் யாருமில்லை. அவர் எழுதிய மொத்தம் அறுபத்து நான்கு கதைகளில் எங்கள் கைவசமிருந்த 56 கதைகளைத் தொகுத்து பெருந்தொகுதியாக ஒரு நூலை அவரின் கைகளில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற பேராவலில் நானும் எச்.எச்.விக்ரமசிங்கவும் பெரும் முயற்சிகள் மேற்கொண்டிருந்தோம்.

அச்சிலிருந்த கதைகளை அவரே மொய்ப்புப் பார்த்து கொண்டிருந்த நேரத்தில் இந்தத் துயரம் கவிந்தது பெருஞ் சோதனை. அவர் ஏறத்தாழ தொலைந்து போனதாகவே கருதியிருந்த 'காட்டுப்பூ' என்ற சிறுகதையை எனது சேகரத்திலிருந்து கடைசியாகச் சேர்த்து அச்சேற்றி அனுப்பியபோது அக்கதையை ஆர்வத்தோடு வாசித்துக் கொண்டிருந்த நிலையில் அப்பெருமகன் இறுதி மூச்சை விட்டிருக்கிறார் என்று அவரது இனிய மகள் சியாமளா சொன்னபோது நான் நெஞ்சிழந்தேன்.

அவரது கதைகள் அனைத்தையும் தொகுத்து ஒரு நூலாக அந்த இலக்கியத் தலைமகனின் கரங்களில் சேர்த்துவிட வேண்டும் என்ற என் கனவு நனவாவதற்கிடையில் அவர் தலை சரிந்து போன செய்தி என் நெஞ்சில் துயரக்கனலை மூட்டியது. இறுதிவரை என்னுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தவர், தனது பெருந் தொகுதிக்காக தனது முன்னுரையை உற்சாகமாக எழுதிக் கொண்டிருந்தவர் அந்த நூலைப் பார்க்காமலே கண்களை மூடிக்கொண்டு விட்டார் என்பதை ஏற்றுக்கொள்ள என் மனம் மறுக்கிறது.

அவரே தனது கதை ஒன்றில் தலைப்பிட்டதுபோல், அதற்குள் 'பழம் விழுந்து விட்டது.' சென்னையில் இந்நூலைப் பதிப்பிப்பதில் அயராது உழைத்த ஒளி வண்ணன், ஜோசப்பின் மறைவு கேட்டு அதிர்ந்து போனார். அவரது நூலை வெளிக்கொணர்வதுதான் நாம் அவருக்குச் செய்யும் கடமை என்று எழுதியிருக்கிறார்.

அவரின் முழுக்கதைகளையும் தொகுத்துப் படிக்கின்ற போது , அந்த மனிதரின் நெஞ்சமெல்லாம் மலையக மக்கள் நிறைந்துபோய்க் கிடந்திருக்கிறார்கள் என்பதைப் பூரணமாக உணரமுடிகிறது. அந்த அவல வாழ்வின் மீது அவர் கொண்டிருந்த ரௌத்திரம் தெரிகிறது. சிறுமை கண்டு பொங்கும் அவரது சீற்றம் தெரிகிறது. மனிதன் அற்பஜீவியாக வாழும் சிறுமை அவரது நெஞ்சிலே தணல் மூட்டியிருக்கிறது என்பதை அறிய முடிகிறது. தனது கதை மாந்தர்களுக்காக தனது படைப்புகளை அவர் சமர்ப்பணம் செய்திருப்பதன் அர்த்தம் புரிகிறது.

'எங்கே தேயிலைச் செடிகள் விளைகின்றதோ, அந்த இடம் மலைமுகடாக இருந்தாலென்ன, சமவெளியாக இருந்தாலென்ன அந்த இடம் பெரும் புனிதம் பெறுகிறது' என்று 12 ஆம் நூற்றாண்டு ஜப்பானிய வாசகம் கூறுகின்றது.

ஜோசப்பின் எழுத்தால் மலையக இலக்கியமும் புனிதம் பெற்றது!

மலையகம் இருக்கும்வரை உங்கள் எழுத்து வாழும், பெருமகனே!

கண்ணீரோடு என் அஞ்சலி.

மு.நித்தியானந்தன்
லண்டன்

# உலகின் முன்னணி நிறுவனமொன்றின் முக்கிய பதவியில் புலம்பெயர் தமிழர்

புலம்பெயர் தமிழரும் டென்மார்க் நாட்டின் இளம் பொருளியல் நிபுணருமான அலன் தருமன், 35 நாடுகளில் இயங்கிவரும் உலகின் முன்னணி பொறியியல், கட்டடக்கலை நிறுவனமான ரம்போல் நிறுவனத்தின் குழு பொருளியல் வியூக இயக்குனராக ரம்போல் குழுமத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

டென்மார்க் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பல்வேறு பங்களிப்பை நல்கிவரும் அலன் தருமன், அந்நாட்டு அரசாங்கத்தினதும், பல்வேறு உயர் பொருளாதார நிறுவனங்களினதும் ஆலோசகராக பணியாற்றி வருகிறார். பொருளியலிலும் அரசியல் விஞ்ஞானத்திலும் சிறப்பு முதுமாணி கற்கையை கொப்பன்ஹகன் பல்கலைக்கழகத்தில் அவர் பெற்றுள்ளார்.



பிரான்ஸ் இன்ஸ்சியாட் பல்கலைக்கழகத்தில் பொருளியல் மூலோபாய கற்கையையும், கொப்பன்ஹகன் பிசினஸ் இனஸ்சிருசனிலும் கற்கைளை அவர் நிறைவு செய்துள்ளார். அலனின் மதிநுட்பமான பொருளியல் அறிவை டெனிஸ் அரசாங்கம் சிறந்த முறையில் பயன்படுத்தி வருவது தமிழருக்கு கிடைத்த மிகப்பெரும் கௌரவமாகும்.

ஜி.இ.ஓ.பொருளாதார நிறுவனத்தின் தாபகர், என்.என்.ஐ.ரி.நிறுவனத்தின் வியாபார, மூலோபாய இயக்குனர், இம்பிளி மென்ற கவுன்சில் பொருளியல் கட்டமைப்பு ஆலோசகர் என பல துறைகளில் பணியாற்றிவரும் அலன் தருமன், புலம்பெயர் தமிழரும் டெனிஸ் இலக்கியத்தை தமிழுக்கு கொண்டு வந்தவருமான தருமன் தர்மகுலசிங்கத்தின் புதல்வராவார்.

சர்வதேச ரீதியில் பொறியியல், கட்டடக்கலையில் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமாகவும் ஆலோசனை நிறுவனமாகவும் இயங்கி வரும் ரம்போல் நிறுவனம் 1945 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டில் நிறுவப்பட்டது. 35 நாடுகளுக்கு தன்னுடைய சேவையை விஸ்தரித்துள்ள ரம்போல் நிறுவனம், இலட்சக்கணக்கானவர்களுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்கி வரும் ஒரு உலகளாவிய முன்னணி நிறுவனமாக திகழ்கிறது.

அத்துடன் 17000 வல்லுநர்கள் ரம்பொலின் செயல்பாட்டு மையத்தில் பணிபுரிவதுடன், கட்டடங்கள், போக்குவரத்து, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம், நீர், மேலாண்மை ஆலோசனை மற்றும் கட்டடக்கலை மற்றும் நிலப்பரப்பு தொடர்பான விடயங்களுக்கு தீர்வுகளை வழங்குகின்றது.

மேலும்,உலகளாவிய காலநிலை இலக்குகளுக்கு முகம்கொடுக்கும் வகையில் பரிஸ் உடன்படிக்கையுடன் இணைந்து தங்களுடைய சேவையை முன்னெடுக்கும் ஒரு நிறுவனமாகவும் திகழ்கிறது.

# தமிழ்நாடு மணிவாசகர் பதிப்பகத்தின் மகத்தான பெரும் தமிழ்ப் பணிகள்

மணிவாசகர் பதிப்பகம் 1960 ஆம் ஆண்டு பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் அவர்களால் சிதம்பரத்தில் தொடங்கப்பட்டது. கடந்த 60 ஆண்டுகளில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் பல்துறை நூல்களையும் வெளியிட்டு தமிழ் நூல் பதிப்பு உலகில் தனக்கென தனி இடத்தை உறுதி செய்துள்ளது.

சங்க இலக்கியம், அகராதி வரிசை, களஞ்சியம் வரிசை, தமிழியக்க நூல் வரிசை, கோயில் வரிசை, சிற்றிலக்கிய வரிசை, திருக்குறள் வரிசை, நாட்டுப்புற இயல் வரிசை, இலக்கண நூல் வரிசை போன்ற நூல்களை வெளியிட்டுள்ளது.





தமிழக அரசின் எழுபத்தைந்து பரிசுகளையும் சாகித்ய அகடமி வழங்கிய இரண்டு பரிசுகளையும் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் வழங்கிய நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகளையும் பெற்ற பெருமைக்குரியது. செம்மொழி நிறுவனத்தின் விருது பெற்ற எட்டு தமிழறிஞர்களில் ஆறு தமிழறிஞர்களின் நூல்களை வெளியிட்ட சிறப்புடையது மணிவாசகர் பதிப்பகம்.

தமிழகப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் மணிவாசகர் பதிப்பகத்தின் நூல்கள் பல்வேறு துறைகளில் பாடநூலாக இடம்பெற்றுள்ளன. கடந்த 2011 ஆம் ஆண்டு மணிவாசகர் பதிப்பகம் பொன்விழாவில் ஐம்பது நூல்களை வெளியிட்டமை பெருமைக்குரியது. கடந்த ஆண்டு நடைபெற்ற (2021) மணிவிழாவில் அறுபது நூல்களை வெளியிட்டு தமிழுக்கு மகுடம் இட்டு சிறப்பித்தது.

அறிஞர் சுப்பிரமணியன் அவர்களது எண்பதாவது பிறந்த நாளில் எண்பத்தொரு நூல்களை பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் வெளியிடச் செய்து சாதனை புரிந்தது. இவ்வளவு சிறப்புடைய மணிவாசகர் பதிப்பகத்தின் தற்போது பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் அவர்களின் மகன் ச. மெ. மீனாட்சி சோமசுந்தரம் தம் தந்தை வழியில் தொலைநோக்குடன் எதிர்காலத்தில் தமிழ் மொழியில் எல்லா நூல்களும் வெளியிடும் திட்டத்துடன் முனைப்புடன் செயலாற்றி வருகின்றார். மேலாளர் இராம குருமூர்த்தி தற்போது சிறப்பாக நிர்வாகித்து வருகிறார்.

எச். எச். விக்கிரமசிங்க





# இன்பம்தரும் இனிய தீபாவளி

# தீபாவளியை ஏன் கொண்டாடுகிறோம்?

இந்துக்களை தவிற பிற மதத்தவரும் வெவ்வேறு காரணங்களுக்காக தீபாவளி பண்டிகை கொண்டாடுகின்றனர். வட இந்தியாவில் ஹிந்து புத்தாண்டாக தீபாவளி கொண்டாடப்படுகிறது.

பதினான்கு ஆண்டுகள் வனவாசத்தை முடித்த இராமன், இராவணனை வதம் செய்து மனைவி சீதை மற்றும் தம்பி லட்சுமணனுடன் அயோத்திக்கு திரும்பிய நாளை தீபாவளி பண்டிகையாக நாடு முழுவதும் கொண்டாடுகின்றனர். தீபாவளி கொண்டாட வேறு பல காரணங்களும் சொல்லப்படுகின்றன. நரகாசுரனை கண்ணன் வதம் செய்த நாளாகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. அதிகாலை எழுந்து தலையில் நல்லெண்ணெய் தேய்த்து குளித்து, வீடு முழுவதும் தீபங்கள் ஏற்றி, பட்டாசு வெடித்து தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

தீபாவளி என்பது சமஸ்கிருத சொல்லாகும். சமஸ்கிருதத்தில் "தீபம்" என்றால் விளக்கு, "ஆவளி" என்றால் வரிசை என பொருட்படும். எனவே, தீபாவளி என்பது வரிசையாக விளக்குகள் ஏற்றி வைத்து கொண்டாடும் பண்டிகையாகும். வாழ்வில் இருளைப் போக்கி ஒளிமயமாக்குவதே தீபாவளியன்று விளக்குகள் ஏற்றி வைக்கக் காரணமாகும். உயிர்களின் மூலமான சூரியனின் ஆற்றலை பிரதிபலிக்கும் விதத்தில் விளக்குகள் ஏற்றி வைக்கப்படுவதாக ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்கந்த புராணத்தின் படி, சக்தியை சிவபெருமான் தமது சரிபாதியாகக் கொண்டு அர்த்தநாரீஸ்வரர் அவதாரம் எடுத்ததை போற்றும் விதமாக தீபாவளி கொண்டாடப்படுகிறது.

வட இந்தியாவில் ஹிந்து புத்தாண்டாக தீபாவளி கொண்டாடப்படுகிறது. தீபாவளி மகாலட்சுமிக்கு பிரசித்தி பெற்ற தினமாகும். சுத்தமான வீட்டிற்குள் லட்சுமி வருவாள் என்ற நம்பிக்கையால் தீபாவளிக்கு முன்னதாக வீடுகளை சுத்தம் செய்து செல்வத்தை வழங்கும் மகாலட்சுமியை வரவேற்கிறோம். வணிகர்கள் இந்நாளில் விநாயகரை வணங்கி புதுக்கணக்கு தொடங்குவர். ஒடிசா மாநிலத்தில் தீபாவளியன்று இறந்த முன்னோர்களை வழிபடும் பழக்கம் உள்ளது. மேற்கு வங்கத்தில் தீபாவளி முன்னிட்டு காளி பூஜை நடத்தப்படும்.

இந்தியா தவிற இந்திய வம்சாவளியினர் வாழும் நாடுகள், முற்காலத்தில் இந்திய மன்னர்கள் ஆட்சி செய்த நாடுகள் ஆகியவற்றிலும் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், கனடா, ஐக்கிய அரபு அமீரகம், இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மொரீஷியஸ், தென் ஆப்பிரிக்கா, தாய்லாந்து, மியான்மர், கயானா, மேற்கிந்தியத்தீவுகள், பிஜி உள்ளிட்ட நாடுகளிலும் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்துக்களை தவிற பிற மதத்தவரும் வெவ்வேறு காரணங்களுக்காக தீபாவளி பண்டிகை கொண்டாடுகின்றனர். சமண மதக் கடவுள் மகாவீரர் இந்த நாளில் தான் நிர்வாணம் எனப்படும் மோட்சத்தை அடைந்ததாக நம்பப்படுகிறது. இதனால் மகாவீரரின் நினைவாக சமணர்கள் தீபாவளி பண்டிகை கொண்டாடுகின்றனர். இதே போல, சீக்கியர்களும் திபாவளி பண்டிகையை 'பண்தி சோர் திவாஸ்' என்ற பெயரில் கொண்டாடுகின்றனர். சீக்கியர்களின் ஆறாவது குருவான ஹர்கோபிந்த், முகலாய மன்னர் ஜஹாங்கீரின் சிறைப்பிடியில் இருந்து தப்பிய நாள் இதுவாகும். மேலும், இதே நாளில் தான் அமிர்தசரஸ் பொற்கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.



# வாழ்வில் ஒளியேற்றும் தீபாவளி பண்டிகை

அனைத்து மதத்தினரையும் ஈர்க்கும் ஒரே பண்டிகை தீபாவளிதான். இந்த பண்டிகை அக்பர் காலத்திலேயே இந்து மதத்தினர் கொண்டாடி இருக்கிறார்கள். அப்போது அவர்கள் இந்த பண்டிகையை கொண்டாட எந்தவித தடையும் கிடையாது. அந்த பண்டிகையை மகிழ்ச்சியோடு கொண்டாடி இருக்கிறார்கள். தீபாவளி வந்தாலே குழந்தைகளுக்கு கொண்டாட்டம்தான். பட்டாசு வெடித்து ஆனந்த கூத்தாடும் அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. பெரியவர்கள் வரை பட்டாசு வெடித்து மகிழ்ச்சி அடைவார்கள்.

**தீபாவளி பண்டிகை ஏன் கொண்டாடப்படுகிறது எதற்காக கொண்டாடப்படுகிறது என்பதை பார்ப்போம்!**

நரகாசுரன் என்ற அரக்கன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இந்த மூவுலகமும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து தன் விருப்பத்திற்கு அனுபவிக்க வேண்டும் என்ற பேராசை இருந்தது. தேவர்கள் கூட தன் காலடியில் கிடக்க வேண்டும் என்ற நப்பாசை இருந்தது. இந்த ஆசைகளை நிறைவேற்ற பிரம்மனை நோக்கி கடும் தவம் இருந்தான் நரகாசுரன். இதனை பார்த்த பிரம்மன், தனக்காக தவம் இருந்த நரகாசுரனுக்கு அவன் கேட்கும் வரங்களை அள்ளி அள்ளி கொடுத்தார். ஒரு கெட்டவனுக்கு பதவி கிடைத்தால் எப்படியெல்லாம் பயன்படுத்துவானோ அப்படியெல்லாம் பயன்படுத்திக் கொண்டான் நரகாசுரன். எல்லோருக்கும் துன்பம் விளைவித்து வந்த நரகாசுரன், தேவர்களையும் முனிவர்களையும் அவன் கொடுமைப்படுத்தினான்.

அதுமட்டுன்றி தனக்கு வரம் கொடுத்த பிரம்மனை எதிர்த்தே போர் தொடுத்தான் நரகாசுரன். வரத்தை கொடுத்து விட்டு நரக வேதனைகளை அனுபவிக்க வேண்டி இருக்கிறதே என்று புலம்பினார் பிரம்மன். காக்கும் கடவுளான கிருஷ்ண பகவானிடம் தன் குறைகளை கூறி முறையிட்டார். இதனால் கிருஷ்ண பகவான் நரகாசுரனை அணுகி, தவம் செய்து பெற்ற வரத்தை தவறான வழியில் செயல்படுத்துவது நியாயம் அல்ல என்று முறையாக சொல்லி பார்த்தார். ஆனால் நரகாசுரன் கேட்பதாக இல்லை. தன் விருப்பம் போல் மக்களை கொடுமைப்படுத்தினான். இதனால் கோபம் அடைந்த கிருஷ்ண பகவான், நரகாசுரனை போருக்கு அழைத்து தம் சக்கராயுதத்தால் அவனின் உடலை இரண்டாக பிளந்தார். இறக்கும் நிலையில் இருந்த நரகாசுரன், கிருஷ்ணனின் காலை பிடித்து, பகவானே என்னுடைய சாவு கெட்டவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். நான் செய்த பாவங்களை மன்னித்து விடுங்கள் என்று கெஞ்சினான்.

இறக்கும் நிலையில் உள்ள எனக்கு ஒரு ஆசை. அதை இப்போது தெரிவிக்கிறேன் என்று சொன்ன நரகாசுரன், கொடியவனாக நான் இறக்கும் இந்நாளை மக்கள் அனைவரும் அல்லல் நீங்கிய நன்நாளாக மங்களகரமான நாளாக கொண்டாடி மகிழ வேண்டும் என்று வேண்டினான். கிருஷ்ண பகவானும் அவ்வாறே அவனுக்கு அருளினார். இதனால் தான் நரகாசுரன் இறந்த நாளைத்தான் இந்துக்கள் தீபாவளியாக கொண்டாடி வருகின்றனர் என்று ஜதீகம் கூறுகிறது.

இந்த நன்நாளில் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து குளித்து, புத்தாடை அணிந்து பலவகை பண்டங்கள் செய்து பட்டாசு வெடித்து கொண்டாடி வருகிறோம். தீபாவளி இங்கு மட்டும் கொண்டாடப்படுவதில்லை. உலகம் முழுவதும் இந்த பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள் உண்டு. இந்தநாளில் தீபங்களை வரிசையாக வைத்து மகிழ்ந்து கொண்டாடுவார்கள். ராமபிரான் இலங்கை சென்று ராவணனோடு கடும் போர் புரிந்து, தனது இல்லாளான (மனைவி) சீதா பிராட்டியாரை மீட்டுக் கொண்டு அயோத்திக்கு திரும்பி வந்தார். தன் வனவாசம் முடிந்து நாட்டை ஆள வரும் வெற்றி வீரர் ராமரை வரவேற்க மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக தீபங்களை ஏற்றி கொண்டாடினார்கள். அதனால்தான் தீபாவளி அன்று திருவிளக்குகளை வரிசையாக ஏற்றி வைக்கும் வழக்கம் ஏற்பட்டதாக கூறுவார்கள். தீபாவளியை நரக சதுர்தசி என்றும் அழைப்பார்கள். ஐப்பசி மாதத்தில் சூரியன் துலா ராசியில் இருப்பார். அப்போது தேய் பிறையான (கிருஷ்ண பட்சம்) 14ஆம் நாளில் கொண்டாடப்படும். திரியோதசி இரவு சதுர்தசி காலை கொண்டாடப் பெறுவதினால் இதற்கு நரக சதுர்த்தசி என்று வழங்கப்படுகிறது.














LAKE HOUSE
Concept & Design by
Advertising Supplements Department
: 0112 429 339, 0777 270 076
Coordinated by - S.Prasath

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## மீண்டெழும் நம்பிக்கையுடன்...

பெரும் முடக்கத்தை ஏற்படுத்திய கொரோனா தொற்று மற்றும் உலக நாடுகளுக்கு இடையேயான மோதல்களால் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகள் சூழ்ந்துள்ள தற்போதைய நிலையில் எமது நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க காத்திரமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் நாமும் எமது வாழ்விடங்களில் உள்ள நிலங்களை பயிர்ச் செய்கை மற்றும் நீர் வேளாண்மைக்கும், ஏனைய வளங்களை பொருளாதார தேடலுக்கான வாய்ப்பாகவும் பயன்படுத்தி சுய பொருளாதாரத்தில் எமது மக்களை தலை நிமிரச் செய்யும் முயற்களை அயராது முன்னெடுத்து வருகின்றேன்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியாலும், சுய நலன் சார்ந்த தரப்புக்களின் தூண்டுதல்களுக்கு விலைபோனவர்களினாலும் எனது அயராத முயற்சிகளுக்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.மக்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் தொடர வேண்டும் என்றும் மக்கள் நலப் பணிகள் எவ்வகையிலேனும் தடுத்து நிறுத்தப்பட்டுவிட வேண்டும் என்றும் தீய எண்ணங் கொண்ட அசூரர்களை காலம் கணக்கு தீர்க்கும் என்பதே தீபாவளிப் பண்டிகை எடுத்தியம்பும் வரலாற்று பாடமாகும்.நரகாசூரன் அழிக்கப்பட்ட தீபத்திருநாளைக் கொண்டாடும் உங்களின் நம்பிக்கையை பாதுகாக்க நாம் அர்ப்பணிப்புடன் பாடுபடுவோம் என்ற மகிழ்ச்சியில் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## கடந்த 15 நாட்களில்...

இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின் படி, 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையில் மொத்தம் 20 ஆயிரத்து 573 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு உதவி ...

வெளிநாட்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.கந்தவல தேவாலயத்தில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வுகளின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸாரிடம் ஒப்படைப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.இந்த விசாரணைகளை நடாத்த வெளிநாட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டியதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எமது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு போதியளவு சுதந்திரம் வழங்கினால் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்ற உண்மையை அறிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

கடவுள் நியாயமானவர் எனவும் எனவே அவரது நீதிமன்றில் இந்த வழக்கினை பாரப்படுத்துவதாகவும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டனை தெரிவித்துள்ளார்.

## பஸ்களில் புதிய ...

இந்த விடயம் தொடர்பில் தொழிநுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய முறைமையின் கீழ் நடத்துநர் அல்லது வாகன உதவியாளர் இன்றி பயணிகளிடம் கட்டணத்தை அறவிடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்துவதாகவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.புதிய தொழிநுட்பங்களுடன் கூடிய பயணச்சீட்டு இயந்திரங்கள் பஸ்களில் பொறுத்தப்படும். நடத்துனர் இன்றி அல்லது நடத்துனருடன் பஸ்கள் பயணத்தை மேற்கொள்ள முடியும். எனினும் நடத்துனர்கள் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். குறித்த இயந்திரங்களில் கையடக்க தொலைபேசிகள், வங்கி அட்டைகள், உள்ளிட்டவற்றை பயன்படுத்தி கட்டணத்தை செலுத்த முடியும்.

## தீபாவளி தினத்தை...

திங்கட் கிழமை தீபாவளி பண்டிகையென்பதால் வழமை போன்று நடைமுறைப்படுத்துவதற்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.இது தொடர்பாக அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஆகியோருடன் நேற்று தொடர்பு கொண்டு அமைச்சர் உரையாடினார். இந்துக்களினால் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதற்கான வரலாற்றுக் காரணத்தை அமைச்சர் தெளிவுபடுத்தியதுடன், இன்றைய நன்நாளில் நாட்டை சில மணி நேரங்கள் இருளில் மூழ்கடிப்பது பொருத்தமற்ற செயற்பாடு என்பதையும் தெளிவுபடுத்தினார். அந்த வகையில் இன்றைய தினம் மின்சார தடை அமுல்படுத்தப்படமாட்டாது என்பதை இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீரற்ற காலநிலை ...

மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்களில் இதுவரை மூவர் பலியாகியுள்ளதாகவும் தெரியவருகிறது. கடந்த 12ஆம் திகதி முதல் இதுவரை இடம்பெற்றுள்ள இயற்கை அனர்த்தங்களில் ஆறு பேர் உயிரிழந்து ள்ளதுடன் 1298 குடும்பங்களைச் சேர்ந்த 4933 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இருவர் காயங்களுக்குள்ளாகி ஒருவர் காணாமற் போயுள்ளதாகவும்அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. அதே வேளை 9 வீடுகள் முழுமையாகவும் 381 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்தது.

அதேவேளை, மேல், சப்ரகமுவ மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில பிரதேசங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யுமென்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இரவு வேளைகளில் காற்று இடியுடன் கூடிய மழையும் பெய்யக்கூடுமென்றும் இவற்றினால் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை 8.30 மணியுடன் நிறைவுபெற்றுள்ள 24 மணித்தியாலங்களில் காலி பூஸா பிரதேசத்திலேயே அதிகளவு மழைவீழ்ச்சி இடம்பெற்றுள்ளது. அங்கு 279.5 மி.மீற்றர் மழைவீழ்ச்சியும் காலி மொன்றோரியாவத்தை பிரதேசத்தில் 201.4 மி.மீற்றர் மழைவீழ்ச்சியும் இடம்பெற்றுள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால் அப்பகுதிகளில் பல்வேறு பிரதேசங்களும் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சீரற்ற காலநிலை தொடர்பில் எச்சரிக்கை அறிக்கையொன்றும் விடுக்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை 6.30 மணி முதல் இன்று காலை 6.30 மணி வரையுமான காலப்பகுதிக்கு அந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. களனி கங்கை, களு கங்கை நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில் அதனையண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள் பாதுகாப்பாக செயற்படுமாறும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மண்சரிவு தொடர்பான எச்சரிக்கையையும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெ ளியிட்டுள்ளதுடன் நேற்று விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க காலி, கேகாலை, களுத்துறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்கள் மண்சரிவு எச்சரிக்கை மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரியொருவர் அதுதொடர்பில் தெரிவிக்கையில், களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய, தொடங்கொட, பாலிந்தநுவர, வலல்லாவிட்ட, புளத்சிங்கள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவிலும் மக்கள் மிக அவதானமாக செயற்படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## 22வது திருத்தம்...

எதிர்வரும் இரண்டு வாரங்களில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட்டு அதனையடுத்து சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் இரண்டு வாரங்களுக்குள் நியமிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க தேசிய தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு, தேசிய கணக்காய்வு ஆணைக் குழு, அரச சேவை ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்கள் இவ்வாறு புதிதாக நியமிக்கப்படவுள்ளன.

## நாட்டை கட்டியெழுப்ப...

நீக்க முடியும். அதேபோல நம் தாய் நாட்டை முன்னொருபோதும் இல்லாத விதத்தில் சூழ்ந்திருக்கும் இருளை விரட்டி, ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சுபீட்சமான ஒரு நாட்டிற்கு சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம் என்பன மிகவும் முக்கியமானவை. இனம், மதம், கட்சி, நிறம் என்ற பிரிவினையின்றி, நம்வாழ்விலும், நாட்டிலும் சூழ்ந்திருக்கும் இருளை நீக்க வேண்டும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு அனைவரும் கைகோர்த்துக் கொள்ள வேண்டும் என்று இத்தீபத் திருநாளில் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

இம்முறை தீபாவளிப் பண்டிகையானது அனைவரது அபிலாசைகளையும் பூர்த்தி செய்து, இலங்கையை சௌபாக்கியம் நிறைந்த நாடாக உருவாக்கும் சிறந்த எதிர்காலத்தின் தொடக்கமாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கிறேன். தீபத்திருநாளைக் கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துக்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## புலமைப்பரிசில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வினாத்தாளின் பகுதி I பின்னர் வழங்கப்படும். இதன்கீழ் 2022, டிசம்பர் 18, இல் திட்டமிடப்பட்ட 2022 தரம் 05 புலமைப்பரிசில் கால அட்டவணை பின்வருமாறு அமையும்.

# பகுதி II (60 பல தேர்வு மற்றும் குறுகிய பதில் கேள்விகள்)

முற்பகல் 09.30 மணி முதல் 10.45 மணி வரை (ஒரு மணி நேரம் 15 நிமிடங்கள்)

# பகுதி I (40 பல் தேர்வு கேள்விகள்)

முற்பகல் 11.15 மணி முதல் 12.15 மணி வரை. (ஒரு மணி நேரம்) என பரீட்சைகள் அமையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அபிலாஷைகளும் ...

காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது தீபத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மலையக மக்களின் வாழ்வுக்கும், வாழ்க்கைத்தர உயர்வுக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும், ஆக்கபூர்வமான திட்டங்களை இ.தொ.கா வகுத்துள்ளது. தூரநோக்கோடு மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்த ஆண்டு இறுதியில் நல்ல பலன்கள் கிட்டிவிடும் என்று நாம் நம்புகின்றோம். கடும் உழைப்பை வழங்கி இந்த நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு அளப்பரிய பங்களிப்பை செய்யும் பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் இருள் அகற்றப்பட்டு ஒளியினை தேடிச் செல்லும் மக்களாகவும் அவர்களது வாழ்வு செழிப்பாக மலர வேண்டும்.

## தீமையை எதிர்ப்போம்...

தெரிவிப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தீபாவளி தினத்தை முன்னிட்டு பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அச்செய்தியில்,

பிரிவினைக்கு ஆயிரம் காரணங்களை உருவாக்கினாலும், கட்சி, நிற, மத, இன பேதங்களை ஒதுக்கி, பொது அக்கறையுடன் செயற்பட வேண்டிய காலகட்டத்தை இன்று நாம் அடைந்துள்ளோம். தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் இத்தருணத்தில், தீபாவளியின் உண்மையான அர்த்தத்தை மனதில் இருத்தி, பொது நலனுக்காக ஒன்றிணைந்து செயல்பட்டு, இந்த சவாலான நேரத்தை எதிர்கொள்ள உறுதி எடுத்தல் வேண்டும். "ஆன்மீக இருளுக்கு எதிரான ஒளியின் வெற்றி, தீமையை அழித்து நன்மை, அறியாமையிலிருந்து அறிவொளி" என்பனவற்றைக் குறிக்கும் தீபாவளிப் பண்டிகையை அர்த்தமுள்ளதாக்கி, தனிமனித வெற்றியை விட பொதுவான ஆன்மீக முன்னேற்றத்தின் வெற்றியில் நாம் அனைவரும் ஒன்றிணைவோம் என பிரதமர் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## குறைந்த நிறையுடன்...

செய்த கடை உரிமையாளர்கள் மீது நுகர்வோர் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பருப்பு, சீனி விலைகள்...

கிராம் பருப்பின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, பருப்பு 375 ரூபாவாக குறைந்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 235 ரூபா என்ற அடிப்படையில் மொத்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

## இலங்கையரை நாடு...

அனுப்ப முடியாத பட்சத்தில், வேறு ஒரு அறியப்படாத நாட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக ஏசியன் நியூஸ் இன்டர்நேஷனல் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி ரணில்... *(03ஆம் பக்கத் தொடர்)*

நடந்துள்ளது. 22 ஆவது திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை விட அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளன.

இந்த நாட்டில் புதிய யுகத்தை ஆரம்பிக்க தயாராகி வரும் இந்த நேரத்தில் இது மிகவும் முக்கியமான செயலாகும். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற அனைத்து ஜனநாயக நிறுவனங்களும் இன்று நம்மை கவனித்துக் கொண்டிருப்பதால் இது மிகவும் முக்கியமானது.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதத்திற்குள், இந்த நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மிகவும் மோசமான நிலைமை உருவானது. அந்த சவாலான நேரத்தில், அனைத்து ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் விருப்பத்துடன் இந்த சவாலை ஏற்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார்.

## 21 லட்சம் ரூபாவை... *(03ஆம் பக்கத் தொடர்)*

இரத்மலானை பகுதிகளில் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 4 ஆம் திகதி வர்த்தகர் ஒருவர் வங்கிக்கு வைப்பிலிட கொண்டு சென்ற 21 லட்சம் ரூபா பணத்தை வேனில் வந்த நால்வர் குறித்த வங்கிக்கு அருகில் வைத்து கொள்ளையடித்துச் சென்றனர்.கொள்ளையர்கள் மேற்படி வர்த்தகரை தாக்கி கட்டுபெத்த பகுதியில் விட்டுச் சென்றிருந்தனர். அவர்களின் சிலர் அந்தப் பகுதியில் இருந்து தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## பகிடிவதைகளை தடுப்பது ... *(03ஆம் பக்கத் தொடர்)*

கவீஷ ரத்நாயக்க தலைமையில் மாணவத் தலைவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதுடன்

கல்லூரியின் விவகாரங்கள் மற்றும் நாட்டின் கல்வித்துறை நிலை தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன. கல்வித்துறையின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி இதன்போது பதிலளித்தார். பல்கலைக்கழகக் கல்வி தொடர்பில் ஜனாதிபதி மாணவர்களிடம் கேட்டறிந்ததோடு வெளிநாட்டு உயர்கல்வியில் பட்டம் பெற எடுக்கும் காலத்திற்கும் உள்நாட்டு பல்கலைக்கழகத்தில் அதற்கான காலத்திற்குமிடையில் அதிக வித்தியாசம் காணப்படுவதாக மாணவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அதற்கான முறையான தீர்வு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாட்டுக் கல்வியை விட உள்நாட்டுப் பல்கலைக்கழகத்தின் கல்வியின் பெறுமதியை வலியுறுத்திய ஜனாதிபதி, பாடசாலைக் கல்வியை முடித்து உயர் கல்விக்கு தகுதி பெறும் மாணவர்களின் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் குருநாகல், மட்டக்களப்பு உட்பட பல பிரதேசங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் விரைவில் திறக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதேபோன்று, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை தனியான வளாகமாக மாற்றுவதற்கும், தேசிய வர்த்தக முகாமைத்துவ பாடசாலை (NSBM) மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (SLIIT) ஆகிய தனியார் பல்கலைக்கழகங்களுக்கு, தேசிய பல்கலைக்கழக தகைமைகளை வழங்குவதற்கு உள்ள வாய்ப்புகள் தொடர்பில் தாம் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகப் பகிடிவதைகள் குறித்து மாணவர்களிடம் கேட்டறிந்த ஜனாதிபதி, றோயல் கல்லூரி, தேர்ஸ்டன் கல்லூரி, ஆனந்தா கல்லூரி, டி.எஸ். சேனநாயக்கா வித்தியாலயம் போன்ற கொழும்பு பாடசாலைகளிலிருந்து வருடாந்தம் அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுவதாக கூறப்படுகின்ற போதிலும், புதிய மாணவர்கள் பகிடிவதைகளுக்குள்ளாகும் போது அவர்கள் அது தொடர்பில் மௌனமாக இருப்பதையே காணமுடிவதாகவும் குறிப்பிட்டார்.

பகிடிவதைகளை தடுக்கும் கடமை இந்தப் பாடசாலைகளுக்கு இருப்பதாகவும் அதற்காக பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கு பாடசாலை நாட்களில் இருந்தே பொறுப்பான சில பணிகளை செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகக் கல்வி மிகவும் அழகானது எனவும், பகிடிவதையால் மாணவர்கள் உடல் மற்றும் மன உளைச்சலுக்கு உள்ளாகும் நிலைமை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்கான தீர்வுகளை முன்வைக்க தாம் செயற்பட்டு வருவதாகவும் வலியுறுத்தினார்.

றோயல் கல்லூரியின் அபிவிருத்திக்காகவும் கல்லூரியின் நற்பெயருக்காகவும் மாணவர் தலைவர் சபை ஆற்றுகின்ற பங்களிப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராட்டினார்.

இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மாற்றங்களை எதிர்பார்க்கும்... *(03ஆம் பக்கத் தொடர்)*

திருத்தச் சட்டமூலமானது முக்கியமான மறுசீரமைப்பாக கருதப்பட்டாலும் உண்மையில் அது அவ்வாறு கிடையாது. இந்த திருத்தம் ஊடாக புதிதாக எதுவும் நடக்கப் போவதில்லை.

பாராளுமன்றத்தில் 17 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு வாக்களித்தவர்களே 18 ஆவது திருத்தத்திற்கும் 19 ஆவது திருத்தத்திற்கும் வாக்களித்ததுடன் பின்னர் 20 ஆவது திருத்தத்திற்கும் வாக்களித்துள்ளனர். தற்போது அவர்கள் 22 ஆவது திருத்தத்திற்கு வாக்களிக்கவும் தயாராகியுள்ளனர்.

இவர்கள் அங்கும் இங்குமாக ஊசலாடிக்கொண்டிருப்பதையே காண முடிகிறது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகரவை நான் மதிக்கின்றேன். சரியோ பிழையோ அவர் அங்குமிங்கும் செல்லாது ஒரே பக்கத்திலேயே செயல்படுகிறார்.

17, 18, 19, 22 ஆகிய திருத்தங்களின் போது ஒவ்வொரு தடவையும் தவறு செய்துள்ளதாகவும் அதனை மாற்றுவதற்காகவே திருத்தங்களை மேற்கொள்வதாகவும் கூறப்பட்டது.

மக்கள் மாற்றமொன்றையே கோருகின்றனர். ஆனால் சபையில் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டால் அது ஒரு மோசடியாகவே அமையும். அது முழுமையான மாற்றமாக இருக்காது. மக்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறை தேவையில்லை என்றே கூறுகின்றனர்.

ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலின் போதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகவே குறிப்பிட்டு வந்துள்ளனர். அவ்வாறுதான் இதற்கு முன்னர் அனைத்து திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை முன்னாள் ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ அவ்வாறான வாக்குறுதியை வழங்கவில்லை. அவர் புதிய அரசியலமைப்பு தொடர்பிலேயே குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, தற்போதைய ஜனாதிபதியும் சில மாதங்களுக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகவே கூறியிருந்தார்.

1994 ஆம் ஆண்டு முதலே இவ்வாறுதான் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

மாற்றத்தை கோரிய மக்கள் நிறைவேற்றுத்துறையை இல்லாது செய்ய வேண்டும் என்றே கோருகின்றனர். 21 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் 19 ஆவது திருத்தத்தையாவது கவனத்திற் கொள்ள வேண்டும். 20 ஆவது திருத்தம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை வரவேற்பது போன்றே இருந்தது.இந்நிலையில் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்போம் என்று கூறுவது ஏமாற்று வேலையாகும். மக்கள் மாற்றங்களை விரும்பும் போது, மறுசீரமைப்பு செய்வது போன்று பாசாங்கு செயற்பாடுகளில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். பாராளுமன்றம் தம்மை தவறாக வழிநடத்தியுள்ளது என்று மக்கள் கூறும் நிலையே ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு மாற்றங்களுக்கான முதலாவது படியென்று கூறி மக்களை ஏமாற்றுவதன் ஊடாக மக்கள் போராட்டம் வெடிக்கும். இத்தகைய செயற்பாடுகளை நாம் எதிர்க்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 21 லட்சம் ரூபாவை... *(03ஆம் பக்கத் தொடர்)*

இரத்மலானை பகுதிகளில் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 4 ஆம் திகதி வர்த்தகர் ஒருவர் வங்கிக்கு வைப்பிலிட கொண்டு சென்ற 21 லட்சம் ரூபா பணத்தை வேனில் வந்த நால்வர் குறித்த வங்கிக்கு அருகில் வைத்து கொள்ளையடித்துச் சென்றனர்.கொள்ளையர்கள் மேற்படி வர்த்தகரை தாக்கி கட்டுபெத்த பகுதியில் விட்டுச் சென்றிருந்தனர். அவர்களின் சிலர் அந்தப் பகுதியில் இருந்து தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## அவுஸ்திரேலியா செல்ல... *(03ஆம் பக்கத் தொடர்)*

சென்று ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கும் போது கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இன்று காலி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## சகலரையும் நெகிழ வைத்த... *(03ஆம் பக்கத் தொடர்)*

பெற்றுக்கொள்ள முடியாத மாணவர்களை அதனை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் அதிபர் மற்றும் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியை ஒருவரின் செயற்பாடு ஒட்டுமொத்த மக்களின் மனங்களையும் நெகிழச் செய்துள்ளது.ஸ்ரீ ஜயவர்த்தனபுரவிலுள்ள ஸ்ரீ ராகுல மகா வித்தியாலத்தில் இந்த நெகிழ்ச்சியான சம்பவம் பதிவாகி உள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு உணவு ஊட்டி விடும் காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது. ஆசிரியைக்கு அப்பால் தாய்மையை வெளிப்படுத்தும் வகையில் பிள்ளைகளுக்கு உணவு ஊட்டி விடுகிறார். குறித்த ஆசிரியை செயற்பாடு குறித்து பலரும் பாராட்டு தெரிவித்துள்ளதுடன் பெற்றோர் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளதோடு அவ் ஆசிரியைக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

## தீபாவளியை முன்னிட்டு...

தமிழ் கைதிகள் இந்த வாரம் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்படவுள்ளதாக அரசாங்கத்தின் மூத்த அமைச்சரவை அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதில் நான்கு கைதிகள், கடந்த வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டனர், மேலும் மூன்று பேர் இன்று சிறையிலிருந்து வெளியேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எட்டாவது கைதி விடுவிக்கப்படுவதற்கு முன் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்ட பின்னர் இவர்கள் பல்வேறு சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக கடுமையான சிறைத்தண்டனை அனுபவித்து வருவதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.ை

இந்துக்களால் இன்று கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக இந்த நல்லெண்ணச் சைகை மேற்கொள்ளப்பட்டது. விடுவிக்கப்பட்ட பெரும்பாலான கைதிகள் நீண்ட கால சிறைவாசத்திற்குப் பிறகு தங்கள் குடும்பத்தினருடன் மீண்டும் கொண்டாட்டங்களுக்காக ஒன்றிணைவார்கள் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மூன்று கைதிகளின் விடுதலையில் சிறிது காலதாமதம் ஏற்பட்டது, ஏனெனில் அவர்கள் ஏற்கனவே தங்களின் தண்டனைகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்திருந்தனர்.

அந்த மேல்முறையீடுகள் திரும்பப் பெறப்பட்டவுடன், அவர்கள் இன்றைக்குள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதி அமைச்சின் பரிந்துரைகளை ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான ஆவணங்களில் கடந்த புதன்கிழமை கையொப்பமிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விரைவில் கொழும்பை...

ஆரம்பித்துள்ள மேற்படி கப்பல் அங்கிருந்து கடந்த மாதம் மூன்றாம் திகதி இலங்கை நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த கப்பல் நேற்று முன்தினம் சிங்கப்பூர் செங் கீ துறைமுகத்தை வந்தடைந்ததாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்தக் கப்பல் சிங்கப்பூர் துறைமுகத்தை வந்தடைந்ததும் அந்த நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் சஷிகலா பிரேமவர்தன அந்த கப்பலின் கட்டளை அதிகாரியான கெப்டன் லங்கா திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக இலங்கை கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மேற்படி கப்பலை அமெரிக்க அரசாங்கம் கடந்த வருடம் அக்டோபர் மாதம் இலங்கை கடற்படைக்கு உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது. எனினும் இலங்கை கடற்படைக்கு அவசியமான வகையில் அதனை நவீன மயப்படுத்தப்பட்ட பின்னரே அந்தக் கப்பல் அங்கிருந்து இலங்கையை நோக்கி பயணிக்கின்றது.

## ஒளிமயமான நாட்டுக்கு...

சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்துக்கள் இத்தினத்தில் எண்ணெய் வைத்து, நீராடி, புத்தாடை அணிந்து, ஆலய தரிசனம் செய்வதுடன், ஆலயங்கள் மற்றும் வீடுகளில் தீபங்கள் ஏற்றி வழிபடுவார்கள். அத்துடன் பெரியோர்களை வணங்கி, பரிசுப் பொருட்கள் பரிமாறி, பட்டாசு கொளுத்தி, உறவினர்களுடன் இனிப்பான சிற்றுண்டிகள் உண்டு, உலகெங்கும் உள்ள இந்துக்கள் தீபாவளிப் பண்டிகையைக் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

தீமையை தோற்கடித்து நன்மை கிடைத்த நன்னாளான இன்றைய தீபாவளி தினத்தில், நாட்டில் தற்போதுள்ள ஆபத்தான சூழ்நிலைமையை தோற்கடித்து நாட்டை கட்டியெழுப்ப நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோம்.

தீபாவளிப் பண்டிகையை உலகிற்கு இருளை அகற்றி வெளிச்சம் தரும் பண்டிகையாகவும், அறியாமையை நீக்கி ஞானத்தை அளிக்கும் பண்டிகையாகவும் இந்து மக்கள் கொண்டாடுகின்றனர்.

புராதன இதிகாசங்களில் குறிப்பிடப்பட்ட சமூக நல்லிணக்கம், குடும்ப உறவுகளின் முக்கியத்துவம் மற்றும் புரிந்துணர்வு ஆகியவன்றின் ஒருமித்த நாளாக தீபாவளி தினம் கொண்டாடப்படுகிறது. மேலும் இலங்கை மக்களிடையே நல்லிணக்கத்தையும்,பரஸ்பர புரிந்துணர்வையும் உருவாக்க இந்த அற்புதமான நன்னாள் பெரும் பங்களிப்பை வழங்குகிறது.

அனைவரினதும் வெறுப்பும் கோபமும் நீங்கி,மனித நல்லிணக்கம் நிறைந்த இலங்கையில் சுதந்திரமாகவும், நல்லிணக்கத்துடனும், சமாதானத்துடனும் வாழ தீபத்திருநாள் அனைவருக்கும் உறுதுணையாக அமையட்டும்.

# மானுடவியல்

(தொடர்)

## கழறிற்றறிவார் நாயனார்



91

'என்னுயிர்க்கு இன்னுயிராம் எழிலாரூர்ப் பெருமானை வன்னெஞ்சக் கள்வனேன் மறந்திரேன். நீவிர் வணங்கினார் வன்றொண்டரை வணங்கி தம்முடைய திரு மாளிகையிலுள்ள பெரும் பொருள்களைப் பொதிசெய்து ஆட்களின் மேல் ஏற்றுவித்து நெடுந்தூரஞ்சென்று வழியனுப்பினார். சுந்தரரும் தம்தோழரைத் தழுவி விடைபெற்றுத் திருவாரூரை அடைந்தார். சேரமான்பெருமாள் தம் தோழராகிய நம்பியாரூரரை மறவாத சிந்தையுடன் கொடுங்களூரிலிருந்து மலைநாட்டை ஆட்சி புரிந்திருந்தார். நெடுநாட்களின் பின் சுந்தரர் மீண்டும் கொடுங்களூருக்கு வந்து தம் தோழராகிய சேரமான் பெருமாளுடன் பல நாட்கள் அளவளாவி மகிழ்ந்திருந்தார்.

ஒருநாள் சேரமான் பெருமாள் திருமஞ்சனச்சாலையில் நீராடிக்



கொண்டிருந்த பொழுது சுந்தரர் திருவஞ்சைக்களத் திருக்கோயிலையடைந்து அஞ்சைக்களத்து இறைவனை வழிபட்டுத் 'தலைக்குத் தலைமாலை' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிப் போற்றி நின்றார்.

அந்நிலையில் அவரது பாசத்தளையை அகற்றிப் பேரருள் புரிய விரும்பிய சிவபெருமான், சுந்தரரை அழைத்துவருமாறு திருக்கயிலாயத்தில் இருந்து வெள்ளையானையுடன் தேவர்களை அனுப்பி அருளினார். வெள்ளை யானையுடன் திருவஞ்சைக்களத் திருக்கோயில் வாயிலையடைந்த தேவர்கள் நம்பியாரூரரைப் பணிந்து நின்று 'தாங்கள் இவ் வெள்ளையானையின் மீது அமர்ந்து திருக்கயிலைக்கு உடன் புறப்பட்டு வருதல் வேண்டுமென்பது இறைவரது அருளிப்பாடு' என விண்ணப்பஞ் செய்தார்கள்.

இந்நிலையில் நம்பியாரூரர் செய்வதொன்றும் அறியாது தம் உயிர்த்தோழராகிய சேரமான்பெருமாளைத் தம் மனதிற் சிந்தித்துக் கொண்டு வெள்ளையானையின் மீது ஏறிச் செல்வாராயினார்.

இவ்வாறு தம் உயிர்த்தோழராகிய சுந்தரர் தம்மை நினைத்துச் செல்லும் பேரன்பின் திறத்தைத் திருவாற்றலால் விரைந்துணர்ந்த கழற்றறிவாராகிய சேர வேந்தர், பக்கத்தில் நின்ற குதிரையின் மீது ஏறித் திருவஞ்சைக்களத் திருக்கோயிலுக்கு விரைந்து சென்றார். கழறிற்றறிவார் நாயனார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

# ஐஸ்வர்யங்களை அள்ளித் தரும் ஐப்பசி மாதம்



ஐப்பசி மாதம் அடைமழைக் காலம். அத்துடன் ஐப்பசி ஐஸ்வர்யங்களை அள்ளித் தரும் மாதமும் ஆகும். இம்மாதத்திற்கு துலா மாதம் என்ற பெயரும் உண்டு. இம்மாதத்தில் தீபாவளி கொண்டாடப்படுகிறது. முருகப்பெருமானை நினைத்து மேற்கொள்ளும் முக்கிய விரதமான ஸ்கந்த சஷ்டி திருவிழாவும் இம்மாதத்தில் நிகழ்கிறது.

இம்மாத பௌர்ணமியில் எல்லா சிவாலயங்களில் உலகின் பரம்பொருளான சிவபெருமானின் லிங்கத்திருமேனிக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. கேதார கௌரி விரதம், முருகன் சுக்ரவார விரதம், தனத்திரயோதசி, யமதுவிதியை, கோவத்ச துவாதசி, பாபாங்குசா ஏகாதசி, இந்திர ஏகாதசி போன்ற நிகழ்வுகளும் ஐப்பசியில் நிகழ்கின்றன.

தீபாவளி ஆண்டுதோறும் ஐப்பசி தேய்பிறை சதுர்த்தசியில் கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகையின்போது நல்லெண்ணெய் தேய்த்து நீரில் மக்கள் நீராடுகின்றனர். இதற்கு கங்கா ஸ்நானம் என்று பெயர்.

**ஸ்கந்த சஷ்டி திருவிழா**

ஐப்பசி அமாவாசையை அடுத்த ஆறு நாட்கள் கொண்டாடப்படுகிறது. தீமையான சூரபத்மனை எதிர்த்து நன்மையான முருகப் பெருமான் வெற்றி பெற்றதன் அடையாளமாக இவ்விழா நடத்தப்படுகிறது.

இவ்விழாவின் முக்கிய நிகழ்வது விரதமுறையைக் கடைப்பிடிப்பது ஆகும். நம்மிடம் உள்ள தீய குணங்களான ஆணவம், மாயை, கன்மம், காமம், பேராசை, செருக்கு, மயக்கம், தற்பெருமை ஆகியவற்றை விடுத்து வரம்பில்லா ஆற்றல், தன்வயமுடைமை, இயற்கை உணர்வு, பேரருள் ஆகிய நற்குணங்களைப் பெறும் நோக்கில் இவ்விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தவிரதத்தினை ஒப்பரும் விரதம் என்று ஸ்கந்த புராணம் குறிப்பிடுகிறது.

எல்லா முருகன் கோவில்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இவ்விரதமுறையில் சிலர் ஆறுநாட்கள் உண்ணாமலும், ஒருவேளை உணவு உண்டும், சஷ்டி அன்று மட்டும் உண்ணாமலும் விரதம் மேற்கொள்கின்றனர். ஒரு சிலர் ஆறு மிளகை வாயிலிட்டு ஆறு கை நீரருந்தியும், ஒரு சிலர் மௌன விரதம் இருந்தும் இவ்விரதத்தைக் கடைப்பிடிக்கின்றனர். இவ்விரத வழிபாட்டில் கந்த சஷ்டி கவசம், கந்தரனுபூதி, கந்த குரு கவசம், சண்முக கவசம், கந்தர் கலி வெண்பா, திருப்புகழ் போன்றவற்றை பாராணயம் செய்கின்றனர். இவ்விரத முறையால் உடல் மற்றும் உள்ளத்தூய்மை கிடைக்கும். நோய்கள் நீங்கும். பிள்ளைப்பேறு கிட்டும். சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பது கந்த சஷ்டி குறித்த பழமொழியாகும்.

சைவ மஞ்சரி





ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயத்தின் விஜயதசமி பூஜைகள் அண்மையில் இடம்பெற்றன. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.
(படம்: உடப்பு குறூப் நிருபர்)

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 9



நாம் நம் வாழ்க்கையை சாதாரண செயலில் செலவழிப்பதோ, சாதாரண கண்ணோட்டத்தில் பார்க்கவோ கூடாது. அவ்வாறு பார்ப்பதற்கு மனித வாழ்க்கை அற்பத்தனமானதோ, நீச்சதனமானதோ அல்ல. இந்த மனித வாழ்வு தொடர் முயற்சியனாலும், தொடர் தவப்பலனாலும் வந்தது. இந்த வாழ்க்கை நமக்கு கிடைத்த நல்ல வாய்ப்பாகும். இம்மாதிரியான வாய்ப்பு இன்னுமொருமுறை கிடைக்குமா என சொல்ல முடியாத நிலையில் நாமிருக்கிறோம்.

இந்நிலையில், இவ்வாழ்க்கையை நாம் புறக்கணிப்பதோ, கேலியாக பொழுதுபோக்கு பொருளாக கருதவோ கூடாது. இந்த வாழ்க்கையை நமக்கு கிடைத்த நல் வாய்ப்பாகக் கருதி, அதை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பரிபூரண லாபமுடையதாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

மனித வாழ்க்கையை அடைந்துள்ள ஜீவாத்மாவாகிய நாம், நம் பரந்த உற்சாகத்தின் மூலம் மறுமை வாழ்விற்கான அமைதி, சந்தோஷம், ஆனந்தம் என்னும் பலவித லாபமுள்ள வாழ்க்கையாக மாற்றிட முயற்சிக்க வேண்டும். உள்ளார்ந்த உற்சாகத்தின் மூலம் நற்செயல்கள் தொடர்ந்து செய்திட வேண்டும்.

படித்தல், கேட்டல், சிந்தித்தல், செயல்படல் இவையாவும் ஓரளவு தான் ஆத்மலாபத்தையும் அறிதலையும் தருமே தவிர, மிகப் பெரிய மகத்துவத்தை நமக்கு தந்திடா. சிறப்புடைய செயல்களை அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலமே, நாம் பிறப்பின் உயர்ந்த நோக்கத்தை அடைந்திட முடியும். நமக்கு கடவுளால் கொடுக்கப்பட்டுள்ள இந்த மனித வாழ்வின் மகத்துவத்தை அறிவோம். அதனை நன்கு பயன்படுத்தி பிறவிப் பயன் எய்துவோம்.

வாழ்க்கையில் வெற்றி பெற மனதை ஒருமுகப்படுத்துவது மிக மிக அவசியமாகும். மனதை ஒருமுகப்படுத்துவதன் மூலம் மனிதனின் ஆற்றல் விழிப்புணர்வு பெற்று, பெரும் வளர்ச்சி அடையும். எண்ணங்களில் சுத்தம், தெளிவு, விழிப்புணர்வு ஏற்படும்.

அத்துடன் உபயோகமான செயல்களினால் மட்டுமே இவை யாவும் கிட்டும். அதற்காக, அவைகளை அடைவதற்காக, நாம் நம் வாழ்வில் ஓர் உண்மையான, உயர்ந்த குறிக்கோள் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். அந்த குறிக்கோளை அடைவதில் மட்டுமே நாம் நம் மனம், செயல், சிந்தனை ஆகியவற்றைச் செலுத்த வேண்டும்.

அப்போது நம் மனதில் ஒரு கம்பீரம் உண்டாகும். அகப்பிரச்சினைகளும், புறப்பிரச்சனைகளும் அகன்று மனம் ஒருமுகப்படும்.

மனதில் ஒருமுகத்தன்மை ஏற்பட்டதும், உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் அனைத்து ஆற்றல்களும் விழித்துக் கொள்ளும், அதன் மூலம் கடினமான, செய்து முடிக்க இயலாத காரியங்களையும் சுலபமாக செய்துமுடிக்கும் திறமையை நாம் அடைவோம். சிதறிக் கிடக்கும் மனதால் ஒரு சிறிய காரியம் கூட முடிக்க முடியாமல் போகும்.

நம் ஆற்றலை முறையாக திட்டமிட்டு, உபயோகிக்கும் போது, எவ்வித செயலும் கைகூடும். ஆனால், அதற்கு மனதை ஒருமுகப் படுத்துவது அவசியமாகும். எனவே, மனிதன் அலைபாயும் தன் உள்ளத்தை ஒருமுகப் படுத்தும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**19305) ஒருவரின் இறந்து போன மனைவி, விண்ணுலகில் மகிழ்ச்சியாக இருப்பது போல் கனவு கண்டால் என்ன நடக்கும்?**

அவரின் வாழ்க்கை நிம்மதியாக அமையும்.

**19306) அதே நேரம் மறைந்த மனைவியின் முகம் துயரம் தோய்ந்ததாக இருப்பின் என்ன நடக்கும்?**

வாழ்க்கை நிலையற்றதாக மாறும்.

**19307) நாம் பிறரை அடிப்பது போல் கனவு கண்டால் என்ன நடக்கும்?**

நண்பர்களால் புகழப்படும் நிலை ஏற்படும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள், புகழ் பன்மடங்கு பெருகும்.

**19308) தான் அடிபட்டு காயமடைந்திருப்பது போல் கனவு கண்டால் என்ன நடக்கும்?**

தன அபிவிருத்தி உண்டாகும்.

**19309) எனினும் கத்தி, துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்ததாக கனவு காண்டால் என்ன நடக்கும்?**

நன்மையான பலன் தராது. உங்களுக்கு பழி ஏதேனும் வந்து சேரும்.

**19310) ஆலமரம் கனவில் வந்தால் என்ன பலன்?**

நீங்கள் செய்கின்ற தொழில் மேலும் அபிவிருத்தி ஆகும். பொருள் வரவும், உங்களின் சுற்றத்தார் இணக்கமும், பாசமும் உண்டாகும்.

# சிறந்த அறநெறி ஆசிரியராக திகழ்ந்த பஞ்சரட்ணதேவி சிறீஸ்கந்தராஜா



அறநெறி பாடசாலை ஆசிரியராக நீண்ட காலம் கடமையாற்றி வந்தவர் டாக்டர் பஞ்சரட்ணதேவி சிறீஸ்கந்தராஜா. இவர் அறநெறி பாடசாலை ஆசிரியராக சிறந்த சேவையாற்றி வந்தவராவார். இவரது இந்து சமய சேவையைப் பாராட்டி, இந்து கலாசாரத் திணைக்களம் இவருக்கு தர்மாசாரியார், சிறந்த அறநெறி ஆசிரியருக்கான தேசிய சேவை மேன்மை விரதை 2018 வழங்கியது. இவர் இந்து சமயத்துக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய சேவையை கருதி இவருக்கு அகில சமாதான நீதவான் பதவியும் வழங்கப்பட்டது. கீர்த்திஸ்ரீ, வைத்தியரத்னா, வைத்திய அபிமானி, தேசபந்து ஆகிய விருதுகளையும் இவர் பெற்றுக் கொண்டார்.

இவர் கடந்த 19ஆம் திகதி சிவனடி சேர்ந்து விட்டார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், அறநெறி பாடசாலை ஆசிரியராகளுக்காக இந்து கலாசாரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றி வந்தார். இவரது பெற்றோர் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபையின் உறுப்பினர்களாகத் திகழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ பூமி நீளா பத்மாவதி சமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு கோவில் பிரம்மோற்சவ இரதபவனியின் (06) போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படம்: வட கொழும்பு தினகரன் நிருபர் )





வரலாற்று சிறப்பு மிக்க முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னை நாதஸ்வாமி ஆலயத்தின் நவராத்திரி மானம்பூ நிகழ்வு (5) இடம்பெற்ற போது...
(படங்கள் : உடப்பு குறூப் நிருபர்)

# தீபாவளி நல்வாழ்த்துகள்

## மக்கள் அனைவரும் சுபிட்சமாக வாழ்வதே தீபாவளியின் மகிமையாகும்

**பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண**



கொடுமை செய்து வந்த நரகாசூரன் பிடியில் இருந்து மக்கள் விடுபட்டு வந்த போதிலும் இன்று உணவு பொருட்களின் விலை அதிகரிப்பு, பொருளாதார கஷ்டங்கள் மத்தியில் இம்முறை தமிழ் மக்கள் தீபாவளி திருநாளை கொண்டாட வேண்டியுள்ளது என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பொது செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது,...

ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதாக கூறிவந்த போதிலும் அதற்கு தேவையான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

ஆனால், அதற்கு மாறாக இனவாதத்தை பரப்பி தங்களது அரசியலை தக்கவைத்துக் கொள்கின்றனர்.

அனைத்து மக்களும் சுபிட்சமாக வாழ்வதன் மூலமே தமிழ் மக்கள் தங்களது தீப திருநாள் பண்டிகையை கொண்டாடுவதில் மகிழ்ச்சி அடைவர்.

## பொருளாதார நெருக்கடியை தீபஒளி தனது மகிமையால் தீர்க்க வேண்டும்

**அங்கஜன் இராமநாதன் எம்.பி**



தீப ஒளியின் மகிமையால் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாடும் ,நாட்டு மக்களும் மீண்டெழுவார்கள் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில்;

தீபத் திருநாளைக் கொண்டாடும் உலக வாழ் இந்துக்கள் அனைவருக்கும் எனது தீபாவளி தின நல் வாழ்த்துக்கள்.

தர்மம் தழைப்பதற்கும்அதர்மம் அழிவதற்குமாக கொண்டாடப்படும் திருநாளே தீபத்திருநாள்.

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை தீப ஒளி தனது மகிமையால் தீர்க்க வேண்டும்.

கடந்த வருடம் கொரோனா பெருந்தொற்று எம்மை ஆட்கொண்டிருந்தது. இம்முறை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி படிப்படியாக மீண்டு வர முனைகிறோம்.நாடும் நாட்டு மக்களும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக ஸ்திரத்தன்மை அடையும் அந்த நன்நாளின் தொடக்க நாளாக இந்நாள் அமைய வாழ்த்துகிறேன்.

## நாடும் மக்களும் சுபிட்சம் பெற தீபாவளித்திருநாள் வழி வகுக்கும்

**ஐ.தே.க பிரதித்தலைவர் ருவன் விஜயவர்தன**



உவகை கொள்ளும் தீபாவளி திருநாளின் அர்த்தம் போல் நம் நாடும் நம் மக்களும் குறிப்பாக நம் தமிழ் சகோதரர்களும் துன்ப நிலை நின்று மீளெழுச்சிபெற்று ஆனந்தமும் ஆரோக்கியமும் பொருளாதார எழுச்சியும் பெற்று திகழ தீபாவளி பிரார்த்தனைகள் வழி வகுக்கட்டும் என்று ஐ.தே.க பிரதித்தலைவர் ருவன் விஜயவர்தன தீபாவளி வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

பரஸ்பரம் நல் எண்ணங்கள் வளர வேண்டும். இந்நாளில் பிரார்த்தனை தான் நாடு சுபிட்சம் பெற வழிவகுக்கும்.

## இன்று பெருகும் இன்பம் அனைவரிடமும் என்றும் நிலைக்கட்டும்

**செந்தில் தொண்டமான்**



“தீபத் திருநாளாம்” தீபாவளி திருநாளை உவகையுடனும் உற்சாகத்துடனும் அனைத்து மக்களும் கொண்டாடும் இந்த இனிய தருணத்தில் மக்கள் அனைவருக்கும் உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

வாழ்த்து செய்தியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

'தீபத்திருநாள் நமக்கு அதிகமான அறிவாற்றலை வழங்கி, வளர்ச்சி மற்றும் மேன்மையை அளிப்பதோடு, அறியாமை எனும் இருள் அகற்றி, ஒற்றுமை, அர்ப்பணிப்பு உணர்வை ஏற்படுத்தி, நமது நாட்டை உச்சத்துக்கு கொண்டு செல்ல வழிவகுக்கும்.

இது சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வுக்கான மிகுந்த நம்பிக்கையை கொண்டு வருவதோடு மக்களை பிரித்துவைக்கும் எல்லா வேறுபாடுகளையும் களைந்து அவர்கள் மத்தியில் சுபீட்சத்தை ஏற்படுத்துகிறது.

இந்தத் தீபத் திருநாளில் எல்லோர் வாழ்விலும் இன்பம் பெருகிட இறைவனின் அருள் கிடைக்கட்டும். இன்று பெருகும் இன்பம் அனைவரிடமும் என்றும் நிலைக்கட்டும்.

இந்த தீபாவளியை கொண்டாடுகிற இந்த தருணத்தில் அதர்மம் ஒழிந்து, ஆதிக்க உணர்வு மறைந்து, ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட்டு எல்லோரும் மகிழ்ந்திடும் ஒரு பண்டிகையாக இப் பண்டிகை அமைய வேண்டும் என்று இன்நன்னாளில் வாழ்த்துகிறேன்.

## வழி பிறக்கும் நம்பிக்கை திருநாளாக வரவேற்போம்

**மருதபாண்டி ராமேஸ்வரன் எம்.பி**



மனதிலிருக்கும் நல்ல எண்ணங்களை வளர்த்து சமூக நலன்கள் நோக்கியதாக நல்ல மனப்பாங்கை வளர்க்கும் உள்ளமாக அக விளக்கு இறை அருள் மூலம் பிரகாசிக்க இந்த தீபாவளி நாளில் தீபம் ஏற்றி மகா விஷ்ணு பெருமானை மனதார பிரார்த்தித்துக்கொண்டு அனைத்து இந்து மக்களுக்கும் தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு, அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நல்ல பல திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வாழ்வில் புத்தொளி வீச வேண்டும்.

எமது மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் நாம் என்றும் விழிப்புடன் செயற்படுவோம் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## மக்கள் சந்தோசமாக வாழ தீபத்திருநாளில் இறைவனை பிரார்த்திப்போம்

**சர்வதேச இந்துமத பீட செயலாளரின் தீபாவளி வாழ்த்து செய்தி**



தற்கால பொருளாதார நெருக்கடி சூழலில் இருந்து இலங்கை மீண்டு மக்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ இறைவன் அருள்புரிய வேண்டும்.அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையின் கீழ் மக்களுக்கான இந்த பொருளாதார நலத்திட்டங்கள் நிச்சியமாக பயனுள்ளதாக அமையும் என சர்வதேச இந்துமத பீட செயலாளரும் முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத இனைப்பாளருமான கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா தனது தீபாவளி வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த பொருளாதார நெருக்கடிக்குள் சுருண்டிருந்த மக்கள் இந்த தீபாவளியை தொடர்ந்து மீண்டெழுந்து சுபிட்சம் மிக்க நாடாக மாற நாங்களும் இலங்கையராக அனைத்து மக்களும் எந்தவொரு பாகுபாடும் இன்றி ஒன்று சேர்ந்து மனதார ஒன்றிணைந்து பிரார்த்திபோமாக.

## இந்நன்னாள் ஒற்றுமை உணர்வு, நல்லெண்ணத்தை பலப்படுத்துகிறது

**எஸ்.ஆனந்தகுமார்**



தமிழ் மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் சமூக நீதி ஒளியால் கிடைக்கும் நல்லின்பம் மட்டுமன்றி அமைதி, வளம், வளர்ச்சி, ஒற்றுமை,நல்லிணக்கம், சகோதரத்துவம், பன்முகத்தன்மை என அனைத்து நன்மைகளும் கிடைக்க வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களின் வாழ்விலும் இன்பம் பெருகிட தீமைகள் அகன்று நன்மைகள் இந்த தீபாவளி திருநாளில் பிறக்கும்.


இந்நன்னாள் நாட்டு மக்களிடையே ஒற்றுமை உணர்வையும், நல்லெண்ணத்தையும், சகோதரத்துவத்தையும் பலப்படுத்துகிறது.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் அனைத்து மக்களினதும் வாழ்வு மீள வழமைக்கு திரும்பிட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் செயல்படும் என்று நாம் முழுமையாக நம்புகிறோம். அதற்கான ஆரம்பகட்ட பணிகளை அவர் செய்துள்ளார். கடந்த காலத்தைவிட எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை ஜனாதிபதி குறைத்துள்ளார்.

இந்த தீபாவளி பண்டிகையோடு நாடு மீண்டும் வழமைக்கு திரும்ப இறைவனை பிரார்த்திக்கிறேன் என்றும் அவர் தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

## தீபத்திருநாளில் சிந்தித்து சூழ்நிலைகளை புரிந்து கொண்டு செயலாற்றுவோம்

**வேலுசாமி இராதாகிருஸ்ணன் எம்.பி**



பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மிகவும் நிதானமாகவும் சிக்கனமாகவும் கொண்டாட வேண்டிய ஒரு தீபாவளியாக இது அமைந்திருக்கின்றது.உலகெங்கும் வாழுகின்ற அனைத்து உறவுகளுக்கும் இந்த நாளில் வாழத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடரும் வாழ்த்துச் செய்தியில்.....

இலங்கை மக்கள் தீபாவளியை மிகவும் சிறப்பாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வந்தார்கள். ஆனால் இம்முறை தீபாவளியானது பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கொண்டாட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.இந்த நாளில் தீபாவளியை கொண்டாடுகின்ற நீங்கள் அனைவரும் மிகவும் அமைதியாகவும் ஏனையவர்களின் மனது புன்படாத வகையிலும் இந்த நாளை கொண்டாட வேண்டும் என அன்பாக வேண்டிக் கொள்கின்றேன்.

## நெருக்கடிகளுக்கு தீர்வை கொண்டு- வரும் திருநாளாக அமையட்டும்

**புதிய ஜனநாயக மக்கள் கட்சித் தலைவர் என்.ரவிக்குமார்**



நாடு முழுதும் இருக்கும் அனைத்து மக்களும் இணைந்து கொண்டாடும் பண்டிகைகளுள் ஒன்று தான் தீபாவளி பண்டிகை. தீபாவளி என்றாலே நினைவுக்கு வருவது புத்தாடை, பட்டாசு, இனிப்பு மற்றும் வாழ்த்து செய்திகள். ஆனால் இம்முறை தீபாவளி இலங்கை மக்களுக்கு பல நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. அவற்றை சமாளித்து வெற்றி கொண்டு முன்னோக்கி செல்வதற்கான காலம் கனிந்துள்ள நேரத்தில் இத்தீபத்திருநாள் வழியமைத்து கொடுக்கும் என நாம் நம்புகிறோம் என புதிய ஜனநாயக மக்கள் கட்சித் தலைவர் என்.ரவிக்குமார் தித்திக்கும் தீபத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்த அந்த வாழ்த்துச் செய்தியில்,

இன்றைய பொருளாதார நெருக்கடியிலும் எமது மக்கள் தீபாவளி திருநாளை கொண்டாடுகின்றனர். தமிழ் மக்கள் காலாகாலம் அனுபவித்து வந்த துன்பங்கள் படிபடியாக நீங்கி செல்லும் சந்தர்ப்பத்தில் அரசின் திட்டங்களும் வரவேற்க தக்கதாக உள்ளது.

## துயரை விரட்டும் தீபாவளியாக அமைய வேண்டும்

**தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய்**



நாட்டில் காணப்படும் அனைத்து பிரச்சினைகளும் நீங்கி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழும் சூழல் இத் தீபாவளியோடு உருவாக வேண்டுமென மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளரும் மலையக மக்கள் முன்னணியின் உயர்பீட உறுப்பினருமான லெட்சுமனார் சஞ்சய் தன் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவ் வாழ்த்து செய்தியில்...

இவ்வருடம் மலர்ந்திருக்கின்ற தீபாவளி நாட்டில் சுபிட்சமான தீபாவளியாக அமைய வேண்டும்.மலையக மக்கள் சொல்லொணா துயரத்தை அனுபவித்து வருகின்றனர்.அத் துயரங்கள் நீங்க வேண்டும்.மலையக மக்கள் உட்பட நாட்டு மக்களும் சந்தோசமாக வாழ இருள் எனும் வறுமை நீங்கி மகிழ்ச்சி எனும் ஒளி முழு நாட்டுக்கும் வீச பிரார்த்திப்போம். அனைத்து மக்களின் வாழ்விலும் இன்பம் பெருகிட எல்லாம் வல்ல இறைவனின் அருள் கிட்டட்டும்.

## பின்னடைவுகளிலிருந்து மறுமலர்ச்சியை தரட்டும் நம் தீபாவளி பிரார்த்தனைகள்

**கலாநிதி நல்லையா குமரகுருபரன்**



நம் மக்களின் வாழ்விலும் நாட்டின் பின்னடைவுகளிலிருந்தும் மறுமலர்ச்சியை தரட்டும் நம் தீபாவளி பிரார்த்தனைகள்.

பரஸ்பரம் நல்லெண்ணங்கள் வளர வேண்டும் என தீபாவளி நல்வாழ்த்துகளை முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் தமிழ் தேசிய பணிக்குழுவின் தலைவருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

தீபாவளி நம்பிக்கை தந்த அர்த்தம்போல் தவறுகள் உணரப்பட்டு மன்னிக்கப்பட்டு மனிதநேயமும் அன்பும் திளைக்குமானால். பரஸ்பரம் நல்லெண்ணங்கள் வளர மானுடவாழ்வு பெரு மலர்ச்சி பெறும். மறு மலர்ச்சி பெறும் என தீபாவளி வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார். .

## அதர்மம் எப்போதும் நிலைத்ததில்லை என்ற தத்துவத்தை மீண்டும் மீண்டும் உலகிற்கு உணர்த்தும் தீபாவளி பண்டிகை

**மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம்**



இத் திருநாளில் இல்லங்களிலும் ஆலயங்களிலும் ஏற்றப்படும் தீபங்களின் ஒளியானது எவ்வாறு ஆணவம், கன்மம், மாயையிலிருந்து இருளை அகற்றுகின்றதோ அதேபோன்று எம்மையும் நாட்டையும் சூழ்ந்துள்ள கருமேகங்கள் நிறைந்த இருளை அகற்றி மக்களை பீடித்துள்ள அறியாமை, வறுமை, தீமைகள் அனைத்தும் மறைந்து நன்மைகள் பெருகிடும் என்ற இறைநம்பிக்கை பொய்த்துப் போகலாகாது.

வளமான நாட்டில் வலிமையான பொருளாதார கட்டமைப்பு உருவாகுமென்ற நம்பிக்கை மேலோங்கிட வேண்டும். இழந்துபோனவற்றை மீண்டும் அடைவதற்கும், உலகமயமாக்கல் எனும் பரந்துபட்ட கட்டமைப்பில் புதிய வெளிச்சம், புதிய வெற்றிப் பாதைகள் உருவாகிட பிரார்த்திப்போம்.

அநீதி, அடக்குமுறைகள் தழைத்தோங்கிய வரலாற்று பாதையில் 'அதர்மம் எப்போதும் நிலைத்ததில்லை' என்ற தத்துவத்தை மீண்டும் மீண்டும் உலகிற்கு உணர்த்துகின்ற இந்நாளில், பன்முகத்தன்மை நிறைந்த நம் சமூகத்தின் எல்லோர் வாழ்விலும் சமூகநீதி,சமதர்ம, நல்லிணக்க எண்ணங்கள் மேலோங்கி அனைவர் வாழ்விலும் நல்லின்பம் பெருகிட வாழ்த்துகள்.

## எமது மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியும் வளமும் கிடைக்க பிரார்த்திப்போம்

**சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்**



தமிழ் மக்கள் வாழ்வில் ஒன்றிணைந்த திருநாட்களில் தீபாவளி பண்டிகை பிரதானமான இடத்தை வகிக்கிறது. எமது மக்கள் வாழ்வில் பல்வேறு விதமான கஷ்டங்கள், துயரங்களை எதிர்கொண்டு வரும் காலப்பகுதியில் ஒரு தீப ஒளியானது எவ்வாறு இருளை அகற்றுகிறதோ அதுபோலவே எமது மக்கள் வாழ்வில் சகல துயரமும் நீங்கி இன்பமான வாழ்வும் வளமும் நலமும் பலமும் பெற்று சுபீட்சமான வாழ்நிலை அமைந்திட வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து கொள்கின்றோம்.

இச்சமயத்தில் நாம் இயன்றவரை அதிகரித்த செலவினை தவிர்த்து தேவையுடைய மக்களுக்கு இயன்றவரை உதவியுடன் ஆதரவு வழங்குவது நமது கடமையாகவும் தேவையாகவும் உள்ளது. ஆகவே இயன்றவர்கள் இயன்றவரை உதவி, அனைவருக்காகவும் பிரார்த்திப்போம்.

## பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கான ஒளிக்கீற்று தீபத்திருநாளில் மலர வேண்டும்

**தோட்ட சேவையாளர்கள் சங்கம்**

நாட்டில் பொருளாதார நெருக்கடியான நேரத்தில் மலர்ந்திருக்கும் தீபாவாளி திருநாள் அனைவர் வாழ்விலும் சுபிட்சம் பொங்கும் நாளாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றோம் என்று தோட்ட சேவையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரொபட் பிரான்சிஸ் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,...

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள எத்தனிக்கும் இலங்கை வாழ் மக்களுக்குள் பெருந்தோட்டம் சார்ந்து வாழும் மக்கள் பெரும் நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றனர். அதில் குறிப்பாக தோட்ட சேவையாளர்களும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இத் தருணத்தில் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தை தோட்ட சேவையாளர்கள் சங்கம்,முதலாளிமார் சங்கத்திற்கிடையில் நடைபெற்றுக் கொண்டிக்கிறது.எமது கோரிக்கைகளை முதலாளிமார் சங்கத்தினர் ஏற்றுக் கொள்ளும் வரையில் நாம் போராடி வெற்றிகொள்வோம்.

# தீபாவளி சிறப்பு மலர்

## வாழ்வில் இருள் நீங்கி ஒளிதரும் தீபத்திருநாள்



தமிழர்களின் வாழ்வியலோடு விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் பின்னிப் பிணைந்ததவை. அந்த வகையில் தீபாவளி முக்கிய பண்டிகை ஆகும்.உலகெங்கும் வாழ்கின்ற இந்துக்களின் பொதுவான பண்டிகையாக தீபாவளி விளங்குகின்றது.

தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று அர்த்தம். தீபம் என்றால் விளக்கு. ஆவளி என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி இருள் நீக்கி ஒளி தரும் பண்டிகையே தீபாவளி ஆகும்.

தீபஒளி திருநாள் என்று அழைக்கப்படும் தீபாவளியை இந்துக்கள் மட்டுமல்லாது உலகின் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களும் கொண்டாடுகின்றனர். தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதற்கு மூன்று விதமான வரலாறுகள் உள்ளன.

இராமாயணத்தில் இராமன் இராவணனை அழித்து விட்டு தனது வனவாசத்தையும் முடித்து விட்டு மனைவி சீதை மற்றும் சகோதரன் இலட்சுமணனுடன் அயோத்தி திரும்பினார். அந்த நாளை, அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த நாள்தான் தீபாவளி என்று கொண்டாடப்படுகிறது என்று ஒரு சாரார் கூறுகிறார்கள்.

இரண்டாவது வரலாறு வேறு விதமானது.

கந்தபுராணத்தின்படி சக்தியின் 21 நாள் கேதார கௌரி விரதம் முடிவுற்ற நாள் தீபாவளியாக கொண்டாடப்படுகிறது. இந்த விரதம் முடிந்த அன்றுதான் சிவன் சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று அர்த்தநாரீஸ்வரர் உருவம் எடுத்தார் என்று சொல்லப்படுகிறது.






மூன்றாவது வரலாறுதான் மக்களால் அதிகம் பேசக்கூடிய தீபாவளி பண்டிகை வரலாறு ஆகும். நரகாசுரனை வதம் செய்த வரலாறு. இரண்யாட்சன் என்ற ஒரு அரக்கன் பூமாதேவியை கடத்திக் கொண்டு போய் பாதாளலோகத்தில் மறைத்து வைத்திருந்தான்.

அப்போது மஹாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து, அரக்கர்களிடம் போரிட்டு பூமாதேவியை காப்பாற்றுகிறார். அதனால் ஏற்பட்ட பரிசத்தால் பூமாதேவிக்கு பவுமன் என்ற அரக்க குணம் கொண்ட மனிதன் பிறந்தான்.

பவுமன்(நரகாசுரன்) பூலோகத்தை ஆட்சி செய்து கொண்டு இருந்தான். அவனுக்கு பேராசை அதிகரித்து விண்ணுலகத்தை ஆட்சி செய்ய விரும்பினான். அதற்காக பவுமன் சாகா வரம் வேண்டி பிரம்மதேவனை நோக்கி கடும் தவம் செய்தான். பிரம்மதேவன் அவனுக்கு காட்சி தருகிறார்.

அப்போது பிரம்மதேவன், மனிதனாக பிறந்த அனைவரும் ஒரு நாள் இறந்துதான் ஆகவேண்டும் என்று கூறுகிறார். பெற்ற தாய் மகனை கொல்ல மாட்டாள் என்ற எண்ணத்தில், என்னை பெற்ற தாயை தவிர வேற யாரும் என்னை கொல்லக் கூடாது என்று வரம் வாங்கி கொள்கிறான். அதற்கு பிறகுதான் நரகாசுரன் என்ற பெயர் வந்தது.

மனிதனாக பிறந்து அசுரனாக மாறிய அந்த நரகாசுரன் விண்ணுலகம் போய் தேவர்கள் எல்லோரையும் வெற்றி கொண்டு அவர்களுடைய பெண் குழந்தைகள் 16,100 பேரை கடத்தி வந்து அவனுடைய அந்தப்புரத்தில் சிறை வைத்தான்.

இந்திரனுடைய தாயார் அதிதி அவர்களின் காது தோடு மற்றும் வருணனுடைய அரசவை குடையையும் திருடி எடுத்து வருகிறான். அப்போது மகா விஷ்ணு கிருஷ்ண அவதாரம் எடுத்திருந்தார், பூமாதேவி சத்யபாமா என்ற பெயரில் அவதரித்து கிருஷ்ணரை மணந்து கொள்கிறார். இந்திரன் நரகாசுரனின் செயல்களை கிருஷ்ணரிடம் சொன்னதும், கிருஷ்ணர் சத்தியபாமாவை அழைத்துக் கொண்டு நரகாசுரனுடன் போர் செய்யச் சென்றார்.கிருஷ்ண பரமாத்மாவுக்கும் நரகாசுரனுக்கும் கடுமையான போர் நடந்தது. கிருஷ்ணர் காயமடைந்தது போல் மயங்கி விழுகிறார். அதை பார்த்து கோபமடைந்த சத்யபாமா நரகாசுரன் தனது மகன் என்று தெரியாமல் அம்பு எய்து தாக்குகிறார்.

நரகாசுரன் இறக்கும் நிலைமைக்கு சென்றுவிடுகிறான். அந்தவேளையில், பூமாதேவியின் அவதாரம் தான் சத்யபாமா என்று அவனுக்கு தெரிகிறது. தன்னுடைய மகனை தன் கையாலே கொன்றுவிட்டதாக எண்ணி சத்யபாமா கண்ணீர் விடுகிறாள். நரகாசுரன் தான் செய்த பாவத்திற்கு மன்னிப்பு கேட்டு, அவனுடைய தாய், தந்தையரிடம் ஒரு வரம் கேட்கிறான். தன்னுடைய இறப்பை துக்கமாக எடுத்துக் கொள்ளாமல் எல்லோரும் சந்தோசமாக கொண்டாட வேண்டும் என்று கேட்கிறான். அதனால் தீபாவளி என்ற பண்டிகை உதயமானது.

இதனால்தான் நரகாசுரனின் இறப்பை, இந்துக்கள் பட்டாசு கொளுத்தியும், தீபம் ஏற்றியும், கோலமிட்டும், தீபாவளி வாழ்த்துக்களுடனும் கொண்டாடுகின்றனர்.

**வி.ரி.சகாதேவராஜா...**



## மக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பது தீபத்திருநாள்

தீபாவளிப் பண்டிகையை இந்துக்கள் மாத்திரமன்றி சீக்கியர்களும், சமணர்களும் கொண்டாடுகின்றனர். வரிசையாய் விளக்கேற்றி, இருள் நீங்கி, ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும். தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாக ஐதீகம். ஒவ்வொருவர் மனதிலும் இருள் உள்ளது . அகங்காரம், பொறாமை, தலைக்கனம் போன்றவற்றை அகற்ற வேண்டும். தீயகுணத்தை எரித்துவிட வேண்டும். தீபாவளி தினமான இன்று அனைவரும் அதிகாலையில் எழுந்து கொள்வர். இல்லத்தின் மூத்தஉறுப்பினர்களின் கால்களில் நலங்கு( மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவை) இட்டுமகிழ்வர். பின்னர் எண்ணெய்க் குளியல் (கங்கா குளியல்) செய்வர். நல்லெண்ணெயில் ஓமம் மற்றும் மிளகு போட்டுக் காய்ச்சுவது சிலரது வழக்கம். மக்கள் புத்தாடை உடுத்தியும் பட்டாசுகள் கொளுத்தியும் மகிழ்வர் .





பொதுவாக தீபாவளி தினத்தன்று பாரம்பரிய உடைகளை அணியவே பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர். அநேக பெண்கள் புடைவையும் குறிப்பாக பட்டுப்புடவ ) ஆண்கள் வேட்டியும் அணிவர். தீபாவளி அன்று ஒவ்வொரு இல்லத்திலும் மங்கள இசையான நாதசுவரம் ஒலிப்பது சிறப்பாகும். தீபாவளி தினத்தில் இனிப்புக்கள் தயாரித்து ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வர் . லட்சுமி பூஜை தீபாவளியின் மிகப் பெரிய அம்சமாகும். இந்த புனித நாளில் லட்சுமிதேவி, விநாயகர் மற்றும் சரஸ்வதிதேவி ஆகியோர் மாலை மற்றும் இரவு நேரங்களில் போற்றப்படுகிறார்கள். புராணங்களின்படி லட்சுமி தேவி பூமிக்கு இறங்கி, ஒவ்வொரு வீட்டையும் பார்வையிடுகிறார். எனவே லக்ஷ்மி தேவியைப் பிரியப்படுத்தவும், அவரது தெய்வீக ஆசீர்வாதங்களை அனுபவிக்கவும் இந்த சரியான தருணத்தில் வீட்டை முறையாக சுத்தம் செய்து விளக்கு ஏற்றி வழிபாடு செய்யப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

வீட்டை சுத்தம் செய்து, லக்ஷ்மி பூஜைக்கு முன் தூய்மையின் சாரத்திற்காக நீர் தெளிக்கவும். களிமண் விளக்குகள் மற்றும் கோலங்களால் வீட்டை அலங்கரிக்கவும்.

பூஜைக்காக பலகை உருவாக்கவும். அதன் மேல் ஒரு சிவப்பு துணியைப் பரப்பி, லக்ஷ்மி தேவி மற்றும் விநாயகர் சிலைகளை அதன் மேல் வைக்கவும். இரண்டின் படத்தையும் ஒரே நோக்கத்திற்காகப் பயன்படுத்தலாம்.

லட்சுமி தேவி மற்றும் விநாயகர் மீது மஞ்சள் மற்றும் குங்குமம் போட்டு வைக்கவும். ஒரு விளக்கு (களிமண் விளக்கு) ஏற்றி, சந்தனம், அரிசி, மஞ்சள், குங்குமம் போன்றவற்றை வைத்து உங்கள் பக்தியை வழங்குங்கள்.



லட்சுமி பூஜைக்குப் பிறகு, சரஸ்வதி, காளிதேவி, விஷ்ணு மற்றும் குபேர் ஆகியோரை வணங்குவது சடங்குகளின் போது செய்யப்படுகிறது. பூஜை விழாக்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து செய்யப்பட வேண்டும்.

லட்சுமி பூஜையைத் தொடர்ந்து, புத்தகங்கள், வணிகம் அல்லது செல்வம் தொடர்பான பிற உபகரணங்களுக்கு மரியாதை செலுத்தலாம். பூஜை முடிந்ததும், இனிப்புகள் மற்றும் பிரசாதம் வழங்கலாம். இன்றைய தினம் பெரியோரை வணங்கி வாழ்த்து பெறுவது நன்மை பயக்கும்.

தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம் உள்ளது. இன்றைய தினம் அதிகாலையில் எல்லா இடங்களிலும் தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமியும் அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில் பூமாதேவியும், புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக கருதப்படுகிறது. அந்த நீராடலைத்தான் கங்கா ஸ்நானம் என்கின்றனர்.

இன்றைய தினம் எல்லா நதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளிலும், நீர்நிலைகளிலும் கங்கா தேவி வியாபித்து இருப்பதாக ஐதீகம் உள்ளது.

தீபாவளி இந்துப் பண்டிகையாய் இருந்தாலும், அனைவரும் ஒற்றுமையாய் கொண்டாடும் பண்டிகையாகும். இத்தீபத்திருநாளில் நாம் அனைவரும் எமது இருளை அகற்றி மனதில் புத்தொளியினை ஏற்றி எதிர்காலத்தை சுபிட்சமாக்குவோம்.

**நடராஜன் ஹரன் ...**

## மக்கள் வாழ்வு சிறக்கட்டும்!



தீமையகன்று
தூய்மை கொண்ட
தீபத்திருநாளே!
இருளகன்று நல்லொளி
திக்கெட்டும் வீசட்டும்,
செங்கதிரோன் ஒளிவெள்ளம் போல
மானுடர் உள்ளங்களில்
இன்ப வெள்ளம் பொங்கட்டும்!
இல்லங்களில் தீபச்சுடர்வரிசை சீரோங்க,
ஆன்மா லயக்கும் ஆலயங்களில்
ஆன்ம கோடிகள் இன்புற்று வழிபட,
தேன் தமிழான தீந்தமிழின்
வாழ்த்தொலி முழங்கட்டும்!
ஒளி தினமதில் உவகை கொள்ள
மானிடர் இடர் களைய சுடர் கொண்டு
மேவும் அகஜோதியில் படர்மலராய்
முல்லை வனம்போல் எல்லையிலா
செழிப்புடன் சீர்நிறையட்டும்!
மண்ணகமதில் புன்னகை தவழ,
விண்ணகமதில் தேவரும் மூவரும்
பூமாரி பொழிய, புவிமாந்தர் புத்தொளி
காண சுடர்மிகு நந்நாளில் சுகபோகம்
தளைத்திட ஈடிலா இலங்கையில்
தமிழர் வாழ்வு சிறக்கட்டும்!
இனிய தீபத்திருநாள் நல்வாழ்த்துகள்....!

**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்**

## தீபத்திருநாளில் காரிருள் நீங்கட்டும்



காத்திருந்து வந்தவிழா
காரிருளை போக்கிடுமே!
புத்தாடை பளபளக்க
புதுவெடியும் படபடக்க
தீயவை ஓடி
தித்திப்பை தேடி
நல்லவர்கள் கூடி
நல்லதை பாடி
உள்ளங்கள் கூடி
உவகையில் ஆடி
சொந்தங்கள் கூடி
சொர்க்கத்தை நாடி
திசையெங்கும் திருநாளாய்
தீப ஒளி பெருநாளாய்
மனமெங்கும் மகிழ்ச்சி ஒலி
மத்தாப்பாய் சிரிக்கட்டும்!

**ஸ்ரீராம் பழனிசாமி**

# தீபாவளி சிறப்பு மலர்

# உள்ளத்தில் நிறைந்த அழுக்குகளை அகற்ற வேண்டுமென்பதே தீபாவளியின் அர்த்தம்

இந்துக்களால் கொண்டாடப்படும் விழாக்களில் தீபாவளி முதன்மையான ஒன்றாக உள்ளது. இந்துக்களின் கலாசாரத்தில் பண்டிகைகள் ஆன்மீக வளர்ச்சிக்கு துணைநிற்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளன

மக்கள் ஒன்றாகக் கூடுவது, இல்லங்களை அலங்கரிப்பது, ஒவ்வொரு வீட்டையும் ஒவ்வொரு தெருவையும் வண்ணமயமாய் மாற்றுவது, இனிப்புகளும் பரிசுகளும் பரிமாறிக் கொள்வது என இந்துக்களின் கலாசாரத்தில் விழாக்கள் சிறப்பாக உள்ளன..

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் தீபாவளி பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. தீபாவளி தீபங்களின் திருவிழா. நகரங்களிலும் கிராமங்களிலும் மக்கள் ஆயிரக்கணக்கான தீபங்களை ஏற்றி கொண்டாடுவதை கண்கூடாகப் பார்த்திருப்போம்.

தீபாவளிப் பண்டிகை மக்களுக்கு குதூகலம் அளிப்பதாக உள்ளது. கிராமங்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், பெரியவர்கள் என அனைவரும் ஒன்றாகக் கூடி, வீதியெல்லாம் அலங்கரித்து, கோலமிட்டு, தெருவெல்லாம் தோரணம் கட்டி, ஆடல்பாடல் என கொண்டாடிய காலமொன்று இருந்தது. இன்று அவ்வாறான கொண்டாட்டங்கள் இல்லாமல் போயுள்ளன. கொண்டாட்டத்தின் வடிவம் மாறிவிட்டது.

அக்காலத்தில் மக்களிடம் தூய்மையாக வாழும் முறை இருந்தது. இதனால் மக்களால் நோயின்றி ஆரோக்கியமாக அமைதியாக வாழ முடிந்தது. மக்கள் அமைதியாக ஆரோக்கியமாக நிறைவுடன் வாழ்ந்தால்தானே கொண்டாட்டத்தைப் பற்றி நினைக்க முடியும்!

வருடத்தின் 365 நாட்களும் 365 திருவிழாக்கள் அக்காலத்தில் மக்கள் மத்தியில் இருந்தன. மனித வாழ்க்கையே கொண்டாட்டமாய் மாறிப்போவதற்கு இதுபோல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், தற்போது எஞ்சியுள்ளதோ சில விழாக்கள் மட்டுமே. அலுவலகமும், தொலைக்காட்சியும் நம் திருவிழாக்களை விழுங்கிவிட்டன.

அதிலும் நடைமுறையில் தீவிரமாக இருப்பதென்னவோ 8, 10 விழாக்கள் மட்டுமே. இதனை அப்படியே விட்டுவிட்டால் அடுத்த தலைமுறைக்கு கொண்டாட்டங்களே இருக்காது. பொருள் ஈட்டுவதும் உணவு உண்பதும் என வாழ்க்கை கடந்து போய்விடும். பலரும் அப்படித்தானே வாழ்ந்து வருகிறார்கள்? விழா நாளன்று விடுமுறை, நீண்ட நேரத் தூக்கம், திரைப்படம், தொலைக்காட்சி பெட்டி என்றாகிவிட்டது வாழ்க்கை.

விழாக்கள் என்றால் அதிகாலை நான்கு மணிக்கு விழித்து, பெரும் உற்சாகத்துடன் மக்கள் தம்மை தயார் செய்துகொண்ட காலம் இருந்தது. வீடு முழுக்க பல வேலைகள் நடந்திருக்கும். ஊர் மக்கள் ஓரிடத்தில் கூடி, அங்கு பெரும் கொண்டாட்டம் நிகழும். ஆனால், இன்றைய நிலைமையோ தலைகீழ்.

இந்தக் கலாசாரத்தை மீண்டும் புதுப்பிக்க வேண்டிய சூழ்நிலையில் இன்று நாம் இருக்கிறோம். பொங்கல், மஹாசிவராத்திரி, தீபாவளி ஆகிய கொண்டாட்டங்களுக்கு மீண்டும் உயிர்ப்பூட்ட வேண்டும். பழைய கலாசாரத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும்..

வாழ்வில் இருளை அகற்றி மகிழ்ச்சியையும் விடிவையும் கொண்டுவர வேண்டும் என்பதே தீபாவளித் திருநாளின் நோக்கம்.

கலாசார ரீதியாக தீபாவளியைக் கொண்டாட பல காரணங்கள் இருந்தாலும், வரலாற்று ரீதியாக நாம் சொல்லி வரும்



காரணம், நரகாசுரன் என்னும் தீய அரசனை கிருஷ்ணர் கொன்றார், அதனால் அது நரக சதுர்தசி ஆனது என்பதுதான்.

பலவிதங்களில் பார்த்தால், இந்நாள் மிகுந்த மங்களம் சேர்க்கும் நாளாக ஆகிறது. இந்நாளில் ஒருவர் லக்ஷ்மியைத் தேடினால் அவருக்கு லக்ஷ்மி கடாக்ஷம் கிட்டும் எனவும், ஒருவருக்கு ஆரோக்கியம் வேண்டுமென்றால், அன்னை சக்தி வருவாள் என்றும், கல்வி வேண்டுபவருக்கு சரஸ்வதி தேவி நலம் செய்வாள் என்றும் நம்பிக்கை நிலவுகிறது.

இந்நாள் ஒருவருக்கு நல்வாழ்வு வழங்கும் என்பதை மரபுவழியாக நாம் பேசியே வந்திருக்கிறோம்.

தீபாவளி ஒளியின் திருநாள். இந்நாள் வெளியில் விளக்கேற்றுவதைப் பற்றி அல்ல, நம் அகத்தை ஒளியேற்றச் செய்வதற்கான ஒரு நாள். வெளிச்சம் என்றால் தெளிவு.

தெளிவில்லாமல் நீங்கள் எதைச் செய்ய முற்பட்டாலும் அது அழிவை நோக்கி அழைத்துச் செல்லும். வெளிச்சம் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் என்று நாம் சொல்வது, வெறும் நம் கண்ணால் காண்பதைப் பற்றி மட்டும் சொல்லவில்லை, பலவிதங்களில் நமக்குள் அது தெளிவினை உண்டாக்கும் என்பதால்தான். உங்களைச் சுற்றி நடப்பதை நீங்கள் எத்தனை தெளிவான பார்வையுடன் காண்கிறீர்கள் என்பதே உங்கள் வாழ்க்கையை நீங்கள் எவ்வாறு நடத்துகிறீர்கள் என்பதை நிர்ணயிக்கும்.

நமக்கு நன்மை விளைவிக்கும் தீபாவளி நாளை பட்டாசு கொளுத்திக் கொண்டாடுகிறோம். பட்டாசு கொளுத்துவது, புத்தாடை அணிவது மட்டுமல்ல, நம் நாட்டில் இனிப்புப் பலகாரங்கள் இல்லாமல் பண்டிகைகள் எப்படி நிறைவுபெறும்? அத்தையும் மாமியும் மாவு எடுத்துக் கொடுக்க, பாட்டியின் கைப்பதம் சுவையை எடுத்துக் கொடுக்கும்.

பலகாரங்களை தயாரிப்பதற்கு ஆழ்ந்த ஈடுபாடு அவசியம். மக்கள் தங்கள் வாழ்க்கையை நேசித்தால் மட்டுமே இதுபோன்ற ஈடுபாட்டுடன் வாழ முடியும்.

அக்காலத்தில் வீட்டில் உணவு தயாரிக்கும்போது பெண்கள் பாட்டுப் பாடிக் கொண்டே உணவு சமைப்பார்கள். உடலுக்கு மட்டும் உணவல்ல, அதில் அன்பு இருக்கும். ஈடுபாடு இருக்கும். அதில் கைப்பக்குவம் இருக்கும். அந்த உணவை உண்ணும் மனிதரின் உடலும் அதுபோலவே உருவாகும்.

வாழ்வில் இருள் நீங்கிய கொண்டாட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதே தீபாவளித் திருநாளின் நோக்கம். பட்டாசுகளும், மத்தாப்புகளும் உங்களுக்குள் இருக்கும் இருளை அகற்றி விடட்டும். ஏதோ ஒருநாள் மட்டும் கொண்டாடி, மறந்து போவதற்கான நாள் அல்ல தீபாவளி, உங்களுக்குள் ஒவ்வொரு நாளும் தீபாவளியாகத்தான் இருக்க வேண்டும்.

சத்குரு..



# ஒழுக்கவிழுமியக் கருத்துகளை வலியுறுத்தும் இந்துப் பண்டிகை

ஒவ்வொரு பண்டிகைக்கு பின்னாலும் அது கொண்டாடப்படுவதற்கு ஒவ்வொரு காரணங்கள் இருக்கும். தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவதற்கு பல புராண கதைகளும் வரலாற்று கதைகளும் இருக்கின்றன.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனிதநேய ஒருமைப்பாட்டை எமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழ வைப்பவை பண்டிகைகள். தனிமனித சமூகத்தின் நல்வாழ்வைக் கருதி நம் முன்னோர்களால் மிகுந்த சிந்தனையுடன் நெறிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களால் பல்வேறு விதமான பண்டிகைகள் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்து சமயம் தன் பண்பாட்டை ஒழுங்குபடுத்த பல்வேறு முறையியல் தன்மைகளை கொண்டுள்ளது. அவற்றுள் பண்டிகைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவ்வகையில் தீபாவளி பண்டிகையும் சிறப்புப் பெறுகின்றது.



தீபங்களை வரிசையாக ஏற்றி ஒளிமயமான இறைவனை வழிபடும் புண்ணிய



தினமே தீபாவளி. ஒரே விளக்கு ஏனைய விளக்குகளை ஒளி வீசச் செய்யும். அந்த முதல் ஒளியே பரமாத்மா, அதனால் ஒளி பெறும் மற்ற விளக்குகள் ஜீவாத்மாக்கள். ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் பரம்பொருளே ஆதார ஒளியாகும்.

இந்த உண்மையை உணர்த்தும் வகையில்தான் ஒளிவிளக்கு திருநாளாக தீபாவளி கொண்டாடப்படுகின்றது. தீபாவளி பண்டிகையின் தோற்றம் பற்றி இந்துக்கள் மத்தியில் பல்வேறு ஐதீகங்கள் காணப்படுகின்றன. இவற்றில் நரகாசுரன் எனும் பழமரபுக் கதையின் அடிப்படையில் தீபாவளி தோன்றியதே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

மஹாவிஷ்ணு தனது அவதாரங்களில் ஒன்றான வராக அவதாரம் எடுத்தபோது பூமிதேவியை மணந்து பெற்ற பிள்ளையே நரகாசுரன் என்பவனாவான். அவன் கடும் தவத்தினால் பல ஆற்றல்களை பெற்றமையினால் அவன் தானே கடவுளிலும் மேலானவன் என்ற மமதை ஏற்பட்டது. இதனால் தேவர்களையும், ரிஷிகளையும் வருத்தினான் நரகாசுரன்.

இவனின் கொடுமை தாங்க முடியாத தேவர்களும், ரிஷிகளும் தம்மை காத்தருளும்படி மஹாவிஷ்ணுவிடம் வேண்டி நின்றார்கள். தேவர்களின் வேண்டுதலுக்கமைய மஹாவிஷ்ணு கண்ணன் அவதாரம் எடுத்தார். நரகாசுரன் தன் கடும் தவத்தால் இரவிலோ, பகலிலோ தன்னைக் கொல்ல முடியாத இறவாவரம் வேண்டியிருந்தான்.

பல மாயை விளையாட்டுக்களின் தலைவனான கண்ணன் இரவும் பகலுமற்ற அந்திசாயும் நேரத்தில் சத்தியபாமாவின் உதவியுடன் அவனை சங்காரம் செய்தார். இந்த நரகாசுரன் வதம் செய்யப்பட்ட நாளே இருள் நீங்கி ஒளி பெற்ற நாளாக எண்ணி தீபாவளியாக கொண்டாடப்படுகின்றது.

இந்துக்கள் மட்டுமன்றி சீக்கியர்களும், சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர்.

ஆ.சிவசுப்பிரமணியம் ...

தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்லப்படுகின்றது. அன்றைய தினம் அதிகாலையில் எல்லா இடங்களிலும் தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமியும், அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில் பூமாதேவியும், புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக கருதப்படுகின்றது.

அன்றைய தினம் எல்லா நதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளிலும், நீர் நிலைகளிலும் கங்கா தேவி வியாபித்து நிற்பதாக ஐதீகம். இந்நாளில் எண்ணெய் தேய்த்து நீராடுவோர் கங்கையில் நீராடிய புண்ணியத்தையும் திருமகளின் அருளையும் பெறுவர்.

தீபாவளித் திருநாளில் பிரிந்து வாழும் பல குடும்பங்கள் ஒன்று சேர்கின்றன. பகை உணர்வுகளை மறந்து ஒற்றுமையே மேலோங்குகின்றது. வீட்டிலே இரவு ஏற்றும் தீபவிளக்குகளை இரவு முழுவதும் அணையாது எரிய விடுவர்.

இதை மாணிக்கதீபம் என அழைப்பர். இவ்வாறு செய்வதன் மூலம் ஸ்ரீ லஷ்மியின் அனுக்கிரகம் கிடைக்கும் என நம்புவதும் இந்து சமய மக்களின் வழக்கமாகும். சமுதாயத்தில் அர்த்தமும் உயிரோட்டமும் உள்ள வாழ்க்கைப்படிமம் என்று கூறலாம்.

இப்பண்டிகை தத்துவம் நிறைந்ததாகவும் ஒழுக்கவியல் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்பவையாகவும் உள்ளது. இந்நாளில் பகைவர்களும் தம் கோபங்களை மறந்து சகோதரதத்துவத்துடன் வாழ முனைகின்றனர். அவ்வகையில் இது வெறும் பண்டிகையாக மட்டுமல்லாது வாழ்வைச் செம்மைப்படுத்தும் ஓர் நிகழ்வாக அமைகின்றது.

பரவலாகக் கொண்டாடப்படும் பண்டிகையான தீபாவளி, இந்துக்கள் வசிக்கும் அனைத்து நாடுகளிலும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இந்தப் பண்டிகை தமிழ் மாத கணக்கீட்டின்படி பெரும்பாலான வருடங்களில் ஐப்பசி மாதத்தில் வரும் அமாவாசை தினத்தன்று கொண்டாடப்படுகிறது. சில வருடங்களில் மட்டும் அமாவாசைக்கு முந்தைய தினம் கொண்டாடப்படுகிறது. ஆங்கில நாட்காட்டியின்படி, அக்டோபர் 17 முதல் நவம்பர் 15க்குட்பட்ட நாட்களில் தீபாவளிப் பண்டிகை அமைகிறது.

# நற்சிந்தனைகளென்ற தீபத்தை ஏற்றுவோம்!

என்றென்றும் உங்கள்
இல்லங்களிலும் உள்ளங்களிலும்
மகிழ்ச்சி பொங்க
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
தீபங்கள் பிரகாசிக்க பட்டாசு
வெடிக்க, மகிழ்ச்சியுடன்
இந்நாளை கொண்டாட
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
பட்டாசுகள் வெடிக்கும்
போது தீமைகளும் வெடித்து
சிதறட்டும்... அனைவருக்கும்
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
உங்கள் இல்லத்தில் இன்பமும்
உள்ளத்தில் மகிழ்ச்சியும்
பொங்கிட இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்..!
உங்களது ஆசைகளும்
கனவுகளும் நிறைவேறட்டும்
இந்த நாள் இனிய நாளாக
அமைய இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்..!
உங்கள் வாழ்க்கையில்
துன்பங்கள் எல்லாம்
கரைந்து போக.. .ஒளிமயமான
எதிர்காலம் பிறக்க... இந்த
தீபாவளி திருநாளில்
மகிழ்ச்சியுடன் இருக்க
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
தீபத்தின் ஒளியாய் தீபாவளி
மலரும்.. மகிழ்ச்சியும்
வெற்றியும் ஒருங்கே மலர்ந்திட
அனைவருக்கும் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்!
உங்கள் வாழ்க்கையில்
இருக்க கூடிய எல்லா
துன்பங்களும் தீப ஒளியால்
விலகி... உங்கள் வாழ்க்கை
தீப ஒளியாய் என்றும் பிரகாசிக்க
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்..!
உங்களுக்கும் உங்கள்
குடும்பத்தினருக்கும்
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்..!
நண்பர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்..!
எல்லா தடை கற்களும் படிக்கற்களாக
மாறி துன்பங்கள் நீங்கி
இன்பங்கள் மலர என்
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்..!
தித்திக்கும் தீபாவளி திருநாள்
நல்வாழ்த்துக்கள்
அன்பு நண்பர்கள் மற்றும்
அவர் குடும்பத்தினர் அனைவருக்கும்
இனிய தீப திருநாள் வாழ்த்துக்கள்..!
சகல செல்வங்களையும் இந்த
தீப திருநாள் உங்களுக்கு
வழங்கட்டும்... இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்..!
தீப ஒளியில் இருள் விலகுவது
போல் உங்கள் வாழ்விலும்
துன்பம் விலகி இன்பம் நிலைத்து
இருக்கட்டும்..
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்..!
இனிய தீப திருநாள் வாழ்த்துக்கள்..
அனைவரது இல்லங்களிலும்
உள்ளங்களிலும் அன்பின் ஒளி
பரவட்டும்...மகிச்சியும்
இனிமையும் நிறையட்டும்..!
அனைவர் வாழ்விலும் இருள்
மறைந்து ஒளி மலர அன்பான
உறவுகளுக்கு... இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்..!
தீபாவளி வாழ்த்துக்கள்..
உங்கள் இல்லத்தில் மகிழ்ச்சியும்,
மனநிறைவும், ஆரோக்கியமும்
செல்வமும் நிறையட்டும்!
உங்கள் வாழ்வு என்றும்
இனிதாய் அமைய
தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்..!
அன்பு கொண்ட இதயங்கள்
அனைவருக்கும் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்!
இந்த இனிய தீபத் திருநாளும்
உங்கள் வாழ்க்கையும்
ஒளிமயமாக பிரகாசிக்க
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்..!
வாழ்க்கையில் துன்பங்கள்
கரைந்து இன்பங்கள் நிறைய
இந்த தீப திருநாளில் வாழ்த்துக்கள்!
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
உங்கள் வாழ்க்கையில் துன்பங்கள்
எல்லாம் கரைந்து போக
ஒளிமயமான எதிர்காலம் பிறக்க
இந்த தீபாவளி திருநாளில்
மகிழ்ச்சியுடன் இருக்க
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
நல்ல எண்ணங்கள் என்ற
தீபவிளக்கை ஏற்றி வைத்து
இருள் என்ற தீமையை
அழித்திடுங்கள். இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
மகிழ்ச்சியான இந்த நாளில்
உங்கள் வாழ்வில் வெளிச்சம்
பிரகாசிக்கட்டும்...இனிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

ராஜ் சந்தோஷம்



# இன்று சர்வதேச போலியோ ஒழிப்பு தினம்

**இலங்கை ரோட்டரிக் கழகம் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஆற்றிவரும் பெரும் பங்களிப்பு தொடர்பில் கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஓய்வு நிலை திட்டமிடல் பிரதிக் கல்வி பணிப்பாளர், 2018 முதல் 2019 வரை கிளிநொச்சி நகர ரோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவர் மகாலிங்கம் பத்மநாதன் தினகரனுடனான கலந்துரையாடலில் தெரிவித்த கருத்துகள்...**

கலந்துரையாடியவர்
**இக்பால் அலி**

### ? உங்களுடைய ஆரம்ப கால ரோட்டரிக் கழகத்தினுடைய நடவடிக்கைகள் என்ன?

1984 இல் கிளிநொச்சி ரோட்டரிக் கழகத்தில் அங்கத்துவம் பெற்றேன். கிளிநொச்சி ரோட்டரிக் கழகம் நாட்டில் நிலவிய பிரச்சினைகள் காரணமாக இரண்டு முறை செயலிழந்து போனது. அது முதலாவதாக சமாதான கால கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு மீண்டும் 2004 இல் செயலிழந்து போனது. போர் நிறைவுக்குப் பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்பு 2014 இல் இரண்டாவது தடவையாக மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. இது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி தலைமையில் மீள ஆரம்பிக்கப்பட்டது.

இதில் நான் பல்வேறு பதவிகள் வகித்துள்ளேன். முன்னாள் றொட்டறிக் கழகத் தலைவர், பவுண்டேசன் தவிசாளர், சமூக சேவைகளுக்குரிய தவிசாளர் எனப் பல பதவிகள் வகித்துள்ளேன்.

### ? போலியோ ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாடு ஏன் அவசியமானது?

சர்வதேச ரோட்ரிக் கழகம் போலியோ ஒழிப்பு விடயத்தில் உலகில் முக்கியமான பணியைச் செய்து வருகின்றது. இதில் பல விடயங்கள் இருக்கின்றன. போலியோ ஒழிப்பு விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மற்றும் போலியோ சொட்டு மருந்து வழங்குவதன் காரணத்தினால் போலியோவினுடைய தாக்கம் குறைவாக இருந்து வருகிறது.

எனினும் அண்மைக் காலங்களில் இந்த போலியோவின் தாக்கம் அதிகரித்துள்ளது. இன்னும் உலக நாடுகளில் முற்றாக ஒழிக்கப்பட வில்லை என்பது முக்கியமான விடயம்.



தொடர்ந்து இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டை செய்து கொண்டு இருந்தால் போலியோ வைரஸை முற்றாக ஒழிக்க முடியும். அதை விட அண்மைக்காலங்களில் சில நாடுகளில் மீண்டும் போலியோ வைரஸ் திரும்பவும் தலைதூக்குவதை காணக் கூடியதாக இருக்கிறது.

பாகிஸ்தான், அப்கானிஸ்தான், ஆபிரிக்கா நாடான மொசாம்பிக் போன்ற நாடுகளில் உள்ள பிள்ளைகளுக்கு இந்தப் போலியோ வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் முற்றாக போலியோ வைரஸ் தாக்கத்தை தடுக்கவில்லை என்றால் அநேகமான குழந்தைகள் படுக்கையிலும் நடக்க இயலாமலும் மாறிவிடுவார்கள். எனவே நாங்கள் தொடர்ந்தும் போலியோவுக்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்பாடடை முன்னெடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

### ? அப்படியானால் கிளிநொச்சி ரோட்டரிக் கழகத்தின் செயற்பாடுகள் பற்றிக் கூறுவீர்களா?

கிளிநொச்சி நகர ரோட்ரிக் கழகத்தைப் பொறுவத்தவரையில் பல்வேறு விதமான சமூகச் சேவைகளைச் செய்து கொண்டிருக்கிறது. பாரிய வேலைத் திட்டம் என்று சொல்லும் போது கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கிளோபல் கிரான்ட் எனச் சொல்லப்படும் வேறு தேசங்களுடைய ரோட்ரிக் கழகங்களுடனும் இணைந்து மில்லியன் கணக்கில் டொலரைப் பெற்று 'டையரியஸ் யுனிட்' மாவட்ட கிளிநொச்சி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

அவற்றோடு பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு புலமைப் பரிசில் நிதி உதவி வழங்குதல், நோய் தாக்கத்துக்குள்ளானவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்குதல், வசதியற்ற பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல், மாதாந்தம் விசேட கொடுப்பனவு போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

இவை தவிர வணபிதா அருட்தந்தை யோசுவா அடிகளார் தலைமையில் நாட்டின் பொருளாதார நெருக்கடியான சூழலை மையமாகக் கொண்டு பல்வேறு விதமான சேவைகள் சிறந்த முறையில் செய்



Rtn PP Champa Perera
District Polio Chair





Rtn PP Pubudu de Soysa
District Governor srilanka
& Maldives RiD 3220

யப்படுகிறது. 'மலரும் கிளிநொச்சி' என்ற செயற் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. அது உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக இயற்கை முறை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் கிராமங்கள் தோறும் விவசாயிகளைத் தெரிவு செய்து விவசாயிகளுக்கு ஒரு ஊக்குவிப்புத் தொகையை ரோட்ரிக் கழகம் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

அத்தோடு 'நடு' என்ற வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. ரோட்ரிக் கழக அங்கத்தவர்களுடைய பிறந்த நாள் தினத்தில் பாடசாலையில் கல்வி பயிலும் வசதிகுறைந்த பிள்ளைகளுடைய வீடுகளுக்குச் சென்று அங்கே பிறந்த நாள் கொண்டாட்டத்தைக் கொண்டாடும் முகமாக தென்னங் கன்றுகளை நடுகின்ற ஒரு செயற்பாடும் ஆகும்.

இன்னும் முக்கியமானதொரு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. 'அணை' என்று சொல்வார்கள். அது ஆரம்ப காலத்தில் இருந்து முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டம். விசேட தேவையுடைய பிள்ளைகள்,நிலையங்களில் இருக்கும் பிள்ளைகள் மற்றும் முதியவர்களுக்கு பாதுகாப்பு துவாய்கள்(Sanitary Napkins) அவசியமாக இருக்கின்றன.ஜயந்திநகர் கிராமத்தில் உள்ள முதியவர்களுக்கும் தேவையாக இருக்கின்றன.



சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியோடு மாவட்ட முழுவதும் எந்தளவு தேவைப்பாடுகள் இருக்கிறது என ஆராய்ந்து அவர்கள் தொடர்ந்து பாவிப்பதற்கான பாரியதொரு செலவை ஒதுக்கீடு செய்வதற்கென அமெரிக்காவிலுள்ள ஒரு ரோட்டரியன் உதவி செய்ய முன்வந்துள்ளார். இதுவும் எங்களுடைய ஒரு முக்கியமான செயற்பாடு ஆகும்.

இதை விட வருடந்தோறும் போலியோ விழிப்புணர்வுச் செயற்பாட்டை கிளிநொச்சி நகர ரோட்ரிக் கழகம் நடத்திக் கொண்டிருக்கிறது. முக்கியமாக 2017 இல் இருந்து போலியோ ஒழிப்பு விழிப்புணர்வை எங்களுடைய மாவட்ட மக்களிடையே நடத்தி வருகின்றோம். ஏனென்றால் தாய்மார்கள் இந்தப் போலியோ மருந்தை எடுத்துக் கொடுப்பதற்கு விரும்புவது இல்லை.பிள்ளைகள் இந்த மருந்தை எடுக்காமல் விட்டால் என்ன விளைவு ஏற்படும் என்று இன்றும் நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. போலியோ ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வூட்டும் பதாதைகள், ஸ்டிக்கர் போன்றவற்றை வாக

ணங்களில் ஒட்டப்பட்டுள்ளதை கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் அவதானித்து இருக்கலாம். அதே போல் நாங்களும் செய்திருக்கிறோம்.

2018 இல் நாங்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள தாதிமார்களின்உதவியோடுதாய்மார்களுடைய மகப்பேற்றுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கிய வருகின்றோம்.நேநீர்கோப்பையில்போலியோ பாதிப்புத் தொடர்பிலான தெளிவூட்டும் சின்னம் ஒன்றைப் பதிப்பித்து தாய்மார்களுக்கு வழங்கி வைத்தோம். இவை போன்ற பல விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை கிளிநொச்சி தாய்மார்கள் இந்தப் போலியோ மருந்தை எடுத்துக் கொடுப்பதற்கு விரும்புவது இல்லை.பிள்ளைகள் இந்த மருந்தை எடுக்காமல் விட்டால் என்ன விளைவு ஏற்படும் என்று இன்றும் நாங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. தாய்மார்கள் இந்தப் போலியோ மருந்தை எடுத்துக் கொடுப்பதற்கு விரும்புவது இல்லை.பிள்ளைகள் இந்த மருந்தை எடுக்காமல் விட்டால் என்ன விளைவு ஏற்படும் என்று இன்றும் நாங்கள் சொல்லிக்



கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

போலியோ ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வூட்டும் பதாதைகள், ஸ்டிக்கர் போன்றவற்றை வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ளதை கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் அவதானித்து இருக்கலாம். அதே போல் நாங்களும் செய்திருக்கிறோம்.

2018 இல் நாங்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள தாதிமார்களின் உதவியோடு தாய்மார்களுடைய மகப்பேற்றுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கிநோம். நேநீர் கோப்பையில் போலியோ பாதிப்புத் தொடர்பிலான தெளிவூட்டும் சின்னம் ஒன்றைப் பதிப்பித்து தாய்மாகளுக்கு வழங்கி வைத்தோம். இவை போன்ற பல விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை கிளிநொச்சி ரோட்டரிக் கழகம் செய்து கொண்டிருக்கிறது.

இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் அருட் தந்தை வண பிதா யோசுவா அடிகளார் தலைமையில் கூடுதலான கிராமங்கள் தோறும் சற்று விரிவாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு முக்கியமான செயற்திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். அதனுடைய முதற்படியாக நேற்று (23) முன்பள்ளி ஆசிரியர்கள் 90 பேர்களை அழைத்து விசேட செயலமர்வொன்றை நடத்தினோம்.

அவர்கள் கிராமங்கள் தோறும் போய் முன்பள்ளியில் கல்வி பயிலும் சிறார்களின் பெற்றார்களை அழைத்து அவர்களுக்கு விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.இவ்வாசிரியர்கள் 90 பேரும் தங்களுடைய கிராமங்களுக்குச் சென்று ஐந்து, ஐந்து குழுவாகப் பிரிந்து சிறு கூட்டம் கூட்டமாக போலியோ ஒழிப்பு விழிப்புணர்வுக் கூட்டங்களை அவர்கள் நடத்த வேண்டும்.

அவர்கள் ஏன் இந்தப் போலியோ ஒழிப்புக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று பிரசாரம் செய்வார்கள்.அதனால் ஏற்படும் விளைவு குறித்து விளக்கி கூறுவார்கள்.அவர்கள் இன்று (24) முதல் 28 ஆம் திகதி வரையிலும் இந்தச் பிரசார முன்னெடுப்பை மேற்கொள்வார்கள். இந்த வேலைத் திட்டத்தை மேற்கொள்ள ஸ்ரீலங்கா ரோட்டரிக் கழகம் பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆசிரியர்கள் சென்று விளக்கமளிக்கும் இடங்களுக்கு ரோட்டரிக் கழகத்தின் பிரதிநிதிகள் மூன்று பேர் சென்று அவர்களுடைய செயற்பாடுகள் எவ்வாறு இருக்கிறது, அவர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என அவதானிக்க போகிறார்கள். இந்தப் போலியோச் செயற்பாட்டாளர்களுக்கு 28 ஆம் திகதிக்கு பின்னர் அவர்களுக்கு சான்றிழ்கள் வழங்கும் வைபவம் ஒன்றையும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

### ? போலியோ ஒழிப்புத் தொடர்பில் வேறு என்ன சமூக சார் நிறுவனங்களுடன் இணைந்து ரோட்டரிக் கழகம் செயற்படுகிறது என்று கூறலாம்?

குறிப்பாக 1905 ஆம் ஆண்டு தான் போலியோ நோய் இனங்காணப்பட்டது.ஆனால் 1988 ஆம் ஆண்டு தான் சர்வதேச ரோட்டரிக் கழகம் இந்தப் போலியோ நோய்க்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்பாட்டை ஆரம்பித்தது. அப்பொழுது உலக சுகாதார நிறுவனத்தோடு இணைந்து இந்தப் போலியோ விழிப்புணர்ச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. யுனிசெப், ஐ.சி. ஆர்.சி. உலக, சுகாதார ஸ்தாபனம் ஆகியன சர்வதேச ரோட்டரிக் கழகத்துடன் இணைந்து இந்தப் போலியோ தடுப்பு மருந்துகளுக்கும் அதன் விழிப்புணர்வூட்டலுக்கும் பாரிய

தொரு நிதி உதவியை வழங்கியிருந்தது.

1988 ஆம் ஆண்டு சர்வதேச ரோட்டரிக் கழகம் இதனைச் செயற்படுத்தினாலும் கூட இலங்கையில் 1993 ஆம் ஆண்டு ரோட்டரி மாவட்டம் 3220 போலியோ தடுப்பு தொடர்பில் அதற்கான தவிசாளர் பதவி நியமனம் வழங்கப்பட்டது. ஆண்டு தோறும் சர்வதேச ரோட்டரிக் கழகத்திற்கு எங்களுடைய ரோட்டரி மாவட்டம் மாலைதீவு இந்த நோய் தடுப்புச் செயற்பாட்டுக்காக சிறிய தொகையில் இருந்து பெரிய தொகை வரையிலும் நிதி உதவியை செய்து கொண்டிருக்கிறது.

### ? நீங்கள் போலியோ ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்த போதிலும் அதன் தாக்கம் இன்று எந்த நிலையில் உள்ளன என்பது பற்றிக் கூறுவீர்களா?

1993 இல் தென்கிழக்கு ஆசியாவில் இலங்கை முதலாவது போலியோ நோயற்ற நாடாக உலக சுகாதார நிறுவனம் பிரகடனப்படுத்தியது. இது ஒரு முக்கியமான விடயமாக இருக்கின்றது. உலகில் 99.5 விகிதம் இந்தப் போலியோ நோய் இல்லாத அளவுக்கு ஒழிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் பிற்காலத்தில் சில நாடுகளில் பிரச்சினைகளைக் கொடுக்கின்ற மாதரி இருக்கிறது. பாகிஸ்தானில் 20 பேர், அப்கா



னிஸ்தானில் 6 பேர், மொசாம்பிக்கில் 7 பேர் என்ற எண்ணிக்கையில் போலியோ நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு பாகிஸ்தா



னில் மரபியல் 21 கொத்தனி இருந்திருக்கிறது.2021 இல் போலியோ விழிப்புணர்வு செயற்பாடுகள் காரணமாக நான்கு கொத்தனியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2022 இல் ஒரு கொத்தனி மட்டுமே காணப்படுகிறது. இது பற்றி கவனத்தில் கொள்ளாமை விடப்பட்டமைக்கான காரணம் கொரோனா தொற்று ஏற்பட்டதனால் ஆகும். கொரோனாவுக்காக கூடுதலான மருந்துகள் விழிப்புணர்வுட்டுதல்கள் என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச ரோட்டரிக்கழும் கொரோனாவுக்காக கூடுதலான நிதி ஒதுக்கீடுகளைச் செய்தன.





உலக சுகாதார நிறுவனம், யுனிசெப், ஐசிஆர்சி ஆகிய சர்வதேச நிறுவனங்களும் கொரோனாவின் பக்கம் கவனம் செலுத்தின. இதன் காரணமாக போலியோவின் தாக்கம் மெல்ல மெல்ல வளர்ந்துள்ளது என்று கூறலாம்.

### ? போலியோ ஒழிப்புத் திட்டத்திற்கு பங்களிப்பு நல்குவோர்கள் பற்றி?.

சுகாதார அமைச்சு, பிராந்திய சுகாதார திணைக்களம் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களினது பங்களிப்பு மிக முக்கியமாக இருக்கின்றது. பிராந்திய சுகாதார ஊழியர்கள் ரோட்டரிக் கழகத்துடன் இணைந்து இந்நாட்டில் பாரிய பங்களிப்பையும் நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சர்வதேச ரோட்டரிக் கழகம் 300 மில்லியன் அமெரிக்கன் டொலர் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. உலகிலுள்ள பிரபல்யமான பில்கேட் போன்ற பெருந் தனவந்தர்களும் உதவி வருகின்றனர்.

### ? இந்நோய் தொடர்பில் நீங்கள் மேலும் என்ன கூற விரும்புகின்றீர்கள்

அண்மையில் அமெரிக்காவில் வயது வந்தவர் ஒருவருக்கு போலியோ நோய் வந்து விட்டது. போலியோ தாக்கம் சிறு வயதில் மட்டும் தான் வரும் என்று இல்லை. வளர்ந்த ஒருவருக்கும் வரும் என்பது

முக்கியமான விடயம். சர்வதேச ரோட்டரிக் கழகம் போலியோவுக்கான பணிப்பாளர் ஒருவரை நியமதித்தது.

ரோட்டரிக் கழகத்தின் இலங்கையின் ஆளுநராக றொட்டரியன் சொய்சா நியமிக்கப்பட்டுள்ளார். சர்வதேச ரோட்டரிக் கழகத்தின் தலைவர் எஸ். ஜனிபர் ஜோன்ஸ் என்பவர் ஆவார். இவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

இன முரண்பாடுகள் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது சர்வதேச ரோட்டரிக் கழகத்தின் தலைவராக இருந்தவர் ரோட்டரியன் கே. ஆர். ரவிந்திரன் ஆவார். அப்பொழுது ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க இருந்தார். அக்காலகட்டத்தில்இந்தபோலியோ தடுப்பு மருந்துகள் வழங்கும் போது இலங்கை முழுவதும் ஒரே நேரத்தில் செய்யவில்லை என்றால் அதாவது ஒரு பகுதிக்குச் செய்து விட்டு மறு பகுதிக்குச் செய்யாது விட்டால் வழங்கப்படும் தடுப்பு மருந்தின் மூலம் எந்தப் பிரயோசனமில்லை என ரோட்டரிக் கழகத்தின் தலைவர் கே. ஆர். ரவீந்திரன், ஜனாதிபதி சந்திரிக்காவுடன் கதைத்தபோது அவர் 'வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் யுத்தம் நிறுத்தம் செய்தால் இலங்கை இராணுவமும் யுத்தம் நிறுத்தம் செய்வதற்கு தயார்' என தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் இரு தரப்பினர்களும் மூன்று நாள் யுத்த நிறுத்தம் செய்தார்கள். வடக்கு கிழக்கு முழுவதும் இராணுவ முன் அரங்குகள் உள்ள எல்லா இடங்களுக்கும் உலங்கு வானூர்தியில் போலியோ தடுப்பு மருந்துகள் எடுத்துச் செல்லப்பட்டு சகலருக்கு போலியோ மருந்துகள் வழங்கப்பட்டன. இது ஒரு முக்கியமான திருப்பு முனையாகும். நானும் ரோட்டரிக் கழகத்தில் இருந்தமையால் இந்த மருந்துகளை எடுத்துச் சென்று செயற்பட்டுள்ளேன். இப்படி இந்நாட்டில் வழங்கி வந்தமையலே எமது நாட்டில் போலியோ இல்லாமல் இருக்கிறது.

இருப்பினும் நாங்கள் கை விட்டுப்



போட்டு இருக்க முடியாது. சில நாடுகளில் திரும்ப அந்த நோய் வருகின்றன.ஆகவே நாங்கள் கட்டாயமாக உலக முழுவதும் போலியோ தொடர்பான விழிப்புணர்வூட்டுதலையும் அதற்குரிய தடுப்பு மருந்து வழங்குதலையும் செய்து கொண்டு தான் இருக்க வேண்டும்.

போலியோ ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாட்டை முன்னெடுக்கும் போது பண வசதிகள் தேவையாகும்.கூடுலான நிதி வசதியில்லை என்றால் இந்த தடுப்பு மருந்துகளை வழங்க முடியாது. ஒரு தடுப்பு மருந்துக்கு 3 அமெரிக்க டொலர் செலவாகும். ஒரு பிள்ளைக்கு 4 சொட்டு மருந்து வழங்க வேண்டும். அப்படியானால் ஒரு பிள்ளைக்கு மொத்தமாக 12 அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது.

அமெரிக்கா,ஐக்கிய இராஜியம் போன்ற நாடுகளில் தடுப்பூசிகள் ஏற்றுகின்றார்கள். ஐக்கிய இராஜியத்தில் போலியோ வைரஸை தண்ணீரில் கண்டு பிடித்துள்ளார்கள். ஆட்களுக்கு எந்த நோயும் இல்லை. ஆனால் தண்ணீரில் இருக்கிறது. இது ஒரு பாரதூரமான விடயம். இதைக் கவனிக்காமல் விட்டோம் என்றால் இது தொடர்ந்து பெரிய விடயமாக மாறிவிடும்.

ஒரு பிள்ளைக்கு 12 டொலர் தேவைப்படுகிறது. ஆண்டு தோறும் ஒவ்வொரு ரோட்டரிக் கழக அதற்காக நிதி ஒதுக்கீடுகளைச் செய்கிறது. ஆனாலும் போதாது, தனவந்தவர்கள் செல்வந்தர்கள் கூடுதலான நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

# நகர்வலம்



## இராணுவ டிபென்டர் வண்டி மரத்துடன் மோதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு; நான்கு பேர் காயம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

சிங்கபுர வெலிகந்த பிரதான வீதியின் முத்துவெல்ல பகுதியில் இராணுவ டிபென்டர் வண்டியொன்று மரத்தில் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் சம்பவயிடத்தி லேயே உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரி வித்தனர். இச்சம்பவம் 22 ஆம் திகதி நேற்று அதிகாலை முத்துவெல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசா ரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித் தனர். சம்பவத்தில் காயம



டைந்த டிப்பென்டர் வண்டியின் சாரதி உள்ளிட்ட மேலும் நான்கு பேர் பொலன்னறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 28 வயதுடைய மாதிப்பொள வீதி, மாத்தளை பகுதியை வசிப்பிட மாக கொண்ட இராணுவ கப்பித்தான் ஒருவரே சம்பவத்தில் உயிரி ழந்துள்ளார் என்டது தெரிய வந்துள்ளது.குறித்த வீதி ஊடாக திருகோ ணமலை பகுதியில் இருந்து மாதுறுஓய இராணுவ முகாமிற்கு கடமை நிமித்தம் சென்றுகொண்டிருக்கும் போது வேகக்கட்டுப் பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளமை தற்போது மேற்கொண்டு வரும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. உயிரிழந்த கப்பித்தானுடைய சடலம் வெலிகந்த வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸ் நிலைய போக்கு வரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டில் முட்டை உற்பத்தி தொழில் எதிர்நோக்கும் பாரிய அச்சுறுத்தல்

### உலக முட்டைகள் தின நிகழ்வில் அமைச்சர் அமரவீர

ஹம்பாந்தோட்டை குறுப் நிருபர்

எமது நாட்டில் முட்டை உற்பத்தி கைத்தொழில் தற்போது பாரிய அச்சுறுத் தலுக்குள்ளாகியுள்ளதாக விவசாய, வன சீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் தார்.

அங்குனுகொலபெலஸ்ஸ நகர மண் டபத்தில் நடைபெற்ற உலக முட்டை கள் தினத்தினை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச் சர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேசத்திலுள்ள 500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முட்டைகள் மற்றும் போசாக்குணவுகள் அடங்கிய பொதி யொன்றும் இதன்போது அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டது. உலக முட் டைகள் தினத்தினை முன்னிட்டு மிருக உற்பத்தி கைத்தொழிலாளர் சங்கம் இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந் தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், எமது நாட்டின் வருடாந்த முட்டை உற் பத்தி 1000 தொடக்கம் 3000 மில்லியன்க ளுக்கும் இடையில் காணப்படுகின்றது.

இருந்தாலும் 2021 ஆம் ஆண்டு விவ சாயிகளுக்கு இரசாயன உரம் வழங் கப்படாமையினால் சோள உற்பத்தி பாரியளவில் வீழ்ச்சி அடைந்தது. இக்கா லப்பகுதியில் எமது நாட்டின் மொத்த முட்டைஉற்பத்தி 2934 மில்லியன்களாக காணப்பட்டது. இது 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆகும்போது 1963 மில்லி யன்களாக குறைவடைந்து காணப்பட் டது.

இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்பு எமதுநாட்டின் தனியார் முட்டை நுகர்வு 35 ஆக காணப்பட்டாலும் 2021 ஆம் ஆண்டு இறுதியாகும்போது அத் தொகை 125 ஆக உயர்ந்துள்ளது.

உணவு உற்பத்திக் கைத்தொழில் அதிக ரித்து செல்வதினால் தற்பொழுது சந்தை



யில் முட்டைக்கு அதிக விலை காணப் படுவதோடு முட்டைக் கைத்தொழில் தற்பொழுது பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்தும் வருவதினை அவதானிக்கக் கூடியதாய் உள்ளதெனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## ஸம்ஸம் பவுண்டேசன் ஏற்பாட்டில் 'சங்கல்ப்ப', பயிற்சித் திட்டம்

### பிறமதத் தலைவர்களின் பங்கேற்புடன் பயிற்சி பெற்ற 40 மாணவர்கள் கௌரவிப்பு









மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

ஸம்ஸம் பவுண்டேஷன் நடாத்தி வரும் சிங்கள மொழித் தெளிவுடன் பிறமதங்கள் பற்றிய விளக்கங்களும் உள்ளடக்கப்பட்ட "சங்கல்ப்ப" பயிற் சித் திட்டத்தின் கீழ் தமது பயிற்சி களை பூரணமாக நிறைவு செய்த மூன்றாவது அணியினர் வெளியே றும் வைபவம் சனிக்கிழமை (22 ) வெள்ளவத்தை மெரைன் டிரைவ் வர வேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

நாடளாவிய ரீதியில் தெரிவுசெய் யப்பட்ட 40 பேர் இதில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இவ்வை பவத்தில் கலந்து கொண்ட சர்வமதத் தலைவர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க, இப்பயிற்சித் திட்டத்தின் பணிப்பாளர் மௌலவி அம்ஹர் ஹகம்தீன் ஆகியோர் உரையாற் றினர். பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவிகளின் நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு நிறுவனத்தின் சேவையை பாராட்டி ஸ்ரீலங்கா அம ரபுர மகா நிகாயே செயலதிகாரி பல் லேகந்த ரதனசார தேரர் , பவுண்டே ஷன் தலைவர் அஷ்ஷெய்க் யூசுப் முப்திக்கு நினைவுப் பரிசொன்றை யும் விழா நிகழ்வின்போது கைய ளித்து கௌரவித்தமை விசேட அம் சமாகும்.



பிரிட்ஜ் அகடமி நுண்கலை கல்லூரி பட்டமளிப்பு விழா அண்மையில் கொள்ளுப்பிட்டி பிஷப் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் திருவள்ளுவன் பிரதம அதிதியாகவும், பாராளுமன்ற உறுப்பினர் வி. இராதாகிருஸ்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இலங்கை கிளையின் தலைவர்.டி.ஸ்ரீ. சுடரோன் தலைமையில் பட்டமளிப்பு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதிக்கான கௌரவ சின்னத்தை சிறப்பு அதிதிகள் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

### மீலாதுன் நபி விவாத அரங்கு போட்டியில்;

## கஹட்டோவிட பத்ரியா ம.வி அணியினர் வெற்றி

மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

கஹட்டோவிட முஸ்லிம் மகளிர் பயிற்சி மன்றம் ஏற்பாடு செய்த மீலாதுன் நபி விழா அண்மையில் சிறப் பாக நடைபெற்றது. சிறப்பு போட்டியாக நடைபெற்ற விவாத அரங்கு போட்டி யில் அண்மையி லுள்ள பாடசாலைக ளான கஹட்டோவிட அல் பத்ரிய்யா மகா வித்தியாலயம், அரபா மகா வித்தி யாலயம், முஸ்லிம் மகளிர் மகா வித் தியாலயம் என்பன பங்குபற்றிய இப்போட்டியில் இறுதியில் அல் பத் ரிய்யா மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.





இரண்டு கண்களும் தெரியாத விஷேட தேவையுடைய மாணவன் என்.எஸ்.முஹம்மத் தலைமை யில் பங்குகொண்டு வெற்றியீட்டிய பத்ரியா அணியின் சிராஸா பாயிஸ், பஹ்மா ரிஸான், எம்.என். முஹம் மத், காலித் பிர்தௌஸ் ஆகியோர் அதிபர் எம்.பீ.எப்.சாலீஹா, ஆசிரியை பர்ஹானா பாரூக் ஆகி யோருடன் படத்தில் காணப்படு கின்றனர்.

## கிழக்கு பல்கலை சிரேஷ்ட விரிவுரையாளர் ஜெலீல் மறைவுக்கு மருதமுனை ஜம்இய்யா அனுதாபம்

இறக்காமம் தினகரன் நிருபர்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.ஜெலீல் (ஹாமி) யின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரி ழப்பாகுமென மருதமுனை ஜம்இய் யதுல் உலமா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, கிழக்கு பல்கலை கழகத்தில் அரபு மொழித் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், க.பொ.த. உயர்தர அரபு மொழித் துறையின் பிரதம பரீட்சகராகவும், மரு தமுனை ஜம்இய்யத்துல் உலமாவின் உப தலைவராகவும் பணியாற்றி வந்த மௌலவி ஜெலீல் தான் சார்ந்த சமூகத் திற்கு செய்த சேவைகளை வல்ல நாயன் பொருந்திக்கொள்ள வேண்டும்.

1967.01.02ஆம் திகதி மருதமுனை யில் பிறந்த இவர், ஆரம்ப கல்வியை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கற்று கலைமானி பட்டதாரியாக தனது உயர் கல்வியை ஆரம்பித்து இலங்கை, பாகிஸ்தான், இந்தியா என கல்வித் தேடலில் பயணித்துள்ளார்.

1980ஆம் ஆண்டு கல்முனை அல்ஹாமியா அரபுக் கல்லூரியில் இணைந்த இவர், 08 வருடங்கள் இஸ்லாமிய ஷரீஆத் துறையில் கற்று 1988ஆம் ஆண்டு ஆலிமாக பட்டம் பெற்று வெளியேறினார். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வின் தூர நோக்கு, பணிக்கூற்று, சட்ட யாப்பு போன்ற விவகாரங்களில் கரிசனை காட்டிய இவர் பல இஸ்லா மிய நூல்களை எழுதி சமூகத்தில் தாக் கத்தை ஏற்படுத்தினார்.

சமூகப் பணியில் தன்னை முழு மையாக ஈடுபடுத்தி வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை (15) திடீரென இறையடி சேர்ந்த அன்னாருக்கு வல்ல நாயன் ஜென்னத்துல் பிர்தௌஸை வழங்க வேண்டுமென ஜம்இய்யா பிரார்த்திப்பதாகவும் அது விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

## நஜீப் ஹாஜியார் கல்வி நிறுவன ஸ்தாபகர் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிப்பு

பேருவளை விசேட நிருபர்

தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகரும் முன்னணி சமூக சேவையாளருமான நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமுக்கு அமெரிக்கா தேசிய வணிக பல்கலைக்கழகத்தினால் (AMERICAN NATIONAL BUSINESS UNIVERSITY) கலாநிதி பட்டம் (DOCTOR DEGREE FOR SOCIAL SERVICES) வழங்கி கௌரவித்துள்ளது.

டுபாயில் உள்ள கிரவுன் பிளாஸா ஹோட்டலில் கடந்த 15ஆம் திகதி நடை பெற்ற நிகழ்வில் இவர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.

குவைட் அல் நஜாத் செரிட்டி அமைப் பின் பணிப்பாளர் நாயகம் முஹம்மத் அல் டபூஸ் நிகழ்வில் பிரதம அதிதி



யாக கலந்து கொண்டார். சமய, சமூக, பொது, கல்விப் பணிகளுக்காக நீண்ட காலம் சேவையாற்றும் பல நாடுகளையும் சேர்ந்த 12 பிரமுகர்கள் நிகழ்வில் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள னர். அமெரிக்க தேசிய வணிக பல்கலைக் கழக உயர் அதிகாரிகள் (American National Business University) டுபாய் நாட்டைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலரும் நிகழ் வில் கலந்து கொண்டனர்.

தர்கா நகரைச் சேர்ந்த நஜீப் ஹாஜியார் 1999ம் ஆண்டு முதல் மூன்று தசாப் தங்களுக்கு மேலாக களுத்துறை, காலி மாவட்டங்கள் உட்பட நாட்டின் பல பகு திகளிலும் கல்வி, சமய, ஆன்மீகப் பணிக ளுக்காக அளப்பரிய சேவைகளைச் செய்து அதற்காக பாரிய அளவில் நிதியையும் செலவிட்டுள்ளார். அவரது 30 வருட கால பணிகளை பரிசீலனை செய்து அங்கீக ரித்து மேற்படி பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி அன்னாரை கௌரவித்துள்ளமை இலங்கை நாட் டுக்கு கிடைத்த பெருமையாகும்.

## சாதுலிய்யா தரீக்காவின் புதிய நியமனங்கள்

(பாணந்துறை மத்திய குறுப் நிருபர்)

இலங்கை அல்பாஸிய்யதுஷ் சாதுலிய்யா தரீக்காவின் கலீபா மற்றும் ரயீஸுல் முகத்த முஷ் சாதுலி பதவிகளுக்கு நாட்டின் பல பாகங் களிலிருந்தும் தேர்வானவர்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான நியமனம் வழங்கும் நிகழ்வு இலங்கை சாதுலியா தரீக்காவின் தலைமைய கமான கொழும்பு உம்மு ஸாவியாவில் அண் மையில் இடம்பெற்றது. கலீபதுஷ் சாதுலி முஹம்மத் ஸுஹூர் ஆலிம், கலீபதுஷ் சாதுலி மௌலவி எம்.அஜ்வாத் அல்பாஸி உள்ளிட்ட கலீபாக்கள் நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தனர். உலமாக்கள்,இஹ்வான்கள் ஆகி யோரும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித் தனர்.

இலங்கை சாதுலியா தரீக்கா தலைமையக சிபார்சின் பிரகாரம் புனித மக்கமா நகரிலுள்ள சாதுலியா தரீக்காவின் ஆன்மீக தலைவ ரான அஷ்ஷேஹ் மஹ்தி பின் அப்துல்லா அல்பாஸி அல்மக்கி அஷ்ஷாதுலியின் உறுதிப்படுதலுடன் மேற்படி புதிய நிய மனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள் மோதி சிறுமி பலி

(புத்தளம் விசேட நிருபர்)

சைக்கிள் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் 10 வயது பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ள இச்சம் பவத்தில் சைக்கிளில் பயணித்த சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ள தோடு, அச்சிறுமியுடன் சைக்கிளில் பயணித்த மற்றொரு சிறுமி உயிர் தப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை குளி யாபிட்டி கிரிமெட்டியாவ எனும் பிரதேசத்திலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாம் சைக்கிளில் சென்று கொண் டிருந்த போது எமக்கு முன்னால் வந்த மோட்டார் சைக்கிள் வெட்டு போட்டுக் கொண்டு வந்ததாகவும், மோட்டார் சைக் கிளைச் செலுத்தி வந்தவர் கவன யீனமான முறையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்ததால் தான் பயந்து சைக்கியிலிருந்து பாய்ந்து விட்டதாக உயிரிழந்த சிறுமி செலுத்திச் சென்ற சைக்கி ளில் பின்புறம் அமர்ந்து பயணித்த மற்றொரு சிறுமி தெரிவித்துள்ளார்.

## தென்னை தொடர்பான பயிற்சி முகாம்



புத்தளம் தினகரன் நிருபர்)

தென்னை பயிர் செய்கையில் நீர் பாசனத்தின் முக்கியத்து வம் மற்றும் நவீன வினைத்திறனான நீர்ப்பாசன முறைமைகள் தொடர்பானதும், மண் ஈரத்தன்மை மற்றும் அதனை பாதுகாத் தல் தொடர்பானதுமான செய்கை முறையிலான பயிற்சி முகாம் ஒன்று புத்தளம் சீமெந்து தொழிற்சாலை வீதியில் விமானப்படை தளத்திற்கு முன்னால் அமைந்துள்ள தோட்டத்தில் அண்மையில் நடைபெற்றது.

புத்தளம் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம். ஹிஜாஸ் இதில் பிரதான வளவாளராக கலந்து கொண்டார்.

பிரதேசத்தின் தெங்கு செய்கையாளர்கள் பலர் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



மலையக இளம் எழுத்தாளர் சதீஸ் செல்வராஜா எழுதிய "குளிரும் தேசத்து கம்பளிகள்" எனும் நூல் வெளியீட்டு விழாவும் அமரத்துவம் எய்திய இலக்கிய இமயம் தெளிவத்தை ஜோசப்புக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் (22) கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. தெளிவத்தை ஜோசப்பின் உருவப்படத்துக்கு, பாராளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத், முன்னாள் எம்,பி,மல்லியப்பு திலகர், இலக்கிய புரவலர் ஹாஸிம் உமர், முனைவர் சிவலிங்கம் சதீஸ்குமார், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் உள்ளிட்ட நிகழ்வில் பங்கேற்ற பிரமுகர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும் "குளிரும் தேசத்து கம்பளிகள்" எனும் நூலின் முதற்பிரதியை பாராளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத், இலக்கிய புரவலர் ஹாஸிம் உமருக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : இன்பாஸ் சலாஹுதீன்)

# "தவறான தகவல்களுக்கு எதிராவோம்" எனும் தலைப்பில் கொழும்பில் ஊடக செயலமர்வு



இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின்(SLPI) ஏற்பாட்டில், CFLI மற்றும் MYTHOS LABS இன் அனுசரணையில், "தவறான தகவல்களுக்கு எதிராவோம்" எனும் தலைப்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக துறைசார்ந்தோருக்கான பயிற்சி செயலமர்வு செவ்வாய்க்கிழமை (18) கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு Cinnamon Lakeside ஹோட்டலில் நடைபெற்ற இந்த பயிற்சி பட்டறையில் கனேடிய உயர்ஸ்தானிகராலய பிரமுகர்கள், Mythos Labs மற்றும் CFLI ஆகிய அமைப்புகளின் அங்கத்தவர்கள் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஆண் மற்றும் பெண் ஊடகவியலாளர்கள், ஊடகத் துறைசார் மாணவர்கள் உட்பட 28 பேர் கலந்துகொண்டனர்.

அதேவேளை சிங்கள மொழி மூலமான ஊடக நிகழ்ச்சியும் இந்த ஹோட்டலில் 30பேருடன் நடைபெற்றது.

இலங்கையின் ஊடகங்களில் தவறான தகவல்கள் பரவுவது மற்றும் அதன் தாக்கம், தவறான தகவல்களை அடையாளம் கண்டு அதற்கு பதிலளிப்பது, தவறான தகவல்களைப் அறிக்கையிடுதல் மற்றும் தவறான தகவல் வலையமைப்புகளுக்கு முகங்கொடுத்து இணைய பாதுகாப்பை அதிகரிப்பது குறித்து இந்த செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது.

நடைமுறைச் செயற்பாடுகளுடன் கூடிய இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பயிற்றுவிப்பாளராக விடிவெள்ளி பத்திரிகையின் ஆசிரியர் மொஹமட் பைரூஸ் இணைந்து கொண்டார்.

இலங்கையில் தவறான தகவல்கள் பரவி வரும் இக்காலத்தில் இது ஒரு அவதானத்திற்குரிய தலைப்பாக இருப்பதனால் பல ஊடகவியலாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இத்திட்டத்தில் இணைந்தனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் தமது தொழில் அனுபவத்தையும் சேர்த்து செயலமர்வை செழுமைப்படுத்தியதுடன், அர்த்தமுள்ள கலந்துரையாடல்களுடன் நிகழ்ச்சி வெற்றிகரமாக நிறைவுற்றது.

# பெலவத்த பால் உற்பத்தி நிறுவனத்தின் 15வது விற்பனை மையம் திறப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இலங்கையின் முதல் தர பெல்வத்த பால் உற்பத்தி நிறுவனத்தின் 15 வது பால் சேகரிப்பு மற்றும் பால் விற்பனை மையம் அநுராதபுரம் மரதண்கடவல பிரதேசத்தில் கடந்த (18) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இல 110 வது மைல் கல் மரதண்கடவல பிரதேசத்தில் இந்த புதிய சேகரிப்பு மற்றும் விற்பனை மையம் நிறுவனத்தின் தலைவர் விக்ராமநாயக தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விற்பனை நிலையத்தின் மூலம் பெல்வத்த தயிருடன் பால் பவுடர், வெண்ணெய், யோகட், நெய் மற்றும் ஐஸ் கிரீம் உள்ளிட்ட பல உற்பத்திகளை நுகர்வோர் கொள்முதல் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. தற்போது அநுராதபுரத்தில் இருந்து 80 ஆயிரம் லீட்டர் பால் பெல்வத்த நிறுவனத்திற்கு கிடைத்துள்ளதாகவும் பாலை சேகரிக்கும் மத்திய நிலையம் இந்த வளாகத்தில் திறக்கப்பட்டுள்ளதடன். கிராமிய மட்டத்தில் சங்கங்கள் ஊடாக பால் பண்ணையாளர்களிடமிருந்து சேர்க்கப்படும் பாலை இந்நிறுவனம் கொள்முதல் செய்து பால் பவுசர் மூலம் புத்தள வில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பால் பதப்படுத்தப்படுகின்றன.

சிறுவர்களின் போஷாக்கு தன்மையை விருத்தி செய்வதற்கே இந்த தொழிற்சாலையை அமைத்ததாகவும். யாருடைய வற்புறுத்தலுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அடிபணிந்து வெளிநாட்டு நிறுவனங்களுடன் கைகோர்க்காமல் எந்த அரசியல் வாதிகளினதும் உதவியுமின்றி தனிமனிதனாக இருந்து தொழிற்சாலையை அபிவிருத்தி செய்ததாக நிறுவனத்தின் தலைவர் விக்ரமநாயக தெரிவித்தார்.



# கொழும்பு மாநகர சபையினால் போசாக்கு பராமரிப்பு திட்டம்



ருஸைக் பாரூக்

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஏ. ஆர். எம். சபாநின் வேண்டுகோளுக்கு இணங்க கொழும்பு மாநகர சபையினால் சமூக சமையலறை போஷாக்கு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் கொழும்பு 14, சென் ஜோசப் கல்லூரியில் நடைபெற்று.

கொழும்பு பிரதி மேயர் எம்.டி.எம்.இக்பால் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். மாணவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. இந்நிகழ்வை ஒரு பயனுள்ள மற்றும் வெற்றிகரமான நிகழ்வாக மாற்றுவதற்காக பல நலம் விரும்பிகள் மற்றும் தன்னார்வலர்கள் ஒன்றிணைந்தனர். அவர்கள் இந்த சிறந்த முயற்சியை தொடர எதிர்பார்ப்பதோடு அடுத்த இரண்டு மாதங்களுக்கு உணவையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர். நிகழ்வில் சென் ஜோசப் கல்லூரி அதிபர் எஸ்.ஜி.கே. டி.எல்.சி. பிரசாத், கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை ஆணையாளர் ஷாலிகா எஸ்.ரணவீர, கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# திவுலப்பிட்டிய பிரதேச சபை

## 2023ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

திவுலப்பிட்டிய பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறைச்சிக்கடை, மீன் கடை மற்றும் விற்பனை உரிமையை 2023.01.01ஆம் திகதி முதல் 2023.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் என்னால் ஏற்கப்படும்.

2. **கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல் - 2022.10.25 முதல் 2022.11.17ஆம் திகதி வரை (மு.ப. 9.00 முதல் பி.ப.3.00 மணி வரை)**
   **கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2022.11.18 மு.ப. 9.30 மணி வரை**
   **கேள்விகள் திறக்கப்படுதல் - 2022.11.18 மு.ப. 9.30 மணிக்கு.**
3. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை என்பவற்றை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்குச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச கட்டணத்திற்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அவ்வாறான கேள்விதாரர்களின் வைப்புத் தொகை மற்றும் கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களின் வைப்புத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.
5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்கள் 2022.11.18ஆம் திகதி மு.ப. 9.30 மணி வரை என்னால் ஏற்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணை வைப்புத் தொகையை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு செலுத்தி 2022.11.17ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரர் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு முன் பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் வர்த்தக உரிமையை குத்தகைக்கு பெற்று உடன்படிக்கைகளை மீறியுள்ள குத்தகைதாரர்களுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
7. கேள்வி விண்ணப்பங்களை வெவ்வேறாக பூர்த்தி செய்த பின்னர் "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரதி"யை வேறுவேறாக இரு உறைகளில் இட்டு அவ் உறைகளின் பின்பக்கம் "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரதி" என்று குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் இன்னுமொரு கடித உறையில் இட்டு முத்திரைக் குறியிட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை "தலைவர், திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய" எனும் முகவரிக்கு 2022.11.18ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு முன் திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
8. 2022.11.18ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அந்நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

09. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபையின் தீர்மானம் என்பதுடன் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

10. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவித்து 07 நாட்களுக்குள் அம் முகவரியில் குறிப்பிடப்படும் தொகையை முழுமையாக செலுத்தி முடித்தல் வேண்டும்.

11. மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்தறியலாம்.

**டீ.டீ. இந்திக்க ஜயசிங்க**
**தலைவர்,**
**திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டியவில்.**
2022.10.19

**தொலைபேசி இல. : 031-2246275**
**தொலைநகல் இல : 031-2243865**
**மின்னஞ்சல் - divulapitiyaps@gmail.com**

### திவுலபிட்டிய பிரதேச சபைக்கு சொந்தமான இரைச்சிக்கடை, மீன்கடைகள் 2023ஆம் ஆண்டிற்கான அட்டவணை

| தொடர் இலக்கம் | ஆதனத்தின் தன்மை | 2023ஆம் ஆண்டிற்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப் படும்) (ரூபா) | படிவக் கட்டணம் (மீளளிக் கப்படாத) (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | திவுலப்பிட்டிய மீன் கடை இல. 01 | 55,000.00 | 5,500.00 | 1000.00 |
| 2 | திவுலப்பிட்டிய மீன் கடை இல. 02 | 55,000.00 | 5,500.00 | 1000.00 |
| 3 | திவுலப்பிட்டிய மீன் கடை இல. 03 | 55,000.00 | 5,500.00 | 1000.00 |
| 4 | திவுலப்பிட்டிய மாட்டிறைச்சிக் கடை | 650,000.00 | 65,000.00 | 1000.00 |
| 5 | மரதகஹமுல பன்றியிறைச்சிக் கடை | 193,100.00 | 19,310.00 | 1000.00 |
| 6 | மரதகஹமுல மீன் கடை இல. 01 | 49,000.00 | 4,900.00 | 1000.00 |
| 7 | மரதகஹமுல மீன் கடை இல. 02 | 49,000.00 | 4,900.00 | 1000.00 |
| 8 | மரதகஹமுல மீன் கடை இல. 03 | 49,000.00 | 4,900.00 | 1000.00 |
| 9 | மரதகஹமுல மீன் கடை இல. 04 | 49,000.00 | 4,900.00 | 1000.00 |
| 10 | கல்கந்த இறைச்சிக்கடை | 55,000.00 | 5,500.00 | 1000.00 |
| 11 | கல்கந்த மீன் கடை - 01 | 8,500.00 | 850.00 | 1000.00 |
| 12 | கல்கந்த மீன் கடை இல - 02 | 8,500.00 | 850.00 | 1000.00 |
| 13 | கொட்டதெனியாவ மீன் தட்டு 01 | 260,000.00 | 26,000.00 | 1000.00 |
| 14 | கொட்டதெனியாவ மீன் தட்டு 02 | 260,000.00 | 26,000.00 | 1000.00 |
| 15 | கொட்டதெனியாவ கோழியிறைச்சிக் கடை | 201,000.00 | 20,100.00 | 1000.00 |
| 16 | கொட்டதெனியாவ பன்றியிறைச்சிக் கடை | 274,000.00 | 27,400.00 | 1000.00 |
| 17 | படல்கம மீன் கடை இல. 01 | 62,500.00 | 6,250.00 | 1000.00 |
| 18 | படல்கம மீன் கடை இல. 02 | 62,500.00 | 6,250.00 | 1000.00 |
| 19 | படல்கம மீன் கடை இல. 03 | 62,500.00 | 6,250.00 | 1000.00 |
| 20 | படல்கம மாட்டிறைச்சிக் கடை இல. 01 | 243,000.00 | 24,300.00 | 1000.00 |

திகதி 22.10.2022 சனிக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4916
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,594,380.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,889,585.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 1 3 9 7 8 9

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 946
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,255,540.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 13 60 67 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,804,282.80

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3158
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,022,940.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 05 60 71 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,090,098.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 225
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,225,748.80
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 01 03 17 60
விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1371
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,705,520.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 2 3 4 2 3 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,584,268.00

கோடி 27 + Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1264
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,792,440.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 277,410,950.00
X 06 23 61 71 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

திகதி 21.10.2022 வெள்ளிக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4915
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,038,520.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,481,942.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 3 3 7 2 8 2

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 945
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,160,220.00
வெற்றி இலக்கினம் X வெற்றி இலக்கங்கள் 04 43 44 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,674,339.20

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3157
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,281,900.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 03 28 40 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,007,886.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 224
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,285,120.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 03 24 40 42
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,891,728.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1370
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,944,880.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 0 0 3 5 5 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,534,631.20

கோடி 27 + Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1263
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,277,200.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 277,177,658.00
B 18 07 09 26 29
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

இலங்கை துறைமுக அதிகார சபை

# ஏலவிற்பனை அறிவித்தல்

**அழிந்துபோகக்கூடிய சரக்குகளின் விற்பனை**

**ஏலவிற்பனைத் திகதி: 2022-10-26**

எனது இல. LD/S/CICT/2022/04/PC-03 & LD/S/T/445/2022/SLPA

கொழும்பு துறைமுகத்தின் CICT மற்றும் JCT முற்றவெளியில் வைக்கப்பட்டுள்ள அழிந்துபோகக்கூடிய சிறிய பொருட்களுடன் கூடிய இரண்டு கொள்கலன் பெஸ்டா மற்றும் Pastry Shortening என்பவற்றைக் கொள்வனவு செய்து அப்புறப்படுத்துவதற்காக 2022-10-26ஆம் திகதி 1000 மணித்தியாலத்தில் BQ நலன்புரிக் கட்டிடத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏல ஆவணங்கள் மற்றும் நுழைவு அனுமதி அட்டைகளை (Gate Pass) பெற்றுக்கொள்ளல் மற்றும் கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத 1000.00 ரூபா (+VAT) மற்றும் மீளளிக்கப்படும் 200,000.00 ரூபா கட்டணம் செலுத்தி கெனல் முற்றவெளி, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின், விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2022-10-25ஆம் திகதி 0830 மணித்தியாலம் முதல் 1000 மணித்தியாலம் வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம். அன்றைய தினமே 1100 மணித்தியாலம் முதல் 1300 மணித்தியாலம் வரையில் பொருட்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து www.slpa.lk இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்),**
**2022-10-24**
**சேவை வழங்கல் பிரிவு,**
**இலங்கைத் துறைமுக அதிகார சபை.**



## அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் பழைய பெயர்:
**பிரவுன் குரோ லங்கா (பிவீட) எல்டீடி**
பதிவிலக்கம்: **பிவீ 102489**
பதிவு அலுவலக முகவரி :
**இல. 723 ஹிம்புட்டுவெல்கொட, களனி**
கம்பனியின் புதிய பெயர்:
**பிரவுன் குரோ (பிவீட) எல்டீடி**
பெயர் மாற்றத் திகதி: **2022.09.30**

**வோட்டர்ஸ் செக்கிரட்டேரியல் சேர்விசஸ் (பீவீடி) எல்டிடீ**



## அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் பழைய பெயர்:
**IMBS கெம்பஸ் (பிவீட) எல்டீடி**
பதிவிலக்கம்: பிவீ 00211552
பதிவு அலுவலக முகவரி :
**இல. 21/4, குயீன் மேரி வீதி, கம்பஹா**
பெயர் மாற்றத் திகதி: **2022.10.07**
கம்பனியின் புதிய பெயர்:
**IMBS கிரீன் கெம்பஸ் (பிவீட) எல்டீடி**

**வோட்டர்ஸ் செக்கிரட்டேரியல் சேர்விசஸ் (பீவீடி) எல்டீடி**



நுகேகொட பெபிலியான மாவத்தை, 51ஆம் இலக்கத்தில் வசிக்கும் அங்கமமன ரன்பன்ஹிந்த சமரதிவாகர இன்ககோன் ராஜபக்ஷ ராஜகருணா வாசல முதியன்சே ராலஹாமில்லாகே டோல்டன் பிரன்சிஸ் அங்கம்மன என்பவரை அட்டோர்ணித் தத்துவதாரராக நியமித்து நயோமி உந்துகொட பிரசித்த நொத்தாரிசு சான்றுபடுத்திய 328ஆம் இலக்க மற்றும் 2016-3-3ஆம் திகதிய 2192ஆம் இலக்க 179ஆம் வகுதியின் 79ஆம் இலக்க பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அட்டோர்ணி அதிகாரப் பத்திரம் இரத்துச் செய்யப்படுவதாக சகலருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**டீ. வீ. ஜயகொடி,**
**14/3, மயான வீதி,**
**2ஆம் ஒழுங்கை,**
**கங்கொடவில - நுகேகொட.**



## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

நாத்தாண்டிய தபால் பிரிவில் நாத்தாண்டிய கெமுனு மாவத்தையில் வசிக்கும் **ஹேரத் முதியன்சேலாகே அசங்க சந்திம ஹேரத்** ஆகிய நான் பொதுமக்களுக்கு மற்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு தெரிவிப்பதாவது நாத்தாண்டிய தபால் பிரிவில் நாத்தாண்டிய, கெமுனு மாவத்தையில் வசிக்கும் **ஹேரத் முதியன்சேலாகே மஞ்சுல ஹேரத்** என்பவருக்க அதிகாரமளிக்கப்பட்ட **சிதத் தர்மகீர்த்தி சட்டத்தரணி** மற்றும் பகிரங்க நொத்தாரிசுவினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2000.06.03ம் திகதி நாத்தாண்டியவில் கையொப்பமிடப்பட்ட எழுத்து மூல அதிகாரம் மற்றும் அற்றோணி தத்துவ புத்தகத்தில் 3ம் வகுதியில் 189ஆம் பக்கத்தில் 344ம் தினப்புத்தக இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அற்றோணி அனுமதிப் பத்திரத்தை இன்று முதல் இரத்துச்செய்து இல்லாதொழிப்பதாகவும் இன்று முதல் **ஹேரத் முதியன்சேலாகே மஞ்சுல ஹேரத்** என்பவரால் என் சார்பாக மற்றும் எனது பெயரில் மேற்கொள்ளப்படும் எந்தக் கொடுக்கல் வாங்கள்களும் அதிகாரமற்றதென இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.



## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

406/1, எத்கல, கொச்சிக்கடை, இலங்கையின் **அருட்தந்தை பஸ்டியன் கோராலலகே ஷஷிகா மனோஜ் ரொட்ரிகோவுக்கு** இல. 356, செல்லகந்த வீதி, மஹஹுனுப்பிட்டிய, நீர்கொழும்பு, இலங்கையின் **ஜயசிங்க ஆரச்சிகே டொனா டில்கி மரியன் இமல்ஷா அப்புஹாமி** ஆகிய என்னால் பகிரங்க நொத்தாரிசு சந்தராஸ் **ஐ. ரொட்டிகோ** மூலம் எழுதி உறுதி செய்யப்பட்ட 2019.08.06ஆம் திகதி 5668ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணித் தத்துவத்தை அகற்றி, இல்லாமல் செய்யப்பட்டு மற்றும் ரத்துச் செய்யப்பட்டதை இலங்கை சனநாயகக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகிறது. கூறப்பட்ட **அருட்தந்தை பஸ்டியன் கோராலலகே ஷஷிகா மனோஜ் ரொட்ரிகோ** மூலம் என் சார்பில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு பரிவர்த்தனைக்காகவும் நான் பொறுப்பாகமாட்டேன்.

**ஜயசிங்க ஆரச்சிகே டொனா டில்கி மரியன் இமல்ஷா அப்புஹாமி**



## அற்றோணி தத்துவப்பத்திரத்தை மீளப்பெறல்

இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது 24.01.2009ம் தினத்தன்று 19ம் இலக்கத்தில் களுத்துறை பிரசித்த நொத்தாரிசு தரங்கா டி மெல் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்டு தெஹிவளை, களுபோவிலை, பாடசாலை ஒழுங்கை, இல. 62/12 ஐச் சேர்ந்த திசாநாயக்க முதியான்சலாகே ஹர்ஷ தர்சனி (தே.அ.அ.இல: 787160190V) என்பவரின் பெயரில் பிலியந்தலை, வேவல, தேவாலயம் வீதி, இல. 7/A1 ஐச் சேர்ந்தவரும் தற்காலம் யுஸ்டுஸ்ட்ராஸ் 1, 64319, புன்க்ஸ்டட், ஜேர்மனியை வசிப்பிடமாக கொண்ட பல்லாவல கப்புருபண்டாரகே சுசிலாவதி மறுநாமம் சுசிலாவதி ஹொப்மன் ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணி தத்துவப் பத்திரம் 28.10.2022 முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் அற்றோணி தத்துவக்காரியான திசாநாயக்க முதியான்சலாகே ஹர்ஷ தர்சனியால் மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

**பல்லாவல கப்புருபண்டாரகே சுசிலாவதி மறுநாமம் சுசிலாவதி ஹொப்மன்**



## அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

நாங்கள், **சுந்தரலிங்கம் ரூபலிங்கம்** (கடவுச் சீட்டு எண்: N7338050) மற்றும் **சுந்தரலிங்கம் மிதுனா** (கடவுச்சீட்டு எண்: N826660) கைதடி தெற்கு யாழ்ப்பாணம் இலங்கை தற்போது Chemin Des Pontes, 07 12 12 Grand-Lancy Switzerland இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருவது என்னவென்றால் 2021ஆம் ஆண்டு மார்ச் 2அம் திகதி **கே. சந்திரமோகன்** நோட்டரி பப்ளிக் ஜெனீவா-சுவிட்டர்லாந்தால் சான்றளிக்கப்பட்டது (வடக்கு - மண்டல யாழ்ப்பாண பதிவாளர் P.O.A பதிவில் 16/3/2021 திகதியில் vol 134 folio No: 95 D.B. No. 570 பதிவு செய்யப்பட்டது) வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள கைதடி தெற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **கந்தையா கந்தசாமிக்கு** (NIC எண்: 195808805012) எங்களால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 17ம் திகதி ஜுலை 2022 முதல் இரத்து செய்யப்பட்டது. எதிர்காலத்தில் அவர் செய்யும் எந்த செயலுக்கும் பொறுப்பு இல்லை. இந்த அற்றோணி அதிகாரம் இனிமேல் சட்டத்தின் முன்னிலையில் செல்லுபடியாகாத எவ்விதமான அதிகாரமுமற்ற ஆவணமாகும்.

**சுந்தரலிங்கம் ரூபலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம் மிதுனா**







# பட்டினி நாடுகள் வரிசையில் இந்தியாவுக்கு 107வது இடம்




உலகளாவிய பட்டினி குறிகாட்டு பட்டியலின் 121 நாடுகளில் இந்தியாவை 107 வது நாடாக அறிவித்திருப்பது தவறானது என்றும் பிழையான வழிமுறைகளைப் பின்பற்றி இப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தியா தன் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளது.

ஒரு நாட்டுக்கான உணவு பாதுகாப்பையும் ஊட்டச்சத்து தேவையையும் கவனத்தில் கொள்ளாத ஒரு ஒரு நாடு என்ற அவப் பெயரை உலகளவில் இந்தியா மீது ஏற்படுத்தும் தொடர் முயற்சியாளகவே இதைப் பார்ப்பதாகவும் வருடா வருடம் வெளியிடப்படும் இக் குறிக்காட்டியில் இது முக்கிய அம்சமாகவே இருந்து வருவதாகவும் இந்திய மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள எதிர்ப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாண்டுக்கான இப்பட்டினி குறிக்காட்டியில் கடந்த ஆண்டை விட ஆறு இடங்கள் பின்தள்ளப்பட்டு 107 வது இடத்தை இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் ஆப்கானிஸ்தானின் பட்டினியைப் போக்குவதற்கு உதவிய இந்தியாவுக்கு சமீபமான 109 வது இடம் ஆப்கானுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அவுஸ்திரேலியா டுடே பத்திரிகையில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்பட்டியலில் இலங்கைக்கு 6 வது இடமும், நேபாளத்துக்கு 81வது இடமும் பங்களாதேசத்துக்கு 84வது இடமும் வழங்கப்பட்டிருப்பதாக இக் கட்டுரையை எழுதிய அமித் சார்வால் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்த திட்டம்



தொழில்துறை மற்றும் வர்த்தகத்தில் ஈடுபடும் இந்தியப் பெண்களுக்கு விஞ்ஞான மற்றும் நவீன தொழில்நுட்ப ரீதியான வளங்களையும் வாய்ப்புகளையும் வழங்கி அவர்களுக்கு வழிகாட்டும் புதிய ஏற்பாடுகளை இந்திய விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் பொறியியல் அமைப்பு மேற்கொண்டுள்ளது. சகலருக்கும் சம வாய்ப்பு என்ற குறிக்கோடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இத்திட்டத்துக்கு கூகுள் மற்றும் விசா நிறுவனங்கள் உதவி வழங்க முன்வந்துள்ளன. உத்தர பிரதேசம், கர்நாடகம், அஸாம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 8,500 க்கும் மேற்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயிற்றுவிக்கப்படுவார்கள் என்றும் அவர்களுக்கு தேவையான நிதி வசதி அளிக்கப்படும் என்றும் ஏசியன் லைட் இன்டர்நெஷனல் செய்தி நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

# நேபாள வரலாற்றாசிரியர் மரணம் இந்தியா அனுதாபம்



நேபாளத்தின் புகழ்பெற்ற வரலாற்றாசிரியரும் இலக்கியவாதியுமான சத்யமோகன் ஜோஷி கடந்த 16 ஆம் திகதி தனது 103 வது வயதில் காலமானதாக காத்மண்டு ஆஸ்பத்திரி நிர்வாகம் தெரிவித்திருந்தது. இதையடுத்து காத்மண்டு இந்தியத் தூதரகம் தனது ட்விட்டர் பதிவில் இந்தியா சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தது.

நேபாளம் லாலிபுட் பதானில் 1919 ஆம் ஆண்டு பிறந்த சத்யமோகன் ஜோஷி, நேபாளத்தின் உயர் விருதான சதாப்தி புருஷ் விருதை மூன்று தடவைகள் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தன் வாழ்நாளில் அறுபது நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் சுகவீனமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியபோது நிமோனியா, டெங்கு மற்றும் மார்பில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணமடைந்தார்.


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலை மனுக்கோரல் (IFB)

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களுக்கான போக்குவரத்துச் சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**

1 **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழுவின் தலைவரினால்** வீதி அபிவிருத்தி அதிகார சபைக்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளில் காலை மற்றும் மாலை நேரங்களில் "மகநெகும மஹமெதுர" மற்றும் "செத்சிரிபாய" கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள காரியாலயங்களுக்காக இரண்டு வருட காலத்திற்கான (2023-2025) போக்குவரத்து சேவை வழங்குவதற்காக, 2016 இல் அல்லது அதற்கு பின் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பேருந்துகளை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | விபரம் | காலம் | மனுக் காப்புறுதிபிணைத் தொகை (ரூ) | மீள்செலுத்தப்படாத மனு ஆவண கட்டணம் (வட் வரியுடன்) (ரூ) |
|---|---|---|---|---|
| RDA/DPR/SE/BUSES/2022/30 | RDA ஊழியர்களுக்கான பேருந்துகள் வழங்கல் | இரண்டு வருடங்கள் | | |
| | 1. நிட்டம்புவ - யக்கல - தெல்கொட - கடுவெல - பத்தரமுல்லை | | 200,000.00 | 3,450.00 |
| | 2. கம்பஹா - கடவத்தை - பேலியகொட - பத்தரமுல்ல | | 200,000.00 | 3,450.00 |
| | 3. ஹோமாகம - கொட்டாவ - தலவத்துகொட - பத்தரமுல்லை | | 155,000.00 | 3,450.00 |
| | 4. கெஸ்பேவ - பிலியந்தலை - பொரலஸ்கமுவ - மஹரகம - பத்தரமுல்லை | | 155,000.00 | 3,450.00 |
| | 5. கல்கிசை - தெஹிவளை - நுகேகொட - பத்தரமுல்லை | | 155,000.00 | 3,450.00 |

2. வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம செயற்படுத்தும் நிறுவனமாக செயற்படும்.
3. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
4. மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **91 கலண்டர் நாட்கள்** வரை மனுக்கள் செல்லுபடியாகும்.
5. ஒவ்வொரு மனுக்களும் கட்டாயமாக மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு நிகரான **(2023.03.15 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்)** பெறுமதியுடைய மனுக்காப்புறுதிப்பிணைத்தொகையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மனுக்காப்புறுதி பிணைத்தொகை இணைக்கப்படாத அனைத்து மனுக்களும் நிராகரிக்கப்படும்.
6. **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, இல-216 "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்முதல் பிரிவில்)** எவ்வித கட்டணமும் இன்றி மனு ஆவணங்களை அலுவலக நேரத்தில் பரீட்சிக்க முடியும்.
7. மனு தொடர்பான முன்மனுக் கூட்டம் **2022.11.10 ஆம் திகதி மு.ப.10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் பிரிவு, நான்காவது மாடி, "மகநெகும மஹமெதுர", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை காரியாலயத்தில் இடம்பெறும்.
8. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.10.24** ஆம் திகதியிலிருந்து **2022.11.14** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.3,450/- (வட்வரி உள்ளடங்களாக)** கட்டணத்துடன் 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் பதிவாளர் வெளியிட்டுள்ள பதிவு சான்றிதழ் உடன் **இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை 0000001943 எனும் கணக்கிலக்கத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் எனும் பெயரில் வைப்பிலிட்ட ரசீதின் அசல் பிரதியுடன் மனு ஆவணத்தை பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, இல-216 "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்முதல் பிரிவின் பணிப்பாளர்** காரியாலயத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
9. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **பிரதிகளுடன்** மனு ஏற்றுக்கொள்ளும் **2022.11.15** ஆம் திகதி **பி.ப. 02.00** மணிக்கு முன் கிடைக்குமாறு **தலைவர், வீ.அ.அ.ச கொள்முதல் குழு, முதலாவது மாடி, "மகநெகும மஹமெதுர" இல-216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரில் கையளிக்க வேண்டும். மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"............................ வழங்கல்"** என குறிப்பிடப்பட வேண்டும். மனு கோரல் முடிவடையும் நேரத்தின் பின் கிடைக்கும் மனுக்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
10. **பத்தரமுல்லை, கொஸ்வத்தை, இல-216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, "மகநெகும மஹமெதுர" 4வது மாடியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் (கொள்முதல்) காரியாலயத்தில்** மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.
11. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் : **011-2884790** ஊடாக **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரை (கொள்முதல் பிரிவு)** தொடர்பு கொள்ள முடியும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு,
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**



NLDB

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

## பெறுகை அறிவித்தல்

**928 / Solar / NLDB / 2022**

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்பட்ட பண்ணைகளில் அமைந்துள்ள கட்டிடங்களின் கூரைகள் மீது சூரிய சக்தி கட்டமைப்பை நிறுவுவதற்கு தேர்வு அடிப்படையில் அதற்காக தகுதி உடைய கொள்வனவாளர்களிடம் இருந்து கொழும்பு 05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, இலக்கம் 40இல் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனு மற்றும் திட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

**01. தேர்வு 01 (Option 01)**

பொருத்தமான கொள்ளளவைக் கொண்ட சூரிய சக்தி கட்டமைப்பை நிறுவுவதற்கு குத்தகை வாடகை அடிப்படையில் கூரைகளை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு விலைமனுக் கோரல்

**02. தேர்வு 02 (Option 02)**

பொருத்தமான கொள்ளளவைக் கொண்ட சூரிய சக்தி கட்டமைப்பை நிறுவுவதற்கு திட்ட முன்மொழிவைக் கொண்ட விலைமனுக் கோரல்

| பண்ணை | அமைவிடம் | கூரையின் அடிப்பரப்பு (சதுர அடி) | தொடர்புகொள்ள வேண்டிய அதிகாரியின் இலக்கம் |
|---|---|---|---|
| ஆடிகம | தம்பதெனிய | 7,664 | 0773782161 |
| பெலிகம | பெலிகமுவ | 12,070 | 0773782136 |
| ஹொரகலே | குடாவெவ | 18,710 | 0773782149 |
| கரதகொல்ல | குண்டசாலை | 22,626 | 0773782135 |
| மாவத்த | பண்டிரிப்புபவ, லுனுவில | 13,222 | 0773782169 |
| மஹபெரியதன்ன | திகன, ரஜவெல்ல | 9.006 | 0765671647 |
| பொலன்னறுவை | பொலன்னறுவை, கந்துருவெல | 46,698 | 0773782144 |
| ரிதியகம | ஹம்பாந்தோட்டை, ரிதியகம | 169,000 | 0773782157 |

மேல் குறிப்பிடப்பட்ட பண்ணைகளில் கூரைகளை பரீட்சிப்பதற்கு மேல் குறிப்பிடப்பட்ட தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு குறித்த பண்ணைகளுக்கு சென்று அதன் பின்னர் திட்ட முன்மொழிவு மற்றும் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். இந்த பரீட்சித்துப் பார்த்தல் நடவடிக்கை பண்ணை மேற்பார்வையின் கீழ் பண்ணை கடமைகளுக்கு இடையூறு இன்றி மேற்கொள்ள வேண்டும்.

குறித்த பண்ணைகளை பரீட்சித்த பின் நீங்கள் தயாரித்த விலைமனு ஆவணம் மற்றும் திட்ட முன்மொழிவை இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சபை பண்ணைகளில் சூரிய சக்தி கட்டமைப்பை நிறுவுதல் தேர்வு 01 அல்லது தேர்வு 02'' என வெவ்வேறாக தெளிவாகக் குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விலைமனுக்கள் வழங்கப்படுவது 2022 நவம்பர் மாதம் 11ஆம் திகதி மு.ப. 10.00 வரை மாத்திரமாகும். விலைமனுக்களை பெறுவதற்கு விண்ணப்பக் கடிதம் ஒன்றை சமர்ப்பித்த பின் உங்களால் 5000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை கொழும்பு - 05, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, இலக்கம் 40 இல் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் முகாமையாளருக்கு (நிதி) செலுத்தி தலைமை அலுவலகத்தின் வழங்கல் பிரிவில் இருந்து குறித்த விலைமனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும். 2022 நவம்பர் மாதம் 14ஆம் திகதி மு.ப. 10.30க்கு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் விலைமனு மற்றும் திட்ட முன்மொழிவுகள் திறக்கப்படும்.

**தலைவர், பெறுகைக் குழு**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**
**இலக்கம் 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட**
**கொழும்பு - 05.**

**தொ.பே.இல. 0112 501701/2, 011 5746308**

# பெறுகைகளுக்கான அழைப்பு

## மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்

## மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான வழங்கல்கள்/சேவைகள் – 2022 – 2023

1. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குப் பின்வரும் வழங்கல்கள்/சேவைகளுக்காக தகுதியான தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும் (NCB)

| வகை 01 | கேள்வி ஆவம் வழங்கும்/ பெற்றுக்கொள்ளும் காலம் | | | 25.11.2002 முதல் 14.11.2022 வரை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கேள்வி மூடுதல்/திறத்தல் | | | 15.11.2022 அன்று மு.ப. 10.30 | | | |
| கேள்வி அடையாள இல. | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | மீளளிக்கப் படாத தொகை (ரூ.) | கேள்விப் பிணை விபரம்: தொகை (ரூ.) | கேள்விப் பிணை விபரம்: தேவைப் படும் காலம் |
| NP/04/42/DGH/ MN/02/05/ 2022-23 /AC/01 | வாயு சீராக்கி பராமரிப்பு சேவை செய்தல் | 2.00 | 01 வருடம் | EM 5 | ரூபா 2500.00 | ரூபா 41,000.00 | 15.11.2022 - 31.01.2023 |
| NP/04/42/DGH/ MN/02/05/ 2022-23 /CAN/02 | சிற்றுண்டிச் சாலை வாடகைக்கு வழங்கல் | 1.20 | 01 வருடம் | | ரூபா 2500.00 | ரூபா 25,000.00 | 15.11.2022 - 31.01.2023 |
| NP/04/42/DGH/ MN/02/05/ 2022-23 /LNDY/03 | அழுக்குத் துணிகள் சலவை செய்தல் | 12.50 | 01 வருடம் | | ரூபா 2500.00 | ரூபா 125,000.00 | 15.11.2022 - 14.02.2023 |
| NP/04/42/DGH/ MN/02/05/ 2022-23 /Airs/04 | மருத்துவ வாயுக்கள் கொள்வனவு செய்தல் | 6.00 | 01 வருடம் | | ரூபா 2500.00 | ரூபா 117,000.00 | 15.11.2022 - 14.02.2023 |

3. கறுப்பு பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தல் வேண்டும். வாயு சீராக்கி பராமரிப்பு சேவை விலைக்கேள்வியாளர்கள் மட்டும் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்திருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் மற்றும் மேலதிக தகவல்கள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர் விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பணிப்பாளர், மாவட்ட ொபது வைத்தியசாலை, மன்னார் (தொலைபேசி இல: 023-2222261 தெலைநகல்: 023-2250748) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை மேலே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரையில் சமர்ப்பித்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அந்நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனையும் செய்யலாம்.
6. விலைக்கேள்விகள் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட வைத்தியசாலை மன்னார் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் 03.11.2022 செவ்வாய்க்கிழமை அன்று மாவட்ட பொது வைத்தியசாலை மன்னார் கணக்குத் கிளையில் பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும்.
8. அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**வைத்திய கலாநிதி ப. திலீபன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மன்னார்.**

---

## நிகவெரட்டிய பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

# 2023ஆம் ஆண்டில் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல்

01. 2023.01.01 முதல் 2023.12.31 வரையான காலத்திற்கு நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப்பிரிவின் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**விண்ணப்பப் படிவங்களை வழங்கல்** — 2022.11.03 முதல் 2022.11.15 அன்று பி.ப. 3.00 வரை
**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி** — 2022.11.16 அன்று மு.ப. 10.30 வரை
**கேள்விகளைத் திறக்கும் திகதி மற்றும் நேரம்** — 2022.11.16 அன்று மு.ப. 10.30 இற்கு
நிகவெரட்டிய பிரதேச சபை அலுவலகத்தில்,

02. கட்டணம் செலுத்தி இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் மாத்திரம் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். படிவக் கட்டணம் ரொக்கப்பணமாக மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.
03. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளாக வழங்கப்படுவதுடன், அவ்விரு பிரதிகளையும் தனித்தனி இரண்டு உறைகளில் சேர்த்து மூலப் பிரதி, நகல் பிரதியெனக் குறிப்பிட்டு ஒரே உறையில் சேர்த்து கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரையிட்டு, “தலைவர், பிரதேச சபை, நிகவெரட்டிய” என்ற முகவரிக்குக் குறித்த நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். கேள்விகளை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
04. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரில் சமுகமளித்து அல்லது 037-2260275 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
05. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் முழுமையான, அதிகாரம் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

| தொடர் இலக்கம் | ஆதனங்கள் | 2022 ஆகக் குறைந்த கேள்வி தொகை ரூபா | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1 | நிகவெரட்டிய பொதுச்சந்தை இலக்கம் 02 மாட்டிறைச்சிக் கடை | 500,000.00 | 5,000.00 | 40,000.00 |
| 2 | நிகவெரட்டிய பொதுச்சந்தை இலக்கம் 05 கடல் மீன் கடை | 180,000.00 | 5,000.00 | 14,400.00 |
| 3 | நிகவெரட்டிய பொதுச்சந்தை இலக்கம் 06 குளத்து மீன் கடை | 181,800.00 | 5,000.00 | 14,544.00 |
| 4 | நிகவெரட்டிய பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 75,000.00 | 5,000.00 | 7,500.00 |
| 5 | வார சந்தை இலக்கம் 08 குளத்து மீன் கடை | 50,000.00 | 5,000.00 | 5,000.00 |
| 6 | நம்முவாவ மாட்டிறைச்சிக் கடை | 105,000.00 | 5,000.00 | 8,400.00 |
| 7 | நிகவெரட்டிய பொதுச்சந்தை மேல் மாடி சிற்றுண்டிச்சாலை | 58,200.00 | 5,000.00 | 5,820.00 |
| 8 | நிகவெரட்டிய பொதுச்சந்தை பன்றி இறைச்சிக் கடை | 140,000.00 | 5,000.00 | 11,200.00 |
| 9 | ரஸ்நாயக்கபுர மீன் தட்டு | 36,000.00 | 5,000.00 | 3,600.00 |

**தலைவர்,**
**எம்.பி.பி. பத்திரண**
**பிரதேச சபை, நிகவெரட்டிய.**

---

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### சுத்தப்படுத்தல் மற்றும் தூய்மைபடுத்தல் சேவை வழங்குதல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சார்பாக, திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் **இல.241, பூங்கா வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் சுத்தப்படுத்தல் மற்றும் தூய்மைப்படுத்தல் சேவையினை வழங்குவதற்கு** தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

அனைத்து மனுதாரர்களும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், பின்வருனவற்றில் சிறந்த அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

i. தேவையான வியாபார பதிவு
நிபுணத்துவம் : சுத்தப்படுத்தல் மற்றும் தூய்மைபடுத்தல் சேவையினை வழகுதல்

ii. தேவைப்படும் அனுபம் : குறைந்தபட்சம் கடந்த 05 வருடங்களில் 03 புகழ்பெற்ற நிறுவனங்களில் பராமரிப்பு சேவை வழங்கியமைக்கான அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை இல-241, பூங்கா வீதி, கொழும்பு 05 தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, உதவி பணிப்பாளர் (கொள்முதல்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், வாரத்தில் **வேலை நாட்களில் 09.00 மணி முதல் மாலை 15.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை பரிசீலனை செய்ய முடியும். (011-2503969)

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.10.25 ஆம் திகதியிலிருந்து 2022.11.14ஆம் திகதி வரை மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப.15.00 மணி** வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,500/-** கட்டணத்தை செலுத்தி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சார்பாக, திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் இல.241, கொழும்பு 05, பூங்கா வீதியில் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **90 நாட்கள்** வரையாகும்.

**2022.11.15** ஆம் திகதி **14.00** முன்னர் கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல-241, பார்க் வீதி, கொழும்பு 05.
**www.ntc.gov.lk**

---

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் விதிகளுக்கமைய இந்த கம்பனிகள் கூட்டிணைக்கப் படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **சயன்டிபிக் ரிசேர்ச் அன்ட் மினரல் எக்ஸ்புளொரேஷன் (பிவீட) எல்டீடி**
பதிவிலக்கம்: PV**00257941**
பதிவு முகவரி: 39/4, ஸ்ரீ சரணங்கர வீதி, தெஹிவளை
கூட்டிணைப்புத் திகதி: **2022 மே 23**

கம்பனியின் பெயர்: **மெகென்சி ஏஜென்சிஸ் (பிவீட) எல்டீடி**
பதிவிலக்கம்: PV**00259013**
பதிவு முகவரி: இல. 700/B, வேவல சந்தி, உந்துகொட வீதி, நவகமுவ, ரனால
கூட்டிணைப்புத் திகதி: **2022 ஜூன் 09**

கம்பனியின் பெயர்: **டிசைன் ரெட்ரோபிட் (பிவீட) எல்டீடி**
பதிவிலக்கம்: PV**00262473**
பதிவு முகவரி: 18/66, எவக்கிறீன் பார்க், கொழும்பு 05
கூட்டிணைப்புத் திகதி: **2022 செப்டம்பர் 1**

கம்பனியின் பெயர்: **சேனக சோலார் (பிவீட) எல்டீடி**
பதிவிலக்கம்: PV**00264844**
பதிவு முகவரி: 212/12, நெலும் பிளேஸ், கலபலுவாவ, ராஜகிரிய
கூட்டிணைப்புத் திகதி: **2022 ஒக்டோபர் 13**

---

## கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை (மே.மா)

# பெறுகை அறிவித்தல்

மேல் மாகாணத்தின் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு பின்வரும் பெறுகை நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- உக்கிப்போகாத திண்மக் கழிவுப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்கான கனரக வாகனங்களை பெற்றுக்கொள்ளல்.
- சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
- திரவ உர உற்பத்திக்காக மீன் பிரித்தெடுப்புகள் 100,000 லீற்றர் கொள்வனவு செய்தல்
- திரவ உரத்திற்கு பிளாஸ்டிக் கேன்கள் மற்றும் லேபள் / ஸ்டிக்கர்களைக் கொள்வனவு செய்தல்
- 50 Kg பொலிசெக் உறைகளைக் கொள்வனவு செய்தல்
- மாதாந்த வாடகை அடிப்படையில் பொதுப் போக்குவரத்துச் சேவைக்காக வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்.

| இல. | உருப்படி | | விபரங்கள் | | எண்ணிக்கை | விலைமனு ஆவணத் தொகுதி |
|---|---|---|---|---|---|---|
| 01. | உக்கிப்போகாத திண்மக் கழிவுப் பொருட்களை போக்குவரத்து செய்தல் | | பிலியந்தலை, கரதியான, மிஹிசது வள முகாமைத்துவ நிலையத்திலிருந்து வத்தளை கெரவலப்பிட்டிய கழிவுப்பொருளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்றிட்டம் வரை உக்கிப்போகாத திண்மக் கழிவுப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக வாடகை அடிப்படையில் கனரக வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் (ஒரு வருட காலத்திற்கு) | | வாகனத்தின் கொள்ளளவு மற்றும் கழிவுப் பொருள் ஏற்றப்படும் அளவைப் பொருத்து எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் | A |
| 02 | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | சீருடைகள் | T-Shirt | Long | 18 | B |
| | | | | Short | 169 | |
| | | | Shirt | Long | 6 | |
| | | | | Short | 4 | |
| | | | Bottom | | 91 | |
| | | | Trouser (Denim) | | 48 | |
| | | பாதுகாப்பு உபகரணங்கள் | கம்பூட்ஸ் | | 25 | C |
| | | | பாதுகாப்புக் காலணிகள் | | 36 | |
| | | | பாதுகாப்பு கையுறைகள் | Soft Rubber | 56 | |
| | | | | Soft Cloth | 214 | |
| | | | | Heavy Rubber | 12 | |
| | | | பாதுகாப்புக் கண்ணாடிகள் | | 30 | |
| | | | மழை மறைப்புகள் | | 24 | |
| | | | குடைகள் | | 7 | |
| | | | மூக்குக் கவசங்கள் (அக்டிவேட்டர் காபன் லேயர் சகிதம்) | | 1248 | |
| 03 | திரவ உர உற்பத்திக்காக மீன் பிரித்தெடுப்புகள் 100,000 லீற்றர் கொள்வனவு செய்தல் | | திரவ உரத்தை பெரும்போக நெற் பயிர்ச்செய்கைக்கு வழங்குவதற்கான வேலைகளை நோக்கமாகக் கொண்டு உர உற்பத்திக்குத் தேவையான மீன் பிரித்தெடுப்புகள் 100,000 லீற்றர் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. | | 100,000 லீற்றர் | D |
| 04 | திரவ உரத்திற்கு பிளாஸ்டிக் கேன்கள் மற்றும் லேபள் / ஸ்டிக்கர்களைக் கொள்வனவு செய்தல் | பிளாஸ்டிக் கேன்கள் | 5 லீற்றர் கேன் (நிறை 205 g +) | | 15,000 | E |
| | | | 2 லீற்றர் கேன் (நிறை 140 g +) | | 30,000 | |
| | | | 1 லீற்றர் கேன் (நிறை 75 g +) | | 30,000 | |
| | | லேபள் / ஸ்டிக்கர்கள் | Label/Sticker For 5L Can | | 15,000 | F |
| | | | Label/Sticker For 2L Can | | 30,000 | |
| | | | Label/Sticker For 1L Can | | 30,000 | |
| 05 | 50 Kg பொலிசெக் உறைகளைக் கொள்வனவு செய்தல் | | அதிகார சபையின் வர்த்தக நாமம் அச்சிடப்பட்ட 50 kg பொலிசெக் உறைளை பெற்றுக்கொள்ளல் | | 40,000 | G |
| 06 | மாதாந்த வாடகை அடிப்படையில் பொதுப் போக்குவரத்துச் சேவைக்காக வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல். | | அதிகார சபையின் பொதுப் போக்கு வரத்துச் சேவை நடவடிக்கைகளுக்காக 08 ஆசனங்களைக் கொண்ட 2008ஆம் வருடம் அல்லது அதற்குப் பின் உற்பத்தி செய்யப்பட்ட வேன் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல் | | ஒரு வருட காலத்திற்கு | H |

இதன் பொருட்டான விபரக் குறிப்புகள் அடங்கிய விலைக்கோரல் ஆவணத் தொகுதிகளை 2022-10-25ஆம் திகதி முதல் 2022-11-08ஆம் திகதி வரையில் பி.ப. 3.00 மணி வரை இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லயில் அமைந்துள்ள மேல் மாகாண சபை கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் அமைந்துள்ள மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையிலிருந்து ஒரு தொகுதிக்கு 2000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கோரல் ஆவணங்கள் சகிதம் பெறுகை ஆவணங்களை முத்திரைக் குறி பொறித்து 2022-11-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட சகல உருப்படிகளுக்குமான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Pre Bid Meeting) கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை அலுவலக வளவில் 2022-11-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

விலைமனுக்கள் 2022-11-09ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையில் (மே.மா) திறக்கப்படும் என்பதுடன் இதில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் (மே.மா),**
**இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 0112092996 / தொலைநகல்: 0112092998**
2022-10-21.

# சுப்பர் 12 சுற்று: முதல் போட்டியில் இலங்கை அணிக்கு அபார வெற்றி

அயர்லாந்துக்கு எதிரான டி20 உலகக் கிண்ணத்தின் தனது முதல் சுப்பர் 12 சுற்றுப் போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டி குழு ஒன்றுக்கான புள்ளிப் பட்டியலில் அதிக நிகர ஓட்ட விகிதத்தைப் பெற்று இரண்டாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டது.

ஹோபார்ட்டில் நேற்று (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் 129 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இலங்கை அணிக்கு குசல் மெண்டிஸ் ஆட்டமிழக்காது 43 பந்துகளில் 68 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஐந்து ஓவர்களை மிச்சம் வைத்து இலக்கை எட்டியது.

இலங்கை அணி உபாதை காரணமாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க இன்றியே நேற்றைய போட்டியில் களமிறங்கியது. எனினும் குசல் மெண்டிசுடன் ஆரம்ப வீரராக வந்த தனஞ்சய டி சில்வா 63 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டதோடு தனிப்பட்ட முறையில் 25 பந்துகளில் 31 ஓட்டங்களை பெற்றார்.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களையே பெற்றது. அதிகபட்சமாக ஹறி டெக்டோர் 42 பந்துகளில் 45 ஓட்டங்களை பெற்றதோடு மூன்று வீரர்கள் மாத்திரமே இரட்டை இலக்கத்தை எட்டினர்.

குறிப்பாக இலங்கை அணி சுழற்பந்து வீச்சாளர்கள் போட்டியில் ஆதிக்கம் செலுத்தினர். மஹீஷ் தீக்ஷன மற்றும் வனிந்து ஹசரங்க இருவரும் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

'போட்டியில் ஆடிய முறை பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவரின் பங்களிப்புடனும் அணி ஒன்றாக ஆட நாம் விரும்புகிறோம்' என்று போட்டிக்குப் பின்னர் இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்க தெரிவித்தார்.

'சுழற்பந்து வீச்சாளர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்பது போட்டிக்கு வரும்போது நாம் தெரிந்திருந்தோம். அந்த உத்தியை நாம் இந்தப் போட்டியில் பயன்படுத்தினோம் இந்த திட்டத்தையே தொடர்ந்து பயன்படுத்த எதிர்பார்க்கிறோம்' என்றும் அவர் கூறினார்.

சுப்பர் 12 சுற்றின் இரு குழுக்களில் இருந்து இரு அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும் என்ற நிலையில் இலங்கை அணி 2.467 நிகர ஓட்ட விகிதத்துடன் இங்கிலாந்துடன் 2 புள்ளிகளை பகிர்ந்துகொண்டபோதும் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. எனினும் நியூசிலாந்து அணியும் 2 புள்ளிகளை பெற்ற நிலையில் அந்த அணி 4.450 நிகர ஓட்ட விகிதத்துடன் முதல் இடத்தில் உள்ளது.

இலங்கை அணி அடுத்து சிட்னி பயணிக்கவுள்ளதோடு நாளை அயர்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி மாலை 4.30க்கு ஆரம்பமாகவுள்ளது.



## கொரோனாவுடன் ஆடிய அயர்லாந்து அணி வீரர்



கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையிலும் இலங்கையுடனான டி20 உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்றுப் போட்டியில் அயர்லாந்து அணியின் சகதுறை வீரர் ஜோர்ஜ் டொரெல் விளையாடியுள்ளார்.

டொக்ரலுக்கு கொவிட் சாத்தியம் உறுதி செய்யப்பட்டதாகவும் உள்ளூர், தேசிய மற்றும் ஐ.சி.சி வழிகாட்டல்களுக்கு அமைவாக அவர் வழிநடத்தப்படுவதாகவும் அயர்லாந்து கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும் அவருக்கு சிறிய நோய் அறிகுறிகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இது பற்றி ஐ.சி.சி தலைமை மருத்துவ அதிகாரியை அயர்லாந்து கிரிக்கெட் சபை அறிவுறுத்தியுள்ளது.

போட்டியில் 6ஆவது வரிசை துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய டொக்ரெல் 16 ஓட்டங்களை பெற்ற நிலையில் மஹீஷ் தீக்ஷனவின் பந்துக்கு ஆட்டமிழந்தார்.

ஐ.சி.சி போட்டி சூழலுக்கு அமைய, எந்த ஒரு வீரரினதும் கொவிட் நிலை மற்றும் போட்டியில் பங்கேற்பது குறித்து உயிரியல் பாதுகாப்பு ஆலோசனைக் குழு இறுதி முடிவை எடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

கொரோனா தொற்றுக்கு உள்ளான வீரர் டி20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பது அல்லது பயிற்சியில் ஈடுபடுவதற்கு தடையில்லை என்றபோதும் நோய் உறுதி செய்யப்பட்ட வீரர் போட்டி மற்றும் பயிற்சியில் தனியாகவே பயணிக்க வேண்டும்.




## இலங்கைக் குழாத்தில் தயார் நிலையில் 3 வீரர்கள் சேர்ப்பு

டி20 உலகக் கிண்ண ஆரம்ப சுற்றுப் போட்டிகளில் ஐந்து வீரர்கள் காயமடைந்த நிலையில் இலங்கை அணியில் மேலும் மேலதிக வீரர்களை சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்திருக்கும் ஐந்து வீரர்களில் டில்ஷான் மதுஷங்க, துஷ்மந்த சமீர மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆகிய மூவரும் உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேறி இருக்கும் நிலையில் மற்றைய இரு வீரர்களான பிரமோத் மதுஷான் மற்றும் பத்தும் நிசங்க சிறு காயத்துடன் அணியில் நீடிக்கின்றனர்.

இலங்கை அணியுடன் பயிற்சி பெறுவதற்காக உயர் செயல்திறன் தலைவர் டிம் மகஸ்கில் உடன் இணைந்து



விக்கெட் காப்பாளர் நிரோஷன் திக்வெல்ல, வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ மற்றும் மதீஷ் பத்திரன ஆகியோர் அவுஸ்திரேலியா பயணிப்பதாக கூறப்படுகிறது.

அவசர சூழலில் இவர்களை அணியில் பயன்படுத்துவதற்கு தயார் நிலையில் வைக்கப்படுவதாக இது தொடர்பில் அறிந்த வட்டாரம் மூலம் தெரிய வருகிறது.

கடந்த 2021 ஜூன் தொடக்கம் டி20 சர்வதேச போட்டிகளில் திக்வல்ல இலங்கை அணியில் இடம்பெறாத நிலையில் குசல் மெண்டிஸ் தற்போது விக்கெட் காப்பாளராக செயற்பட்டு வருகிறார்.

19 வயதான பத்திரன ஆசிய கிண்ணத்தில் ஆப்கானுக்கு எதிரான போட்டியில் முதல் முறை களமிறங்கியபோதும் சோபிக்கத் தவறியிருந்தார். பெர்னாண்டோ ஆசிய கிண்ணத் தொடருக்கான இலங்கை குழாத்தில் இடம்பெற்றபோதும், உலகக் கிண்ணத்திற்கான குழாத்தில் இடம்பெறத் தவறினார்.



பதுளை வின்சன்டயஸ் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் ஊவா மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 18 வயதுக்குட்பட்ட 400 மீற்றர் தடைதாண்டி ஓட்டப்போட்டியில் முதலாம் இடம் பெற்ற பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலை மாணவன் வை. துலக்ஷாந்த் பதக்கம் பெறுவதை படத்தில் காணலாம். (படம்: லுணுகல நிருபர்)

## ஸஹிரியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடர் ஆரம்பம்

***கல்முனை மத்திய தினகரன் நிருபர்***



கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் அமைப்பான, ஸஹிரியன் பழைய மாணவர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மெற்ரோபொலிடன் ஸஹிரியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகியது. ஸாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து 29 அணிகள் பங்கு கொள்ளும் 07 ஓவர்கள் கொண்ட இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது. இந்த ஆரம்ப நிகழ்விற்கு, பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெற்றோபொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப், ,கௌரவ அதிதியாக சாய்ந்தமருது கோட்டக் கல்வி அதிகாரி என்.எம். மலிக், விசேட அதிதியாக முன்னாள் அதிபர் முஹம்மத் உட்பட ஏற்பாட்டுக் குழுவினர்களும் கலந்து கொண்டனர்.

## கொஹ்லியின் அசுர ஆட்டத்தால் இந்திய அணிக்கு 'த்ரில்' வெற்றி

விராட் கொஹ்லியின் அசுர ஆட்டத்தால் பாகிஸ்தானுக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்றுப் போட்டியில் இந்திய அணி நான்கு விக்கெட்டுகளால் த்ரில் வெற்றியை பெற்றது.

சுமார் ஒரு இலட்சம் ரசிகர்கள் அரங்கில் கூடியிருக்க மெல்போர்ன் மைதானத்தில் நேற்று (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் 160 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இந்திய அணி கடைசி இரண்டு ஓவர்களுக்கும் 31 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தது.

இதன்போது ஹரீஸ் ரவுப் வீசிய 19 ஆவது ஓவரின் கடைசி இரண்டு பந்துகளுக்கும் சிக்ஸர் விளாசிய கொஹ்லி கடைசி மூன்று பந்துகளுக்கு 13 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தபோது மற்றொரு சிக்ஸரை விளாசினார்.

இதன்போது இந்திய அணி கடைசி ஓவருக்கு 16 ஓட்டங்களை பெற வேண்டியபோது பந்துவிசிய சுழற்பந்து வீச்சாளர் முஹமது நவாஸ் இரு வைட் பந்துகளையும் ஒரு நோபோலையும் வீசி இந்திய அணியின் நெருக்கடியை தணித்தார்.

இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. அபாரமாக துடுப்பெடுத்தடிய கொஹ்லி 53 பந்துகளில் 6 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களை பெற்றார்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பாகிஸ்தான் அணி 15 ஓட்டங்களுக்கே முதல் இரு விக்கெட்டுகளையும் பறிகொடுத்து தடுமாறியது.



எனினும் அடுத்து வந்த ஷான் மசூத் மற்றும் இப்திகார் அஹமட் இருவரும் 3ஆவது விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டு அணியின் ஓட்டங்களை வலுப்படுத்தினர்.

இதில் மசூத் ஆட்டமிழக்காது 42 பந்துகளில் 52 ஓட்டங்களை பெற்றதோடு அஹமட் 34 பந்துகளில் 51 ஓட்டங்களை விளாசினார். குறிப்பாக பாகிஸ்தான் அணி கடைசி பத்து ஓவர்களுக்கும் 99 ஓட்டங்களை பெற்றது. இதன்மூலம் பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களை குவித்தது. இதன்போது இந்திய அணியின் அர்ஷ்தீப் சிங் மற்றும் ஹர்தீப் பாண்டியா தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த இந்திய அணி ஆரம்பத்திலேயே அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. ஆரம்ப வீரர்களான கே.எல் ராகும் மற்றும் அணித்தலைவர் ரோஹித் ஷர்மா தலா 4 ஓட்டங்களில் வெளியேறியதோடு பின்னர் வந்த சூர்யகுமார் யாதவ் 15 ஓட்டங்களை பெற்றதோடு அக்சார் படேல் அனாவசியமாக 2 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார். எனினும் 5ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த விராட் கொஹ்லி மற்றும் ஹார்திக் பாண்டியா 113 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்துகொண்டு இந்திய அணியின் வெற்றியை உறுதி செய்ய உதவினர்.

# சர்வதேச செய்திகள்

## சீனாவின் சக்திமிக்க தலைவராக ஷி மூன்றாம் தவணைக்கு தேர்வு

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தனது அதிகாரத்தை பலப்படுத்தும் வகையில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக மூன்றாவது தவணைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் மாவோ சேதுங்கிற்கு பின் நாட்டின் செல்வாக்குமிக்க தலைவராக அவர் மாறியுள்ளார்.

சீன கட்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே ஷி மற்றொரு தவணைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் அவர் மூன்றாவது தவணைக்காக சீன ஜனாதிபதியாக பதவி ஏற்பது உறுதியாகியுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள அரசின் வருடாந்த சட்டமன்ற அமர்வில் இது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.



சீனாவில் ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் கட்சி மாநாடு கடந்த சனிக்கிழமை (22) நிறைவடைந்தது. இதில் ஏழு பேர் கொண்ட சக்தி வாய்ந்த உச்சமன்றத்தில் யார் அங்கம் வகிப்பார்கள் என்பது முக்கிய கேள்வியாக இருந்தது.

ஷங்ஹாய் நகரின் கட்சித் தலைவராக முன்னர் செயல்பட்ட லி சியாங் கட்சியின் இரண்டாவது உயரிய பதவிக்கு உயர்வு பெற்றுள்ளார். அவர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பிரதமராக அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.பிரதமர் லீ கச்சியாங்கும் 68 வயதை எட்டிய மூத்த தலைவர்கள் பலரும் ஓய்வு பெற்றனர். 69 வயது ஜனாதிபதி ஷி ஜின்பிங் சீன வரலாற்றில் மிக வலிமை மிக்க தலைவர்களில் ஒருவராகத் தொடர்ந்து நீடிப்பார். சீனப் புரட்சியின் தலைவரும், முதல் ஜனாதிபதியுமான மாவோ சேதுங் காலத்துக்குப் பின்னர் எவரும் தொடர்ந்து மூன்று முறை ஜனாதிபதியாக இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இத்தாலியின் முதல் பெண் பிரதமரானார் மெலோனி



நவ பாசிச பின்புலத்தைக் கொண்ட இத்தாலி சகோரர்கள் கட்சியின் தலைவர் கியோர்கியா மெலோனி, இரண்டாம் உலகப் போருக்குப் பின் இத்தாலியின் முதல் தீவிர வலதுசாரி பிரதமராக பதவி ஏற்றார். இத்தாலியின் முதல் பெண் பிரதமராகவே அவர் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி செர்கியோ மெட்டரெல்லா முன் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். ஒரு நாளைக்கு முன்னரே அவருக்கு அரசு அமைக்கும்படி ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். 2012 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சகோதரர்கள் கட்சி, வலதுசாரி லிகா கட்சி மற்றும் பழைமைவாத போர்சா இத்தாலி கட்சியுடன் கூட்டணி சேர்ந்துள்ளது. எனினும் முக்கிய அமைச்சர்களை பகிர்ந்து கொள்வதில் கூட்டணி கட்சிக்குள் முறுகல் நீடித்து வந்த நிலையிலேயே புதிய ஆட்சி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மெலோனி தனது தேர்தல் பிரசாரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் குடியேற்றவாசிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. உக்ரைன் போரினால் நாட்டில் பணவீக்கம் அதிகரித்து வலு சக்தி பிரச்சினை தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் புதிய அரசு நாட்டில் அதிரடி மாற்றங்களை செய்வது கடினம் என்று கூறப்படுகிறது. சகோதரர்கள் கட்சி கடந்த செப்டெம்பர் பிற்பகுதியில் நடந்த பொதுத் தேர்தலில் 25 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைக் கைப்பற்றி வெற்றியீட்டி இருந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.